பூஞ்சோலை

கௌரவ ஆசிரியர் : அழ. வள்ளியப்பா



621

அணா 4

நவம்பர்-1953



நான்காவது குழந்தைப் புத்தகக் காட்சியைத் திறந்து வைத்தார் மந்திரி கனம் **ஸி. சுப்பிரமணியம்.** அவருடைய அருமைக் குழந்தைகள் இருவரும் கையெழுத்துப் புத்தகம் ஒன்றில் கருத்தைச் செலுத்துகின்றனர்.



காட்சியில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்ட எழுத்தாளரில் சிலர்.

பூஞ்சோலை

மலர் 3	1, நவம்பர், 1953	இதழ் 8

பொருளடக்கம்

செய்தி கேளுங்கள் !	...	2
டாக்டர் மகன்	...	3
14 அணுவில் படிப்பை முடித்தவர் !	...	10
வம்புத் தம்பி	...	14
எலிப் படை	...	15
பிச்சைக்காரன்	...	17
சுரங்கத்தில் வேலை	...	26
கரு நாகம்	...	30
ஜோடி பங்களா	...	33
தங்க வளையல்	...	38
தீபாவளி ஜோஸ்யம்	...	42
புரசையில் புத்தகக் காட்சி	...	49
ஐயோ, பரிசு !	...	54
கடிகாரப் பயம் !	...	70
தம்பிப் பாப்பா	...	71
சூழ்ச்சி பலிக்கவில்லை	...	76

பெயர் : ....

தெரு : ....

ஊர் ....

ஜில்லா ....

செய்தி கேளுங்கள்!

மலை ஏறும் கலை

மலை ஏறும் கலையைப் பயில்வதற்காக டார்ஜிலிங்கில் ஒரு சங்கம் ஏற்படுத்தப் போகிறார்களாம். அடுத்த குடியரசு தினத்தன்று அச் சங்கம் திறந்து வைக்கப்படுமாம். அதற்கு நேருஜி தலைவராக இருப்பார் என்று கூறப்படுகிறது.

மாணவர் குடிமைப் பயிற்சி

சென்ற மாதக் கடைசியில் சென்னை இராயப்பேட்டை வெஸ்லி உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கல்வி வாரக் கொண்டாட்டத்தில், சுமார் 1000 மாணவ மாணவிகள் பல குடிமைப் பயிற்சிக் காட்சிகளை அற்புதமாக நடத்திக் காட்டினார்கள். சென்னையில் மொத்தம் 85 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 28 பள்ளி மர்ணவ மாணவிகள் இக் காட்சியில் கலந்து கொண்டனர்.

மகாத்மா காந்தி மண்டபம்

கிண்டியிலுள்ள கவர்னர் மாளிகையான ராஜபவனத்தில் அக்டோபர் 17-ந் தேதியன்று மகாத்மா காந்தி ஞாபகார்த்த மண்டபத்தின் அஸ்திவாரக் கல்லை கவர்னர் ஸ்ரீ. ஸ்ரீபிரகாசா நாட்டினார். இந்த மண்டபத்தைக் கட்டி முடிக்க சுமார் மூன்றரை லட்சம் ரூபாய் செலவாகுமெனத் தெரிகிறது.

குட்டி ராட்டினம்

சட்டைப் பைக்குள் வைத்துக்கொள்ளக்கூடிய அளவில் குட்டி ராட்டினம் ஒன்றை திருவாங்கூர்— கொச்சியைச் சேர்ந்த ஜே. குரியன் என்பவர் கண்டு பிடித்திருக்கிறார். பெரிய ராட்டினத்தில் நூற்பதைக் காட்டிலும் இதில் இருமடங்கு அதிகம் நூல் நூற்கலாமாம்!

துப்பறியும் நாய்கள்

சென்னையில் இரவு நேரங்களில் போலீஸாருடன் ரோந்து சுற்றுவதற்காக சில துப்பறியும் நாய்களை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த நாய்கள் நன்கு பயிற்சி பெற்றிருக்கின்றன. திருடர்களைப் பிடிக்கவும், கள்ளச் சாராயம் வைத்திருக்கும் இடங்களைக் கண்டு பிடிக்கவும் அந்த நாய்கள் மிகவும் உதவி வருகின்றன.

டாக்டர் மகன்

எஸ். கணபதி

1

மாலை நேரம். கதிரவன் தன் பொன்போன்ற கிரணங்களைப் பரப்பிக் கொண்டிருக்கிறான்.

மாம்பலத்தில் ஓர் அழகிய பங்களா. பங்களாவின் முன்புறத்தில் ஓர் அழகிய தோட்டம். தோட்டத்தின் நடுவே வளைந்து வளைந்து செல்லும் சுமார் இரண்டு பர்லாங் தூரமுள்ள ஒரு பாதை. அப்பாதையில் ஒருமோட்டார் தாராளமாகச் செல்லமுடியும். பாதையின் இரு பக்கங்களிலும் பல மரங்கள். அந்த மரங்களைச் சுற்றிப் பல புஷ்பக் கொடிகள். அப்பிரதேசமே ரமணீயமாய்க் காட்சியளிக்கின்றது.

பங்களாவிலிருந்து புறப்படும் பாதையானது இவ்வனப்பு வாய்ந்த பிரதேசத்தைக் கடந்து, 'காம்பவுண்டு'ச்சுவர்கள் சந்திக்கும் 'கேட்' அருகில் முடிவடைகிறது. 'கேட்'டின், வெளிப்புறத்தில் 'பிரபாகரன். எம். பி. பி. எஸ்' என்ற 'போர்டு' ஒன்று தொங்குகிறது.

'கேட்'டிற்கு எதிர்ப்புறம் ஒரு பெரிய மைதானம். இங்கே தினந்தோறும் ஏராளமான சிறுவர்சிறுமியர் விளையாடுகின்றனர்! மைதானத்தின் ஆரம்பத்திலேயே சில சிறுவர்கள் 'கிரிக்கெட்' விளையாடுகின்றனர்.

பச்சை நிறமுள்ள 'கௌண்டி கேப்'பைத் தலையில் அணிந்து, நீல நிற 'ஸாக்ஸ்'கள் போட்டுள்ள தன் கால்களைச் சேர்த்து, முதுகைச் சற்று வளைத்து, ஜோராக 'பாட்' செய்யப்போகும் அச் சிறுவனைப் பாருங்கள். அவன்தான் சுந்தர். 'பௌல்' செய்யும் கோபுவின் சுழல் பந்துகளுக்குச் சிறிதும் அஞ்சாமல், ஒவ்வொரு பந்தையும் அனாயாசமாகத் திருப்பும் அவன்தான் மாம்பலத்தில் பிரபல டாக்டராக விளங்கும் பிரபாகரின் ஏக புதல்வனான சுந்தர்.

2

ஆட்டம் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருக்கும் போது, "ஐயோ! அம்மா!" என்று வீறிட்டு அலறும் குரல் கேட்டது. உடனே, சுந்தர் ஆட்டத்தை நிறுத்தி விட்டு, குரல் வந்த திசையை நோக்கினான்.

அங்கே அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது.

ஓர் ஏழைப் பையனை ஒரு வெறி பிடித்த நாய் கடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பையன் வலி பொறுக்கமாட்டாமல், துடிதுடித்து அலறினான். ஆயினும், நாய் கடியை விடவில்லை.

அட்டைப்படக் கதை

அவன் காலிலிருந்து இரத்தம் 'கொடகொட' வென்று கொட்டிக் கொண்டிருந்தது. உதவி செய்ய யாருமே முன்வரவில்லை.

இந்தக் காட்சியைக் கண்டதும், சுந்தர் தன் நண்பர்களுடன் நாயின் அருகே ஓடிவந்தான். அதட்டிக் கொண்டே கையிலிருந்த 'பாட்' டால் நாயை அடிக்க ஓங்கினான். நாய் சுந்தரையும், அவன் கையிலிருந்த ஆயுதத்தையும், கூட வந்த நாலைந்து பையன்களையும் கண்டதும் தன் கடியை விட்டது. ஆனாலும், அது உடனே ஓடிவிடவில்லை. சுந்தர் பக்கம் திரும்பி 'உர்'என்று தன் கோரப் பற்களைக் காட்டி உறுமியது.

சுந்தர் பயப்பட வில்லை. 'சீ, போகிறாயா, என்ன?' என்று கேட்டுக் கொண்டே 'பாட்'டை ஓங்கி அதன் தலையை நோக்கிக் குறிவைத்தான். ஆனால், நாய்க்கு அவ்வளவு துணிச்சல் இல்லை. பேசாமல், ஓடி மறைந்துவிட்டது.

பிறகு, சுந்தர் அந்த ஏழைப் பையனின் காலில் வழிந்த இரத்தத்தைத் தன் கைக்குட்டையால் துடைத்தான். என்னதான் துடைத்தாலும், இரத்தம் வருவது நிற்கவில்லை. உடனே, தன் சட்டையை எடுத்து அந்தக் காயத்தைச் சுற்றிக் கட்டினான். பிறகு, "தம்பி, நீ என்னுடன் வா. வீட்டிற்குப் போவோம். மருந்து போட்டு விடுகிறேன்" என்று அவனைக் கைத் தாங்கலாக பங்களாவுக்குள் அழைத்துச் சென்றான். கம்பவுண்டர், அப்பொழுதுதான் சீட்டியடித்தவாறு 'டிஸ்பென்ஸரி' யிலிருந்து கிளம்பிக் கொண்டிருந்தார். சுந்தரையும் அச்சிறுவனையும் ஒருதரம் முறைத்துப் பார்த்துவிட்டு அவர் போய்விட்டார்.

சுந்தர் ஒரு கணம் யோசித்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவன் போல், அப்பையனை அருகிலிருந்த கட்டிலில் படுக்கச்செய்து, காயங்களைச் சுத்தப் படுத்தினான். பிறகு மருந்து போட்டுக் கட்டுக் கட்டினான். அப்புறம் நாய் கடிக்கு அப்பா என்ன ஊசி போடுவார் என்று தெரிந்து வைத்திருந்ததால் ஓர் ஊசியும் போட்டான். அவன் ஊசி போட்டு முடிப்பதற்கும், வெளியே 'பாம், பாம்' என்ற மோட்டாரின் சப்தம் கேட்பதற்கும் சரியாயிருந்தது.

காரிலிருந்து இறங்கிய டாக்டர் பிரபாகரன் டக் டக் என்று பூட்ஸ் சப்தம் ஒலிக்க 'டிஸ்பென்ஸரி' யில் நுழைந்தார். சுந்தரையும், கட்டிலில் படுத்திருக்கும் சிறுவனையும் கண்ட அவர் முகம் கோபத்தால் சிவந்தது. மீசை துடித்தது. கண்கள் முறைத்துப் பார்த்தன.

அவரைக் கண்டதும் அந்த ஏழைச் சிறுவன் கட்டிலிலிருந்து விருட்டென்று எழுந்துஉட்கார்ந்து 'திருதிரு' வென்று விழித்தான்.

"சுந்தர், வைத்தியத் தொழிலைக் கொஞ்சம் கொஞ்சம் கற்றுக் கொடுத்திருக்கும்போதே நீ இப்படியெல்லாம் இஷ்டம் போலச் செய்கிறாயே! முழுவதையும் கற்றுக் கொண்டுவிட்டால், அப்புறம் என்ன செய்வாயென்றே தெரியவில்லை...சுந்தர்! நீ இன்னும் என்னை நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை. காசைக் கொட்டிக் கஷ்

டப்பட்டுச் சேர்க்கும் மருந்துகளைக் கண்டபடி கரியாக்குகிறாயே! ஒரு நாய்கடி ஊசி என்ன செலவாகிறதென்று தெரியுமாடா உனக்கு! இதைப் போலப் பறைப் பயல்களை வீட்டிற்கு அழைத்து வராதே என்று எத்தனை தரம் உனக்குச் இங்கே அழைத்து வந்தாயோ, கால் முறிந்து விடும்! ஜாக்கிரதை!" என்று நெருப்பைக் கக்குவது போல் ஆர்ப்பரித்தார் அப்பா.

அத்துடன்விடவில்லை; "பறைப் பயலே, வெளியேறடா!" என்று கூவிக்கொண்டே அந்த ஏழைச்



சொல்கிறது? நீ என்ன இலவசமாக 'டிஸ்பென்ஸரி' வைத்திருக்கிறாயா, கண்டபடி தானம் பண்ண? சுந்தர்..., இது தான் கடைசித் தடவை. இனிமேல் இப்படிக் கண்ட கண்ட பயல்களை யெல்லாம் சிறுவனைக் கட்டிலிலிருந்து கீழே இறக்கி, காதைப் பிடித்து வெளியே கொண்டு போய், பூட்ஸ் காலால் உதைத்துத் தள்ளினார் பிரபாகரன்.

மெதுவாகச் சமாளித்துக்

கொண்டு எழுந்த அவன், சுந்தரைக் கண்ணீர் நிறைந்த கண்களால் ஒரு முறை நன்றியுடன் பார்த்து விட்டு, நொண்டிக் கொண்டே நடந்து சென்றான். சுந்தர் அன்றிரவு சாப்பிடாமலேயே போய்ப் படுக்கையில் விழுந்தான். இரவு முழுவதும், அவன் கண்முன்னே அந்த ஏழைச் சிறுவனின் உருவம் காட்சியளித்தது.

3

வாழ்க்கையில் முன்னேறிப் பெரிய மனிதராக—பெரிய பணக்காரராக வேண்டும் என்ற நோக்கத்தை உடையவர் டாக்டர் பிரபாகரன். பணக்காரர்களிடையேதான் பழகுவார் அவர். பணம் படைத்தவர்களுக்குத்தான் வைத்தியம் செய்வார். வைத்தியம் செய்வதற்கு முன்பே 'பீஸ் எவ்வளவு கொடுப்பீர்கள்' என்றுதான் கேட்பார். ஏழைகள் எப்படிப் போனாலும் அவருக்கு அக்கறை இல்லை. அவர்கள் 'டிஸ்பென்ஸரி'ப் பக்கம் வந்தாலே சீறி விழுவார்.

அப்பாவுக்கு நேர்மாறான குணம் உடையவன் மகன் சுந்தர். அன்பே உருவானவன். அப்பாவின் சுயநலத்தை வெறுப்பவன். அப்பாவுக்குத் தெரியாமல் ஏழைச் சிறுவர் சிறுமியர்க்குத் தன்னாலான உதவியைச் செய்வதும், பிறகு அவரிடம் அடிபடுவதும் சுந்தருக்கு சர்வ சகஜம். இதற்காக அவன் சிறிதும் மனம் தளரவில்லை. அவனுடைய ஒரே முயற்சி அப்பாவின் மனப்போக்கை மாற்ற வேண்டும் என்பதுதான்.

நாய் கடித்த அந்தப் பையனுடைய வீட்டைத் தன் நண்பர்கள் மூலம் கண்டுபிடித்து, தினமும் ஒரு கைப்பெட்டியில் மருந்து, ஊசி முதலியவற்றை எடுத்துக் கொண்டு, அவன் வீட்டிற்குச்சென்று அப்பாவுக்குத் தெரியாமல் அவனைக் கவனித்துவந்தான். சுந்தருடைய கவனிப்பும், அன்பும் அவனை நாளுக்கு நாள் குணப்படுத்தி வந்தன. சுந்தருடைய கருணை உள்ளத்தையும், அவன் அப்பா பிரபாகரரின் கல் நெஞ்சத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துப் பார்த்து அச்சிறுவன் வியப்படைவான்.

4

கடைசி ஊசி போட்டுவிட்டு அப்பா வருவதற்குள் வந்துவிடலாம் என்று புறப்பட்ட சுந்தர், 'கேட்'டை அடைவதற்குள், பிரபாகரன் எதிர்பாராதவிதமாக அன்று சீக்கிரமே திரும்பிவிட்டார். அவர் வரும் மோட்டார் சப்தம் கேட்டதுமே சுந்தர், தன் கையிலிருந்த மருந்துப் பெட்டியை அருகிலிருந்த ஒரு மரத்திற்குப் பின்னால் மறைத்து வைத்துவிட்டுப் பாதை ஓரமாக ஒதுங்கி நின்றான். கார் சென்ற பிறகு, பெட்டியை ஜாக்கிரதையாக அங்கேயே மறைத்து வைத்துவிட்டு, பங்களாவுக்கு ஓடோடியும் சென்றான்.

தலையைக் காட்டிவிட்டுத் திரும்பிவிடலாம் என்பதே அவன் எண்ணம். ஆனால், டாக்டர் பிரபாகரன் அவனுக்குப் பல சில்லறை வேலைகளைக் கொடுத்துக் கொண்டேயிருந்தார். தட்டிச்சொல்ல வழியில்லாததால் அவசர அவசரமாக அவர் கொடுத்த வேலைகளைச் செய்தான். அப்படி

யும், சாப்பாட்டு நேரம் வந்துவிட்டது. அப்பாவுடன் சாப்பிட்டு விட்டுப் படுக்கைக்குப் போனான். படுக்கையில் படுத்த சுந்தருக்கு அன்றிரவு தூக்கமே வரவில்லை. அப் பையனுக்குக் கடைசி ஊசி போடமுடியாமல் போய்விட்டதே என்று எண்ணிஎண்ணி ஏங்கினான்.

'டாண், டாண், டாண்' என்று மணி 12 அடித்தது. அப்பா, அம்மா எல்லோரும் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். படுக்கையிலிருந்து மெதுவாக எழுந்தான், சுந்தர். தன்னுடைய 'டார்ச்' விளக்கை எடுத்துக்கொண்டு மெதுவாக அங்கிருந்து சப்தம் செய்யாமல் நழுவினான். பங்களாவுக்கு வெளியே வந்த சுந்தர் ஓட்டோடியும் சென்று, தான் மறைத்து வைத்திருந்த பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு வேகமாக நடந்தான். பூட்டியிருந்த 'கேட்'டின்மேல் ஏறி வெளியில் குதித்தான்.

அப்போது ஒரே பேய்க் காற்று! மரங்கள் எல்லாம் 'உஸ் உஸ்' என்ற சத்தத்துடன் பேயாட்டம் போட்டுக்கொண்டிருந்தன. வானத்தில் ஒரே கருமேகக் கூட்டங்கள். எங்கோ ஓரிரண்டு நட்சத்திரங்கள் மட்டும் 'மினுக் மினுக்'என்று பிரகாசித்துக்கொண்டிருந்தன.

மழை வருவது நிச்சயம் என்றுணர்ந்த சுந்தர், 'டார்ச்' விளக்கின் உதவியால் இருளை அகற்றிக்கொண்டு ஓட்டமும் நடையுமாக அப் பையனின் வீட்டையடைந்தான். அவனுக்கு சிகிச்சை செய்து முடித்தான்.

"மழை வரும்போலிருக்கிறதே; நீ எப்படி வீட்டுக்குப் போவாய்?" என்று கேட்டான் அப் பையன்.

"அப்பாதேடுவார்; ஓடியேபோய் விடுவேன்" என்று சொல்லிக் கொண்டே விடை பெற்றுக் கொண்டு ஓடஆரம்பித்தான் சுந்தர்.

சிறிது தூரம் சென்றிருப்பான். 'கடகடா' 'டகடகா'என்று வானம் குமுறியது. 'பளிச் பளிச்' என்று கொடி மின்னல் வானத்தைக்கிழித்தது. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பயத்துடன் ஓடினான் சுந்தர். அவன் இருதயம் படபடத்தது. 'சோ'வென்று மழைபெய்ய ஆரம்பித்தது.

மறுபடியும் 'கடகடா, கடகடா' என்று இடித்தது வானம். ஆகாயமே இடிந்து தன் தலையில் விழுந்துவிட்டதோ என்று அஞ்சினான் சுந்தர். அவனுக்கு ஓடவே தோன்றவில்லை.

ஒரு மரத்தடியில்நிற்கலாம்என்று நினைத்த அவனுக்கு 'இடி இடிக்கும்பொழுது மரத்தடியில் நிற்கக் கூடாது' என்று படித்தது ஞாபகத்துக்கு வந்தது. எனவே பைத்தியம் பிடித்தவன்போல் ஓடினான். வேறு வழி? மழையோ கொட்டு கொட்டென்று கொட்டியது. சுந்தருடைய சட்டை நிஜார் எல்லாம் நன்றாக நனைந்துவிட்டன. மலையிலிருந்து கொட்டும் அருவிபோல, அவன்தலையிலிருந்து தண்ணீர் வழிந்தது. மின்னல்கண்ணைப் பறித்தது.மறுபடியும் 'கடகடா' சப்தம்! எப்படியோ ஓடி பங்களா 'கேட்'டை அடைந்துவிட்டான். அதைத் தாண்டிக் குதிக்கவேண்டுமே! 'கேட்'டின்மீது மெதுவாக ஏறிய அவன் நிலைதவறிக் குதித்துவிட்டான். டார்ச் 'படீர்'

என்று உடைந்தது. ஒரே இருள். சுந்தரின் தலை கல்லில் முட்டி 'குபு குபு'வென்று இரத்தம் பாய்ந்து ஓடியது! பிரக்ஞை இழந்து மரக் கட்டையைப்போல் கிடந்தான் சுந்தர்.

5

ஜன்னல்கள் காற்றினால் 'படார் படார்'' என்று அடித்துக்கொண்ட சப்தம் கேட்டு எழுந்த பிரபாகரன் சுந்தரத்தைக் காணாமல் திகைத்துத் தமது மனைவியையும் எழுப்பினார். அந்த அம்மா வெளியே மழை கொட்டுவதைப் பார்த்துவிட்டு ''இந்த மழையிலே சுந்தர் எங்கே போயிருப்பான்?'' என்று அலறினாள்.

அப்பா உடனே வேலைக்காரர்களையெல்லாம் எழுப்பினார். பங்களா முழுவதிலும் தேடுதேடென்று தேடினார்கள். அம்மாவோ 'ஓ' வென்று அழுதாள். பங்களா அல்லோலகல்லோலப்பட்டது!

பிறகு ஆளுக்கொரு குடையையும் 'டார்ச்' விளக்கையும் எடுத்துக் கொண்டு தோட்டத்துப் பக்கம் தேடலானார்கள். முன்னே சென்ற அப்பா 'கேட்'டருகில் வந்தார். அங்கே அவர் கண்ட காட்சி அவரை மயிர்க் கூச்செறியச் செய்தது. அம்மா அப்படியே சிலையாக நின்றாள்!

மறுகணம், சுந்தரைத் தோள்மேல் அப்படியே வாரிப் போட்டுக் கொண்டாள். எல்லோரும் பங்களாவை அடைந்தனர். சுந்தர் ஒரு கட்டிலில்கிடத்தப்பட்டான். அப்பா அம்மா மற்றவர் எல்லோரும் கட்டிலைச் சுற்றி நின்றனர். அப்பா அவனுக்குப் பிரக்ஞை வர என்னென்னவோ செய்தார்!

விடியற்காலை சுமார், நான்கு மணிக்கு, சுந்தர் கண்களை விழித்துப் பார்த்தான். அம்மா சுந்தரை அப்படியே கட்டிக்கொண்டாள். அப்பாவின் கல்நெஞ்சமும் கரைந்தது.

''அப்பா, அம்மா, அழாதீர்கள்! நான் அந்த ஏழைப் பையனைக் காப்பாற்றவே இரவில் சென்றேன். என் வாழ்வு இன்னும் சில நிமிஷங்கள்தான்! அப்பா, நான், நல்ல காரியத்துக்காக உயிர் விடுகிறேன். அதனால் நான் வருத்தப்படவில்லை; ஆனால், என் வேண்டுகோள் ஒன்றே ஒன்றுதான். அதை நீங்கள் நிறைவேற்ற வேண்டும்; அப்போதுதான் என் ஆத்மா சாந்தியடையும்'' என்று சுந்தர் விக்கி விக்கிக் கூறினான்!

''ஐயோ! அப்படிச் சொல்லாதேடா கண்ணே. நீ என்ன வேண்டுமானாலும் கேள். நான் நிறைவேற்றத் தயாராயிருக்கிறேன்'' என்று தேம்பிக்கொண்டே கூறினார், அப்பா. ''அப்பா, ஏழைகளிடம் அன்பு பாராட்டுங்கள்; அவர்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்யுங்கள். அவர்கள் நல்வாழ்வே நம் ஆனந்த வாழ்வு. அவர்கள் இன்பமே நமது இன்பம்'' என்றான், சுந்தர்.

இதை அவன் சொல்லும்போதே, அப்பாவின் கண்கள் கலங்கின. அம்மா 'ஓ'வென்று அவன் மேல் விழுந்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

''சுந்தர், என் கல்மனம் கரைந்துவிட்டது. இனி ஏழைகளுக்கே என் வாழ் நாளைச் செலவிடுவேன். இது

குழந்தை எழுத்தாளர் சங்கம்

சிறுகதைப் போட்டி முடிவு

முதல் பரிசுக் கதை : **பிச்சைக்காரன்**
எழுதியவர் : **அழகரசன்**
தாதகாப்பட்டி, சேலம் ஜில்லா.

இரண்டாம் பரிசுக் கதை : **வெகுமதி**
எழுதியவர் : **குளிகன்**
வாழவல்லான், ஸ்ரீவைகுண்டம் தாலுகா.

மூன்றும் பரிசுக் கதை : **ஆனந்தத் தீபாவளி**
எழுதியவர் : **S. சங்கரநாராயணன்**
46, காக்காத் தோப்புத் தெரு, மதுரை.

முதல் பரிசுபெற்ற அழகரசன் நேரிலே வந்து நிதிமந்திரி வழங்கிய வெள்ளித் தட்டைப் பெற்றுக்கொண்டார். குளிகனும், சங்கரநாராயணனும் நேரில் வராததால் அவர்களின் சார்பாக சங்கக் காரியதரிசி முறையே வெள்ளிக் கோப்பையையும், காரம்போர்டையும் பெற்றுக் கொண்டார். பரிசுகள் உரியவர்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டன. போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் குழந்தை எழுத்தாளர் சங்கம் தன் நன்றியைத் தெரிவிக்கிறது

சத்தியம்'' என்று கூறிக்கொண்டே சுந்தரைப் பார்த்தார் அப்பா.

அதற்குள், கம்பவுண்டர் வேலைக்கு வந்துவிட்டார். விஷயத்தை அறிந்த அவர், "டாக்டர் சார், புதிதாக ஓர் ஊசி மருந்து வந்திருக்கிறதே, அதைப்போட்டுப் பார்த்தால் நிச்சயம் சுந்தர்பிழைத்து விடுவான்'' என்றார்.

டாக்டருக்கு அப்போதுதான், தான் ஒரு டாக்டர் என்ற நினைவே வந்தது. "ஆமாம், எடு அந்த ஊசி மருந்தை'' என்றார். உடனே, அந்த மருந்து ஊசி மூலம் உடம்பில் செலுத்தப்பட்டது.

மாலை மணி நாலு இருக்கும்.

"அம்மா'' என்றான், சுந்தர்.

"என்னடா என் கண்ணே'' என்றாள், அம்மா. "சுந்தர், என்ன வேண்டும்?'' என்றார் அப்பா.

"எனக்கு வேண்டியதைத்தான் நீங்கள் செய்வதாக சத்தியம் செய்து கொடுத்து விட்டீர்களே!'' என்று கூறிச் சிரித்தான், சுந்தர்.

அப்புறம்—? சுந்தர் பிழைத்துக் கொண்டு விட்டான்!

இப்போதெல்லாம், டாக்டர் பிரபாகரன் ஏழைகளைத்தான் முதலில் கவனிக்கிறார். அவர்களுக்கு இலவசமாகவே வைத்தியம் செய்கிறார். பங்களாவின் முன்புறத்தில் தொங்கும் அந்தப் பலகையில் எழுதியிருப்பதை பார்த்தாலே, இது நன்றாகத் தெரிந்து விடும். அந்தப்பலகையில் தெரிவது:

'சுந்தர் இலவச வைத்தியசாலை'

14 அணாவில் படிப்பை முடித்தவர்!

7 மாதம் × 2 அணா

"ஏழு மாதம்கூடப் பள்ளிக்கூடத்தில் படிக்காத ஒருவர், எட்டு வருடங்களுக்கு மேல் ஒரு சர்வகலாசாலையில் ஆசிரியராக இருந்தாரென்றால், ஆச்சரியப்படுவீர்கள். ஆனால், அது உண்மை. அவ்வாறு இருந்தவர் மகாமகோபாத்யாய முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் ஆவர்."

இப்படி ஒரு கட்டுரையின் ஆரம்பத்திலே எழுதியிருக்கிறார், உலகமெலாம் சுற்றியவரும், காந்தியின் வாழ்க்கையை சினிமாப் படமாகத் தயாரித்தவருமான திரு. ஏ. கே. செட்டியாரவர்கள்.

'மகாமகோபாத்யாய முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்'—இவ்வளவு நீளமான பெயரை நீங்கள் கேள்விப்பட்டிராவிட்டாலும், 'பண்டிதமணி' என்ற பெயரையாவது நிச்சயம் கேள்விப்பட்டுத்தான் இருப்பீர்கள்.

இவர் பத்தாவது வயதுவரை பள்ளிக்கூடத்துப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. அதற்குப் பிறகுதான், பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். இவர் பிறந்த ஊரோ மிகச் சிறிய ஊர். இராமநாதபுரத்தைச் சேர்ந்த மகிபாலன்பட்டி என்னும் அந்த ஊரில் திண்ணைப் பள்ளிக்கூடமொன்றில் இவர்படித்தார். பள்ளிக்கூடச் சம்பளம் மாதம் 2 அணாத்தான்! அந்தப் பள்ளிக்கூடத்தில் இவர் அதிக நாள் படிக்கவில்லை. எழு மாத காலமே படித்தார். எண்சுவடிப் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறி விட்டார்! ஆக இவர் பள்ளிப் படிப்புக்காகச் செலவிட்ட தொகை 14 அணாத்தான்! (7 மாதம் × 2 அணா)

பள்ளிப் படிப்பை முடித்ததும்,

இவர் வீட்டுப்படிப்பை ஆரம்பித்து விட்டார். பதினோராவது வயதிலிருந்து இருபத்தைந்தாவது வயது வரை வீட்டிலே உட்கார்ந்து, தாமே தமிழ் கற்று வந்தார். தமிழிலே இவருக்கு இருந்த ஆர்வம் நாளுக்கு நாள் வளர்ந்தது. பிற்காலத்தில் சிறந்த தமிழறிஞருள் இவரும் ஒருவராக விளங்கினார்.

தமிழில் மட்டுமல்ல ; வடமொழியிலும் இவர் சிறந்த புலமை பெற்றிருந்தார். இருபத்தாறாவது வயதிலிருந்து முப்பது வயதுவரை ஓர் அறிஞரிடம் பாடம் கேட்டு வந்தார். விரைவிலே அம்மொழியிலும் இவர் அறிஞரானார்.

தமிழ்மொழி, வடமொழி இரண்டிலும் அறிஞராக விளங்கிய இவர், வடமொழியிலிருந்து பல நூல்களைத் தமிழாக்கியிருக்கிறார். கணீரென்ற குரலில் இவர் மிக அழகாகப் பேசுவார். கம்ப ராமாயணத்தையும், வால்மீகி ராமாயணத்தையும் இவர் ஒப்பிட்டுப் பேசும்போது, கேட்பவர்கள் மெய்மறந்து போவார்கள். அவ்வளவு அற்புதமாகப் பேசுவார்.

தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யரவர்களுக்குப் பிறகு, இவருக்குத்தான் 'மகாமகோபாத்யாய' என்னும் பட்டம் கிடைத்தது.

ஏ. கே. செட்டியாரவர்கள் கூறியதுபோல் இவர் ஒரு சர்வ கலாசாலையில் சாதாரண ஆசிரியராக மட்டும் இருக்கவில்லை; அந்த சர்வ கலாசாலையின் தமிழ்ப் பகுதிக்கே தலைவராகவும் விளங்கினார்.

இப்படிப்பட்ட பெருமையுடைய பண்டிதமணி அவர்கள், சமீபத்தில் காலமாகிவிட்ட செய்தி கேட்டு நாமெல்லாம் வருந்துகின்றோம். நாம் மட்டுமென்ன ; தமிழ் தெரிந்த பலரும் வருந்துகிறார்கள்.

பாற்கடலில் சீனிவாசன்

பண்டிதமணி நகைச்சுவை ததும்பப் பேசுவதில் மிகவும் கெட்டிக்காரர்.

'ஒரு சொல்; இரு பொருள்' என்ற தலைப்பில், உங்களில் சிலர் 'கதம்பம்' பகுதியில் எழுதி வந்தீர்களே, அதேபோல், இரு பொருள்படப் பேசுவதில் இவருக்கு நிகர் இவரேதான்!

ஒரு சமயம் பண்டிதமணி தம் நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றிருந்தார். அங்கே இரவு சாப்பிட்டு விட்டு உட்கார்ந்திருந்தார். அப்போது அவரைக் கண்டு பேசச் சிலர் வந்திருந்தார்கள்.

பேசிக் கொண்டிருக்கும்போது, வேலைக்காரன் பண்டிதமணிக்குப் பால் கொண்டுவந்து கொடுத்தான். பண்டிதமணி பாலைக் கையிலே வாங்கினார்; அதை ஒருமுறை பார்த்தார். பிறகு, 'திருப்பாற் கடலில் சீனிவாசன் துயில் கொள்ளுகிறான்' என்றார்.

இருந்தாற்போலிருந்து அவர் இப்படிக் கூறியதும், மற்றவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

சிலர் விழித்தனர். சிலர் எதிரே சுவரில் தொங்கிக்கொண்டிருந்த திருமால் படத்தைப் பார்த்து, 'இதைப் பற்றித்தான் பண்டிதமணி கூறுகிறாரோ!' என்று நினைத்தனர். சிலர் தீவிரமாக யோசிக்கலாயினர்.

கடைசியாக விஷயம் விளங்கி விட்டது. எல்லோரும் சிரிக்கலாயினர்.

'பாலில் எறும்பு விழுந்து கிடக்கிறது' என்று கூறுவதற்குப் பதிலாகத்தான் 'திருப்பாற்கடலில் சீனிவாசன் துயில் கொள்ளுகிறான்' என்று கூறினார், பண்டிதமணி!

திருப்பாற் கடல் என்பது பால்; சீனிவாசன் என்பது சீனியில் வாசம் செய்யும் எறும்பு; துயில் கொள்ளுகிறான் என்பதற்கு விழுந்து கிடக்கிறது என்று பொருள்!

மணியும், ஒலியும்

ஒரு கூட்டத்திற்குப் பண்டிதமணி தலைமை வகித்தார். கூட்டத்தின் ஒரு பகுதியில் பெண்கள் இருந்தனர். அவர்களில் சிலர் அடிக்கடி பேசிக்கொண்டிருந்தனர். ஆகையால் கூட்டத்தை அமைதியாக நடத்த முடியவில்லை.

கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள், பெண்கள் பகுதியிலிருந்து அடிக்கடி சப்தம் வருவதைக் குறிப்பிட்டு, அமைதியாயிருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அப்போது பண்டிதமணி, "பெண் மணிகள்—ஒலித்துக் கொண்டுதானிருக்கும்" என்று வேடிக்கையாகக் கூறினார்.

பண்டிதமணியின் இந்த ஒலியைக் கேட்டதும், கூட்டத்தில் சிரிப்பின் ஒலி எழுந்தது!

நீலாம்பிகை—கறுப்பாயி

பண்டிதமணி ஒரு சமயம் ஒரு தமிழ் அறிஞர் வீட்டிற்குச் சென்றிருந்தாராம். அங்கே பகல் உணவருந்தும் போது, "கொஞ்சம் ரசம் விடம்மா" என்று பண்டிதமணி, அந்த அறிஞரின் மகளிடம் கூறினாராம்.

அதற்கு அந்த அம்மையார், "என்னய்யா, 'ரசம்' என்று வடமொழியில் கூறுகிறீர்கள்? 'சாறு' என்று குறிப்பிடுங்கள்" என்று விளையாட்டாகச் சொன்னாராம்.

உடனே, பண்டிதமணி "சரி அம்மா கறுப்பாயி, கொஞ்சம் சாறு ஊற்று" என்றாராம், சிரித்துக்கொண்டே.

"என்னய்யா, என்னைக் கறுப்பாயி என்று அழைக்கிறீர்கள்?" என்று கேட்டாராம் அந்த அம்மையார்.

அதற்குப் பண்டிதமணி "ஆமம்மா, உன் பெயர் நீலாம்பிகை தானே! நீலம் என்பதைக் கறுப்பு என்றுதான் தமிழில் குறிப்பிடுகின்றோம். அம்பிகை என்பதை ஆயி என்கிறோம். ஆகையால், நீலாம்பிகையைக் கறுப்பாயி என்று நல்ல தமிழில் குறிப்பிடுவதில் தவறில்

லையே!'' என்றாராம்.

உடனே, அந்த அம்மையார் சிரிக்க ஆரம்பித்து விட்டாராம். பண்டிதமணியும் சேர்ந்து சிரித்தாராம்!

பேசாத காரணம்?

பண்டிதமணி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருக்கும் போது அவரிடம் ஓர் ஒற்றை மாட்டு வண்டி இருந்தது. அதில் ஏறிக் கொண்டு தினமும் மாலை நேரத்தில் காற்று வாங்கச் செல்வார்.

ஒருநாள், அவர் வழக்கம்போல் காற்று வாங்கப் புறப்பட்டார். அப்போது அவருடன்கூட ஒருவரையும் வண்டியில் அழைத்துச் சென்றார்.

வண்டி போகும்போது, முன் பக்கமாக உட்கார்ந்துகொண்டு 'இப்படிப் போ; அப்படிப் போ' என்று கூறி வண்டிக்காரனுக்கு வழி காட்டிக்கொண்டே சென்றார், பண்டிதமணி. கூட வந்தவருடன் அவர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை!

இதனால், கூடவந்தவர் சிறிது வருத்தப் பட்டார். "என்ன, நீங்கள் என்னுடன் ஒரு வார்த்தை கூடப் பேசாதிருக்கிறீர்களே!" என்று கேட்டார், அவர்.

அதற்குப் பண்டிதமணி, "இல்லை, இந்த வண்டியில் பூட்டப்பட்டிருக்கும் மாடும் புதிது. இதை ஓட்டும் வண்டிக்காரனும் புதியவன். அவன் மாட்டை ஓட்டுகிறான். நான் அவனை ஓட்ட வேண்டியதிருக்கிறது. அதனால்தான் என் கருத்து முழுவதும் அந்தப் பக்கமே திரும்பி விட்டது!'' என்றார்.

சொற்போரும், மற்போரும்,

சில ஆண்டுகளுக்கு முன் சென்னை கோகலே மண்டபத்தில் கம்பன் விழா நடந்தது. அவ்விழாவிற்குப் பண்டிதமணி தலைமை வகித்தார்.

கூட்டம் ஆரம்பமானதும், 'இராமாயணத்தைக் கொளுத்த வேண்டும்' என்று கூறும் கூட்டத்தைச் சேர்ந்த சிலர் வந்து குழப்பம் உண்டாக்கினர்.

பண்டிதமணி தலைமை உரை நிகழ்த்த எழுந்ததும், கலகக்காரரில் ஒரு சிலர் மேடைமீதேறி அவரைப் பேசவிடாது தடுத்தனர்; அவரின் முன்னால் இருந்த ஒலி பரப்பும் கருவியைத் தள்ளி உடைத்தும் விட்டனர்.

அவர்களது வெறியைக் கண்ட பண்டிதமணி அமைதியாக "யான் சொற்போருக்கு அஞ்சேன். ஆயினும், மற்போருக்குக் காலம் கடந்து நிற்கின்றேன்'' என்று கூறினார்.

சொற்போருக்குத் தயாராயில்லாத அந்தக் கலகக் கூட்டத்தினர் சிறிது நேரம் கூச்சலிட்டுவிட்டு வெளியேறினர்.

பிறகு, கூட்டம் இனிது நிறைவேறியது.

இளிச்சவாயன் கட்டுரை

'புத்தகக் காட்சி வேலை மும்முரத்தில் கட்டுரை எழுத மறந்தே போய்விட்டேன். அடுத்த இதழுக்குக் கட்டாயம் தந்து விடுகிறேன். மன்னித்துக்கொள்ளுங்கள்' என்று என்னிடம் கூறினான் இளிச்சவாயன்.

இளிச்சவாயனை நான் மட்டும் மன்னித்துவிட்டால் போதுமா? நீங்களும் சேர்ந்தல்லவா மன்னிக்க வேண்டும்?

அடுத்த இதழ் முதல் அவன் கட்டுரை தொடர்ந்து வரும்.

—ஆசிரியர்

வம்புத் தம்பி

● கொசுக் கடி தாங்காமல் குடிசைக்குள் மூட்டம் போட்டவர் குடிசை தீப் பற்றியதால் உயிரோடு வெந்து மாண்டார்.

—திருப்புவனச் செய்தி

ரத்தத்தை உறிஞ்சும் அற்பக் கொசுவுக்குப் பயந்து தன் உயிரையே தத்தம் செய்துவிட்டாரே அவர். பாவம்!

● பாலாற்றில் வெள்ளம். 4 பேர் மரணம்.

—சென்னைச் செய்தி

பாலாறு மக்கள் வயிற்றிலே பால் வார்ப்பதற்குப் பதிலாக 4 பேரைக் கொன்று பாழ் செய்துவிட்டதே!

● நேருவுடன் நேருக்கு நேர் கத்திச் சண்டைபோட அனுமதிகோரிபம்பாய்க்கோர்ட்டில் ஒரு 'பைத்தியம்' மனு தாக்கல் செய்துள்ளது.

—பம்பாய்ச் செய்தி

சமீபத்தில் உதவி நிதிக்காக நேரு 'கிரிக்கெட்' விளையாடியது போல, ஏதாவது ஒரு நிதிக்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அந்தப் பைத்தியத்துடன் கத்திச்சண்டை போட்டால், ஏராளமாகப் பணம் வசூலாகுமே!

● சென்னையிலிருந்து காசி சென்றிருந்த ஒரு யாத்ரீகரிடமிருந்து 2000 ரூபாயடங்கிய மணி பர்ஸ் ஒன்றை ஒரு குரங்கு 'அபேஸ்' செய்து விட்டது.

—காசிச் செய்தி

அட ராமா! காசிக்குப்போயும் கருமம் தொலையவில்லையா?

● சுடுகாட்டில் தீ வைக்கப் பட்ட பிணம் உயிர் பெற்று எழுந்தது!

—அதிராமபட்டினச் செய்தி

பிணம் உயிர்பெற்றது கண்டு அங்கிருந்தவர்கள் பயத்தால் நடு நடுங்கி, ஒரு விநாடி பிணம்போல் நின்றிருப்பார்கள் என்று என் மனம் நினைக்கிறது!

● பித்ரகுண்டா ரயில்வே பள்ளியில் ஆசிரியர் வேலை பார்க்கும் 52 வயதுள்ள ஆதி நாராயணய்யா, பி. ஏ. பரீட்சை எழுதினார்.

—நெல்லூர் செய்தி

"இவர் மாதிரி நானும் ரொம்ப வயதான பிறகு எஸ். எஸ்.எல்.ஸி. எழுதினால், என் பெயரைப் பிரமாதமாக பத்திரிகைகளிலே போடுவார்களல்லவா! அதனாலேதான் இப்போது சரியாகப் படிக்காமல் சுற்றுகிறேன்......!" என்று சமாதானம் கூறுகிறான், இப்போது படிக்காமல் சுற்றிக்கொண்டிருக்கும் சுட்டிப்பயல் ஒருவன்.



எலிப்படை

கருத்து : **ஈசாப்** பாடல் : **வள்ளியப்பா**

எலிகள் யாவும் படைதி ரண்டு
கிளம்ப லாயின.
எதிர்த்துப் பூனைக் கூட்டத் தோடு
போர்பு ரிந்தன.
புலிகள் போலப் பாய்ந்து பாய்ந்து
பாதி எலிகளைப்
பிடித்துக் கடித்துப் பூனைக் கூட்டம்
விழுங்கி விட்டது!

பிழைத்து வந்த எலிகள் சேர்ந்து
கூட்டம் போட்டன.
பெருத்துக் கொழுத்த எலி யெழுந்து
பேசலானது:
" இளைக்க இளைக்க நாமெல் லோரும்
ஓடி வந்ததே
என்ன கார ணத்தி னாலே
என்று தெரியுமோ?

தலைவ ரென்று சிலரை வைத்தோம்;
அவர்கள் சொற்படி
தகுந்த முறையில் போர்பு ரிந்தால்
வெற்றி கிட்டிடும்.
பலத்த சண்டை போடும் போது
தலைவர் யாரெனப்
பார்த்துக் கண்டு பிடிப்ப தற்கே
சிரம மாகுதே!

ஆத லினல் குச்சி யாலே
குல்லாய் செய்துநாம்
அவர்கள் தலையில் மாட்டி வைப்போம்,
கண்டு கொள்ளவே.
சேதம் ஏதும் இன்றி அவர்கள்
காட்டும் வழியிலே
சென்று வெற்றி பெறுவோம்' என்றே
எடுத்து ரைத்தது.

'சரிதான்' என்று ஏற்று அவைகள்
குல்லாய் செய்தன.
தலைமை தாங்கும் எலிகள் தலையில்
மாட்டி விட்டன.
பெருமை யோடு தலைமை எலிகள்
முன்னே சென்றன.
பின்தொ டர்ந்து மற்ற எலிகள்
நடக்க லாயின.

படைதி ரண்டு எலிகள் வரவே
பார்த்த பூனைகள்
பாய்ந்து வந்து மேல் விழுந்து
தாக்க லாயின.
நடுந டுங்கி எலிகள் யாவும்
முதுகைக் காட்டியே
நான்கு திசையும் தலைதெ றிக்க
ஓட லாயின.

தப்பிச் சென்ற எலிகள் உடனே
வளையில் ஒளிந்தன.
தலையில் குல்லாய் தரித்த எலிகள்
தவிக்க லாயின!
அப்போ தந்தக் குல்லாய் வளைக்குள்
நுழைந்தி டாததால்,
ஐயோ, வெளியில் அந்த எலிகள்
திகைத்து நின்றன!

தலையில் குல்லாய் தரித்து நின்ற
எலிகள் தம்மையே
தாவி வந்த பூனைக் கூட்டம்
பிடித்துக் கொண்டது.
வெலவெ லத்துப் போன அந்தத்
தலைமை எலிகளை
விழுங்கி அந்தப் பூனைக் கூட்டம்
ஏப்பம் விட்டதே!

பிச்சைக்காரன்

'அழகரசன்'

"அன்புள்ள ரகு,

எனக்குக் கால் வருடப் பரீட்சை முடிந்து தசரா விடுமுறை ஆரம்பமாகிவிட்டது. அப்பாவிடம் உங்கள் ஊருக்கு வருவதற்கு அனுமதி வாங்கிவிட்டேன். நான் நாளை மறுநாள் காலை 6 மணி வண்டியில் புறப்பட்டு, அங்கு 9 மணிக்கு வந்து சேருவேன். ஸ்டேஷனில் என்னைச் சந்திக்கவும்.

உன் தங்கை,

பானுமதி"

கடிதத்தைக் கண்ட ரகு துள்ளிக்குதித்தான். "அப்பா, அப்பா! பானு நாளைக்கு வருகிறாளப்பா" என்று சொல்லிக் கொண்டே கடிதத்தை எடுத்துக்கொண்டு அப்பாவிடம் ஆனந்தமாக ஓடினான்.

பானுமதி ரகுவின் சிற்றப்பா பெண். அவள் பட்டணத்தில் இருக்கிறாள். ஆனால், ரகுவோ சுமார் 50 மைல் தூரத்திலுள்ள ஒருபட்டிக்காட்டில் இருக்கிறான். காரணம், அவன் அப்பா ஒரு நிலச்சுவாந்தார்; நிலத்தைப் பார்த்துக் கொள்ளுவதற்கும், மற்ற விஷயங்களுக்கும் கிராமத்தில் இருந்தால்தான் சௌகரியம் என்று அவர் நினைத்தார்.

அவனுடைய சிற்றப்பா சென்னையில் இருக்கிறார். அவருடைய ஒரே செல்லக் குழந்தைதான் பானுமதி. அவள் மூன்றாம் 'பாரம்' படித்துக் கொண்டிருந்தாள் சென்னையில்.

ரகுவும் கிராமத்து ஹைஸ்கூலில் நான்காம் பாரம் படித்து வந்தான். அவனுக்கும் கால் வருடப் பரீட்சைக்கு அப்பொழுது விடுமுறை விட்டிருந்தார்கள். ஆகையால் 'பானுவுடன் எங்கெங்கே சுற்றலாம்; அவள் என்னென்ன கொண்டு வருவாள்' என்றெல்லாம் கடிதத்தைக் கண்டதிலிருந்தே கனவுகாண ஆரம்பித்துவிட்டான் ரகு. மறுநாள் காலை

இது குழந்தை எழுத்தாளர் சங்கச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை

யில் சீக்கிரமாகவே வண்டி கட்டிக்கொண்டு ஸ்டேஷனுக்குச் சென்ருன் ரகு. 'எப்பொழுது மணியாகும்; வண்டிவரும்' என்று எதிர்பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். அது சிறிய ஸ்டேஷனுதலால், ரயில் கொஞ்ச நேரம் தான் அங்கு நிற்கும்.

சிறிது நேரம் சென்றதும் ரயில் வந்தது. உடனே அருகில் ஓடினுன் ரகு. அப்பொழுது ஒரு பெட்டியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த பானுமதி "அண்ணு" என்று அன்பு ததும்ப அழைத்தாள்.

மலர்ந்த முகத்தோடு அவளருகில் சென்ருன் ரகு. அவள் கையிலிருந்த பெட்டியைத்தூக்கிக் கொண்டு வந்து, தான் வந்திருந்த மாட்டு வண்டியில் வைத்தான். பானுவும் அவனும் ஏறிக்கொண்டதும் வண்டி 'ஜல் ஜல்' என்ற சதங்கை ஒலியுடன் கிளம்பிற்று.

பானுமதி கொண்டு வந்திருந்த சாமான்களைக் கண்டதும் ரகு மலைத்து நின்றுவிட்டான். அப்பப்பா! எத்தனைகதைப்புத்தகங்கள்! பேனு, பர்ஸ், பந்து இப்படி எத்தனை எத்தனையோ சாமான்கள்! அன்று முழுவதும் வீட்டிலேயே தங்கியிருந்தாள் பானுமதி.

மறுநாள் மாலை. "ஏண்டா ரகு! இந்தப் பட்டிக்காட்டிலே பார்க்க வேண்டிய இடம் ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டாள் பானு.

"என்ன அப்படிக் கேட்டுவிட்டாய்! முதலில் எங்கள் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க வேண்டும்......அப்புறம் மாந்தோப்பு, செங்குன்று, நீரோடை......இன்னும் எவ்வளவோ இருக்கின்றன! இந்த இயற்கைச் செல்வத்தையெல்லாம் பட்டணத்தில் எங்கே நீ பார்த்திருக்கப்போகிருய்!" என்று பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டான் ரகு.

"சரி, அப்படியானுல் கிளம்பு தோட்டத்திற்கு" என்ருள் பானு.

தோட்டம் இரண்டு பர்லாங் தூரத்திலேயே இருந்ததால் இருவரும் நடந்தே போக ஆரம்பித்தார்கள். வயல் வரப்புகளிலே நடந்து வந்த பானுமதியின் பார்வையைக் கவர்ந்தது ஒரு பாழடைந்த குடிசை.

ரகுவுக்கு அதைச் சுட்டிக்காட்டி, "ரகு, அது ஏன் பாழடைந்து கிடக்கிறது? யாரும் குடியில்லையா அதிலே?" என்று கேட்டாள்.

"ஓஹோ! அந்தக் குடிசையைச் சொல்கிருயா? அந்தக் குடிசையைப் பற்றி இந்தக் கிராமத்தில் ஒரு கதை கட்டி வைத்திருக்கிருர்கள்" என்ருன் ரகு.

பானு சுவாரஸ்யத்துடன் "அது என்ன கதை ரகு?" என்ருள். ரகு நடந்துகொண்டே சொல்லலானுன்:

"அந்தக் குடிசையிலே கொஞ்ச நாளைக்குமுன் ஒரு கிழவர் இருந்தார். அவர்கூட ஒரு பையனும் இருந்து வந்தான். இரண்டு பேரும் பிச்சையெடுத்



துத்தான் பிழைத்து வந்தார்கள்...ஒரு நாள், அந்தக் கிழவர் செத்துப்போய் விட்டார் போலிருக்கிறது. மறுநாளிலிருந்து அந்தப் பையனைக் காணோம்! வன் எங்கே போனானோ தரியவில்லை...அதை வைத்க்கொண்டு இந்த ஊரார் அங்கே கிழவரின் ஆவி சுற்றுகிறதென்றும் அதற்குப் பயந்துதான் அந்தப் பையனும் ஓடிவிட்டான் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். மேலும் இப்போது ஒரு வாரத்திலிருந்து இரவு வேளையில் இங்கே "ஐயோ! ஐயோ! அப்பா!" என்று யாரோ அழும் சப்தம் கேட்கிறதாம். அதையும் ஆவியின் சேஷ்டைதான் என்று பேசிக் கொள்கிறார்கள்..."

இதுவரை பொறுமையாகக் கேட்டுவந்த பானுவதி, "பேய் இருப்பதைக்கூட நீ நம்புகிறாயா அண்ணா? நிச்சயமாக அங்கே கிழவரின் ஆவி இருக்காது. அவர்கூட இருந்த பையன்தான் இரவு நேரத்திலே அங்கே வந்து அழுகிறான் போலிருக்கிறது. அந்தக் கிழவர் அவனுடைய அப்பாவாக இருக்கலாம்" என்று சொன்னாள்.

"நீ சொல்வது ஒரு விதத்தில் உண்மைதான். ஆனால், ஓடிப்போன பையன் மறுபடியும் எப்படி வந்தான் என்று தெரியவில்லை...ஒன்று செய்ய

லாமென்று எனக்குத் தோன்றுகிறது...இன்று இரவு அங்கே அழுகிறது யார் என்று பார்த்து விட்டால்......?''

"நான் நினைத்ததையே நீயும் சொல்லிவிட்டாய் ரகு. அதை எப்படியும் பார்த்துவிட வேண்டுமென்றுதான் நானும் நினைக்கிறேன்'' என்றாள் பானுமதி.

இருவரும் இருட்டுவதற்குள் தோட்டத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பி விட்டனர். அவர்கள் தீர்மானித்தபடி இருவரும் சாப்பிட்டுவிட்டு மீண்டும் கிளம்பினார்கள். வீட்டில் சினிமாவுக்குப் போவதாகப் பொய் சொல்லி மழுப்பி விட்டார்கள். நல்லவேளையாக, அந்தக் கிராமத்தில் சில நாட்களாக ஒரு 'டூரிங் டாக்கீஸ்' நடந்து கொண்டிருந்தது. அதனால், அவர்களுக்கு இப்படிப் பொய் சொல்ல சௌகரியமாக இருந்தது. இல்லாவிட்டால் இரவு வேளையில் தோட்டத்துப் பக்கமே போகக்கூடாது என்று சட்டமிடும் அப்பா, இப்போது சும்மா இருப்பாரா?

கையில் 'பேட்ரி' விளக்குடன் ரகு முன்செல்ல, அவனைப் பின் தொடர்ந்தாள் பானுமதி. சரியாகப் பத்து மணிக்கு அந்தக் குடிசையை அடைந்தனர் இருவரும். மெல்ல மெல்ல உள்ளத்தில் பயத்துடன் குடிசைக்குள் நுழைந்தனர். அங்கே தரை பூராவும் ஒரே புழுதி மயமாக இருந்தது. இருவரும் ஒரு மூலையில் சேர்ந்து பதுங்கி நின்று கொண்டனர்.

நேரம் மெல்ல மெல்லச் சென்றது.

சுமார் பதினோரு மணி இருக்கும். நல்ல இருட்டு. அந்தச் சமயத்தில் ஏதோ ஓர் உருவம் மெதுவாக நடந்து வருவதைப் போல் சப்தம் கேட்டது. இருவருக்கும் உடலெல்லாம் வியர்த்து விட்டது. ரகு உஷாராக எழுந்து நின்றான். அந்த உருவம் மெதுவாக உள்ளே முன்னேறி வந்தது. உடனே ரகு "நில்'' என்று கத்திக் கொண்டே 'பேட்ரி' விளக்கை அடித்தான். பளீரென ஒளி வீசியது குடிசை முழுதும். அங்கே...

எதிரில் ஓர் ஏழைச் சிறுவன் நின்று கொண்டிருந்தான். பஞ்சடைந்த கண்கள்; திடீரென்று ஏற்பட்ட நிகழ்ச்சியால் பயந்து மருண்டு விழித்துக் கொண்டிருந்தன அவைகள். பரட்டைத் தலை; எண்ணெய் கண்டு எத்தனை நாளாயிற்றோ அது. பசியினால் வாடிப் பதுங் போன வயிறு. இடுப்பிலே ஒ கந்தல் துணி...வெள்ளை எ பெயரையே அது கண்டிரு முடியாது போல் தோற்றமளித்தது.

ஆம், அவன் ஒரு பிச்சைக்காரன்தான்!

அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பானுமதி ஆச்சரியமடைந்தாள். மறுகணம் "ஆ... காளி! நீயா?'' என்று கத்திக்கொண்டே அவ

னருகில் ஓடிச் சென்று அவனைக் கட்டிக் கொண்டாள்.

ரகுவுக்கு அங்கே அந்தப் பிச்சைக்காரச் சிறுவனைக் கண்டதே ஓர் ஆச்சரியமாயிருந்தது. ஆனால், பானுமதிக்கு அவன் தெரிந்தவனாக இருந்தது அதைவிட ஆச்சரியத்தை அளித்தது அவனுக்கு, இன்னும் அவள் ஓடிப்போய் அவனைக் கட்டிக்கொண்டது எல்லாவற்றையும் விடப் பன்மடங்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஒன்றும் புரியாமல் விழித்தான் ரகு, சிறிது நேரம்.

அந்தப் பிச்சைக்காரச் சிறுவன்"அடே...நீ...நீ...பானுமதி தானே!...இங்கே...எப்படி...?" என்று திக்கித் திக்கிப் பேசினான் வியப்பினால்...

பாவம்! பசிக் களைப்பு வேறு சேர்ந்து கொண்டு அவனைப் பேசக்கூட விடவில்லை.

பானுமதி அவன் கையைப் பிடித்துக்கொண்டு "காளி! நீ வா! எங்கள் பெரியப்பா வீட்டுக்குப் போகலாம். உன்னை நானும் அப்பாவும் அன்றைக்கு எங்கெங்கேயோ தேடினோம். நீ அகப்படவே யில்லை" என்று சொல்லிக் கொண்டே காளியை அழைத்துக் கொண்டு நடந்தாள்.

ரகு, 'பேட்ரி' விளக்கைப் பிடித்துக்கொண்டு யோசித்தவாறே முன்னால் சென்று கொண்டிருந்தான். அவனுக்கு



எல்லாமே பெரும் புதிராக இருந்தன!

'காளி யார்? அவனுக்கும் பானுமதிக்கும் என்ன சம்பந்தம்? அவனை ஏன் அவள் தேட வேண்டும்? அவள் மட்டுமல்லாமல், அவள் அப்பாவுமல்லவா சேர்ந்து கொண்டு தேடினராம்! என்ன ஆச்சரியம்! அவர் இந்த அனாதைப் பிச்சைக்காரனை எதற்காக அவ்வளவு அக்கறையாகத் தேட வேண்டும்?' என்றெல்லாம் பல வாறாக யோசனை செய்து மண்டையைக் குழப்பிக் கொண்டான்.

அவர்கள் வீடு வந்து சேரும் பொழுது இரவு மணி இரண்டு. தன் அப்பாவிடம் சுருக்கமாக 'அவன் ஓர் அனாதை' என்று மட்டும் சொல்லி, அவனுக்குச் சிறிது உணவு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டான், ரகு. அவன் அப்பாவும், "என்ன? ஏது?" என்று கேட்காமல் பானுவுக்காக அவன் மேல் இரக்கம் காட்டினார். விவரம் மறுநாள் சொல்வதாகப் பானு சொன்னதும் எல்லோரும் படுக்கச் சென்று விட்டார்கள்.

ரகுவுக்குத் தூக்கமே வரவில்லை. மனத்தைப் பலவாறுகக் குழப்பிக் கொண்டு படுத்திருந்தான். எப்பொழுது விடிந்தது என்பதுகூடத் தெரியவில்லை.

மறுநாள்.

பானுமதி 'பெட் காபி'யுடன் அவனை எழுப்பிக் கொண்டிருந்தாள். ரகு காலை ஆகாரத்தை சீக்கிரம் முடித்துக் கொண்டான், மர்மத்தை அறிந்து கொள்ளும் ஆவலுடன். காளிக்குத் தன்னுடைய சட்டைகளில் இரண்டையும், டிராயர்களில் இரண்டையும் பானுவின் விருப்பப்படி கொடுத்தான்.

"பானு! காளியை உனக்கு எப்படித் தெரியும்? காளிக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?" என்றான் ரகு.

"இரு. அப்பாவை வரச் சொல்லி ஒரு கடிதம் எழுதி விட்டுத்தான் சொல்வேன்" என்று கடிதம் எழுத உட்கார்ந்துவிட்டாள் பானுமதி.

ரகுவுக்குத் தர்ம சங்கடமாகி விட்டது. அவள் கடிதம் எழுதும்வரை 'சிவனே'என்று உட்கார்ந்திருந்தான். அவள் அதைக் காளியிடம் கொடுத்து போஸ்டாபீஸில் கொண்டு போய்ப் போட்டுவிட்டு வரும்படி சொன்னாள். காளியும் அதை வாங்கிக்கொண்டு சென்றான்.

பொறுமையிழந்த ரகு, "சொல் பானு, சீக்கிரம்" என்று கத்தினான். அவளும் புன்முறுவலுடன் சொல்ல ஆரம்பித்தா[ள்].

"எங்கள் வீட்டில் '[...]' என்று ஒரு நாய்க்குட்டி இரு[ந்]தது, தெரியுமல்லவா உனக்கு[ம்]. அதன்மேல் நான் உயிரையே வைத்திருந்தேன் என்பதும் உனக்குத் தெரியும்......"

"காளியைப்பற்றிச் சொல் என்றால் உன்னுடைய அருமை நாயைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்துவிட்டாயே!" என்று இடையில் குறுக்கிட்டான் ரகு.

"ரகு...நீ இப்படி அவசரப் பட்டால் நான் சொல்லமாட்டேன். பொறுமையாகக் கேள். அந்த நாய்க்குட்டியைப் பிரிந்திருக்க என்னால் எப்பொழுதும் முடியாது. எங்கு போனாலும் அதைத் தூக்கிக்கொண்டே தான் போவேன்.

"ஒருநாள், வழக்கம்போலவே நான் டாமியை எடுத்துக் கொண்டு,பக்கத்துவீட்டுப் பங்கஜத்துடன் கடற்கரைக்குப் போனேன். நாங்கள் இருவரும் கரை ஓரமாக உட்கார்ந்தோம். கடல் அலைகள் அடிக்கடி எங்களருகில் வந்து வந்து போய்க் கொண்டிருந்தன. அதையே கவனித்துக் கொண்டிருந்த டாமி, அலைகளுக்கிடையில் ஓடி, குரைத்துக் குரைத்து விளையாடிக் கொண்டிருந்தது...நாங்கள் பேச்சு சுவாரஸ்யத்தில் இதையெல்லாம் கவனிக்கவில்லை... சிறிது நேரங் கழித்துத் திரும்பிப் பார்த்தால்,நாய்க்குட்டி கடலில் வெகுதூரம் அடித்துக் கொண்டுபோகப்படுவதுதெரிந்தது எங்களுக்கு! அவ்வளவுதான். நான் அந்தக் கணத்தில் ஒன்றையும் யோசிக்கவில்லை. 'ஐயோ!....டாமி!....என்டாமி!...' என்று கத்திக்கொண்டே திடீரென்று கடலில் இறங்கி ஓடினேன். ஒரு பெரிய அலை வந்து என்னைத் தள்ளியது...கொஞ்சம் கொஞ்சமாக நான் கடலில் முழுக ஆரம்பித்துவிட்டேன். அப்பொழுதுதான் தெரிந்தது, நான் எவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டேன்



என்று. கரையிலிருந்த பங்கஜம் 'பானு! பானு!' என்று கத்தினாள். அவ்வளவுதான் தெரியும் எனக்கு. என் நினைவு தப்பிவிட்டது.

"மறுபடியும் நான் கண்விழித்துப் பார்க்கும்போது மணலில் படுத்திருந்தேன். அருகில் பங்கஜமும், ஒரு பிச்சைக்காரப் பையனும் நின்றுகொண்டிருந்தனர். அவனுடைய கந்தல் துணிகளும்,உடலும் தண்ணீர் சொட்டச் சொட்ட நனைந்து போயிருந்தன.

"அவன் 'உஸ்...உஸ்...' என்று பெருமூச்சுவிட்டுக்

பெரியவர்:—என்னப்பா இது அநியாயம்? மரப்பெட்டி மேலே வெள்ளை வர்ணத்தை அடித்துத் தந்தப்பெட்டி என்று சொல்லி என் தலையிலே கட்டி விட்டாயே, இது முறையா?

கடைக்காரர்:—நான் என்னங்க செய்வது? எல்லாம் அந்த யானை செய்த மோசம். அதனிடமிருந்தது தந்தம் என்றுதான் நான்கூட நினைத்திருந்தேன். இப்படி மரமாக இருக்குமென்று நினைக்கவேயில்லை.

கொண்டிருந்ததைக் கண்டதும், அவன்தான் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த என்னுயிரைக் காப்பாற்றியவன் என்று நான் ஊகித்துக் கொண்டேன். நான் கண் திறந்ததைக் கண்ட பங்கஜம் 'பானுமதி! பானுமதி!..... ஐயோ! இந்தத் தம்பி இல்லாதிருந்தால் நீ இந்நேரம் செத்தே போயிருப்பாய்!' என்று சொன்னாள். எனக்குச் சிறிது சிறிதாகத் தெம்பு வந்தது. என்னையே நோக்கிக் கொண்டிருந்த அவனை, நான் நன்றியுடன் பார்த்தேன். 'தம்பீ!' என்று அழைத்தேன் மெதுவாக. அவன் என் அருகில் வந்து உட்கார்ந்தான்.

"உன் பெயர்......?" என்றேன் நான்.

"காளி..." என்றான் அவன் மெலிந்த குரலில்.

"காளி!...நீ எங்கள் வீட்டுக்கு வா. எங்கள் அப்பாவிடம் நீ என்னைக் காப்பாற்றியதைக் கூறப் போகிறேன். அவர் ரொம்ப சந்தோஷப்படுவார்" என்று சொன்னேன்......

"அவ்வளவுதான்...மறு கணம், அவன் 'அப்பா! அப்பா' என்றான். அவன் கண்களில் சரசரவென்று கண்ணீர் வழிந்தது...உடனே என்ன நினைத்தானோ? 'அப்பா...! அப்பா...!' என்று கத்திக்கொண்டே எழுந்து ஓடிவிட்டான். நாங்கள் அவனை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டே இருந்தோம். பிறகு வீட்டுக்கு வந்து அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னதும் அவர் அந்தப் பையனைப் பார்க்க வேண்டுமென ஆசை கொண்டார். அவனுக்கு ஏதாவது உதவி செய்து காப்பாற்ற நினைத்தார். அவனை எங்கெல்லாமோ தேடினார். ஆனால் அவன் கிடைக்கவேயில்லை." என்று சொல்லி நிறுத்தினாள் பானுமதி...

ரகு உடனே, "ஆமாம்! சென்னையிலே நீ பார்த்த காளி இங்கே எப்படி வந்தான்?"

என்று அவளைக் கேட்டான்.

போஸ்டாபீஸுக்குச் சென்ற காளியும் அதே சமயத்தில் அங்கு திரும்பி வந்தான்.

ரகுவின் கேள்வியைக் கேட்ட காளி, "அது பானுவுக்குத் தெரியாது. நானே சொல்லுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு அவர்கள் முன் சென்று உட்கார்ந்தான். பிறகு சொன்னான்.

"அந்தக் குடிசையில் இருந்தவர் என் அப்பாதான். அவருடன் பிச்சையெடுத்துக் கொண்டு துணையாகத் திரிந்தவனும் நான்தான்...ஒருநாள் பிச்சைக்குக் கிளம்பிய எங்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை...இரண்டாவது நாளும் அப்படியே. முதுமையும் பட்டினியும் என் தந்தையை வருத்தின. ஒரே நாள் காய்ச்சலில் அவர் என்னை அனாதையாக்கிவிட்டுச் செத்துப்போய் விட்டார்..."

இதைச் சொல்லும்பொழுது அவன் கண்களில் நீர் வழிந்தது. துடைத்துக்கொண்டு மீண்டும் பேசினான். "அவர் செத்தபின், இந்த ஊரில் இருக்கவே எனக்குப் பிடிக்கவில்லை. எப்படியோ பட்டணம் போய்ச் சேர்ந்து, அலைந்தேன். அங்கேதான், இரண்டு மாதங்களுக்குப் பின் ஒருநாள் கடற்கரையிலே பானுமதியைக் கடலிலிருந்து காப்பாற்றினேன். அவள் தன் அப்பாவிடம் வரும்படி அழைத்ததும், எனக்கு மீண்டும் என் அப்பாவின் ஞாபகம் வந்துவிட்டது. உடனே ஓடிவந்தேன், இந்தக் கிராமத்திற்கு. இப்போது தினமும் அந்தக் குடிசையிலே ராத்திரிவேளையில் உட்கார்ந்து மனமார அழுதால்தான் என் மனதுக்கு ஆறுதலாயிருக்கிறது...இதுதான் பானு, நான் இங்கே ஓடிவந்ததற்குக் காரணம்" என்று சொல்லி முடித்தான் காளி.

"அப்படியா!" என்று வாயை அகலப் பிளந்தான் ரகு.

பானுவுக்கு அவன்மேல் இன்னும் அதிக இரக்கம் பிறந்தது. "கவலைப்படாதே காளி! இனிமேல் நீ எங்கேயும் போக வேண்டாம்...இனி நீ பிச்சைக்காரனே அல்ல...அப்பா வந்ததும் நான் அவரிடம் சொல்லி உன்னை என் கூடவே இருக்கும்படி செய்கிறேன்" என்றாள்.

மறுநாளே...பானுவின் அப்பா ரகுவின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். ரகுவின் பெற்றோரும் அந்தப் பிச்சைக்காரச் சிறுவனின் கதையைக் கேட்டுப் பரிதாபப்பட்டனர்.

பானுவின் அப்பா அவனைத் தன் வீட்டிலேயே வேலைக்காரனாக வைத்துக்கொண்டு, உயிருள்ள வரையில் அவனைத் தாமே காப்பாற்றுவதாக வாக்களித்தார். தன்னுடைய ஒரே ஆசைமகள் பானுவின் உயிரைக் காப்பாற்றிய காளியை, அவர் அன்போடு அணைத்துக் கொண்டார். அந்த நிமிஷமே காளியின் நெஞ்சை அழுத்தியிருந்த துன்பமெலாம் நீங்கின.

சுரங்கத்தில் வேலை

"குழந்தைகளே! நாளைப் பிற்பகல் கடைசி வகுப்பின் போது சினிமாக் காட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்குச் சிறுவர்களாயிருக்கும் நீங்கள் நாளைக்குப் பெரியவர்களாய் விடுவீர்கள். நீங்கள் வேலை செய்து சம்பாதிக்க வேண்டும். உங்கள் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும். உங்களில் ஒரு சிலர்தான் வெளியூர் சென்று மேலே படிக்கவோ, உத்தியோகம் தேடவோ வசதியுள்ளவர்கள், மற்றவர்கள் என்ன செய்வது? நமக்குத்தான் நினைத்ததைக்கொடுக்கும் காமதேனுவைப் போல் சுரங்கம் இருக்கிறதே! உங்கள் பாட்டன்மார்கள் சுரங்கத்தில் வேலை செய்தார்கள். தகப்பன்மார்கள் சுரங்கத்தில் வேலை செய்கிறார்கள். நாளைக்கு நீங்களும் அங்கேதான் வேலைக்குச்செல்லப் போகிறீர்கள். நீங்கள் வேலைக்குச் செல்லும் முன்பு, சுரங்கத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டாமா? அதற்காகத்தான் சினிமாக் காட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் தவறாது படத்தைப் பார்க்க வேண்டும். மட்டம் போட்டுவிடாதீர்கள்!" என்று உபாத்தியாயர் தன் பிரசங்கத்தை முடித்தார்.

பள்ளிக்கூடம் முடிந்துவிட்டதை அறிவிக்க மணியும் அடித்தது. பையன்கள் குதூகலமாய் வீட்டிற்குக் கிளம்பினார்கள். முனுசாமி மட்டும் அவர்கள் குதூகலத்தில் கலந்து கொள்ளவில்லை. அவன் முகத்தில் சந்தோஷமே இல்லை. தீவிர சிந்தனைதான் குடி கொண்டிருந்தது.

முனுசாமிக்குச் சுரங்கத்தில் வேலை செய்வது பிடிக்கவில்லை. காலையில் உற்சாகமாக வேலை செய்யும் தொழிலாளர்கள் மாலையில் சோர்வுடன் திரும்புவதை அவன் தினந்தோறும் பார்த்துப் பார்த்து வருந்தினான். அவன் தகப்பனாரும் சுரங்கத்தில்தான் வேலை செய்கிறார். நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் சுரங்கத்தில்தான் வேலை செய்கிறார்கள். அந்த கிராமம் சுரங்கத்திற்கு வேலை செய்ய ஆட்களைத் தலைமுறை தலைமுறையாக உற்பத்தி செய்து வருகிறது.

நான்கு வருஷங்களுக்கு முன்பிருந்த அவன் தகப்பனாருக்கும், இன்றைய தகப்பனாருக்கும் மடுவுக்கும் மலைக்குமுள்ள வித்தியாசம் இருக்கிறது. திடகாத்திரமாயிருந்த அவர், இன்று மெலிந்து

வியாதியால் பீடிக்கப்பட்டவராய் இருக்கிறார். உடம்பெல்லாம் கரித் தூளும் மண்ணும் படிந்து அவர் வீடு திரும்புவதைக் கண்டு அவன் மனம் வருந்தும். அளவுக்கு மீறிய உழைப்பால் அவர் உடல்மெலிந்து விட்டது.

தானும் அம்மாதிரி சிக்கிச் சீரழிய அவன் உள்ளம் விரும்பவில்லை. சுரங்கத்தில் வேலை செய்யப்போவதில்லை என்று உறுதியாய் முடிவு செய்திருந்தான் அவன்.

கிராமத்திலிருந்து பள்ளிக்கூடம் வரும்வழியில்தான் சுரங்கம் இருக்கிறது. பாதை அதன் ஓரமாகச் செல்லுகிறது. நீண்ட குழாய்கள் வான வெளியில் வெகுதூரம் சென்று புகையை விட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு அவன் மனம் பொறுமும். தன் தகப்பனாரின் சக்தியைக் கொஞ்சம் கொஞ்சமாக இழுத்துப் புகையாக வெளிவிடுகிறதோ என்று கூட அவன் நினைப்பான். அந்த இடம் வந்ததும் திரும்பிக்கூடப் பார்க்காமல் தரையைப் பார்த்தபடி விடுவிடென்று நடந்து சென்று விடுவான்.

ஆனால், அவன் மன உறுதிக்குப் பங்கம் ஏற்படக் கூடிய நிகழ்ச்சிகள் நடந்தன. பள்ளிக்கூடத்தில் அடிக்கடி சுரங்கத்தைப் பற்றிச் சொற்பொழிவுகள்நடக்கும். அவைகளுக்குப் போகவேண்டாமென்றுதான் அவன் நினைப்பான். ஆனால், உபாத்தியாயரின் கண்டிப்பான உத்திரவுக்குக் கீழ்ப்படிய வேண்டுமே! மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு உட்கார்ந்திருப்பான்.

அவன் சிநேகிதர்கள் அடிக்கடி அவனிடம் தாங்கள் சுரங்கத்தில் வேலை செய்யப் போவதைக் குறித்துப் பேசுவார்கள். அவர்களை வெறுப்புடன் அப்பால் போகச் சொல்லுவான்.

எவ்வளவுக்கு எவ்வளவு உறுதியாக இருக்க விரும்பினானோ, அவ்வளவுக்கு அவ்வளவு நேர்மாறாகக் காரியங்கள் நடந்து வந்தன. இவ்வளவு நாள் காதால் கேட்டுக் கொண்டு வந்தான். நாளை கண்ணால் பார்க்கப் போகிறான்!

மறுநாள் பிற்பகல் சினிமா காட்டப் பட்டது. சுரங்கத்தைப் பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாய்ப் புரியும்படி எடுத்திருந்தார்கள். மாணவர்கள் 'ஆஹா... ஹா...ஊ!' என்றெல்லாம் சப்தமிட்டபடி படத்தை ரசித்தனர். முனுசாமிக்குப் படத்தில் மனம் செல்லவில்லை. கடைசி பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டான். படத்தைப் பார்க்கக் கூடாதென்று கண்களைக் கெட்டியாய் மூடிக் கொண்டான். ஆனால், விளக்கிச் சொல்லிவரும் உபாத்தியாயரின் வார்த்தைகள் அவன் உள்ளத்தில் புகுவதை அவனால் தடுக்க முடியவில்லை! முள்ளின் மீது உட்கார்ந்திருப்பது போல் அவன் தவித்தான்.

படம் முடிந்து சிறுவர்கள் வீட்டிற்குப் புறப்பட்டனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகத் தாங்கள் சுரங்கத்தில் வேலை செய்யப் போவதைப் பற்றிப் பிரமாதமாகப் பேசிக் கொண்டனர். முனுசாமி ஒருவருடனும் கலக்காது தனியே வந்து கொண்டிருந்தான்.

யாரோ தோளின் மீது கையை வைக்கவே திரும்பினான். பார்த்தான். உபாத்தியாயர்!

"முனுசாமி, நானும் உன்னை இரண்டு நாட்களாகக் கவனித்து வருகிறேன். நீ உற்சாகமிழந்து இருக்கிறாயே! இன்று படத்தைப் பார்க்காமல் கண்களை ஏன் மூடிக் கொண்டாய்? கடைசி பெஞ்சியில் போய் ஏன் உட்கார்ந்து கொண்டாய்?" என்று கேட்டார்.

"ஸார்! எனக்குச் சுரங்கத்தில் வேலை செய்வது பிடிக்கவில்லை. சுரங்க வேலைக்குப் போவதில்லை யென்று உறுதி கொண்டிருக்கிறேன். அதற்குப் பங்கம் ஏற்பட்டு விடக் கூடாதென்று..."

"அப்போது என்ன வேலை தான் கற்றுக் கொள்ளப் போகிறாய்?"

"ஸார், நீங்கள் இந்த வேலையைத் தவிர வேறு எந்த வேலையைச் செய்யச் சொன்னாலும் சரி, ஸார்!"

"சபாஷ், முனுசாமி. உன் முடிவுக்கு நான் சந்தோஷப்படுகிறேன். எல்லோரும் சுரங்கத்துக்குப் போய் விட்டால் மற்ற வேலைகளுக்கு யார் இருக்கிறார்கள்? எனக்கு வயதாகி விட்டது. எனக்குப் பிறகு இந்த வேலைக்கு ஒருவரும் இல்லை. நீ விரும்பினால் உனக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்கிறேன்"

"ரொம்ப சந்தோஷம், ஸார்!" என்றான் முனுசாமி.

உபாத்தியாயர் அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்று புத்தகங்களைக் கொடுத்தார்.

வீட்டிற்கு வந்ததும் அப்பாவிடம் புத்தகங்களைக் காண்பித்து, "அப்பா, நான் சுரங்கத்திலே வேலை செய்யப் போவதில்லை. உபாத்தியாயர் வேலைக்குத்தான் போகப் போகிறேன். இதோ பார், படிக்கப் புத்தகங்கள்!" என்றான்.

"முனுசாமி, இதென்ன பைத்

தியக்கார எண்ணம்! நம் குடும்பம் நான்கு தலைமுறைகளாக சுரங்கத்தில் வேலை செய்து வருகிறது. நமக்கு அதுதான் ஜீவன். நீ சுரங்கத்தில் வேலைக்குப் போகவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. உன் அம்மாவும் அதையே விரும்புகிருள். வீணுக மனதைக் கெடுத்துக் கொள்ளாதே!'' என்ருர் அவன் தகப்பனர்.

''இல்லை அப்பா, நான் சுரங்கத்தில் வேலை செய்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறேன், அப்பா'' என்ருன், முனுசாமி.

அவருக்குக் கோபம் வந்து விட்டது. அவனுடைய புத்தகங்களைப் பிடுங்கி அடுப்பில் எறிந்தார்.

''மரியாதையாய் என் வார்த்தைக்கு அடங்கி நட'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

முனுசாமியின் உற்சாகம் குறைந்து விட்டது. இருந்தாலும் மனம் தளரவில்லை. தன்னல் முடிந்தவரை தன் எண்ணத்தை நிறைவேற்றுவதெனத் தீர்மானித்தான்.

நாட்கள் நகர்ந்தன. யாரும் எதிர்பாராத ஆபத்து ஒன்று நெருங்கியது. சுரங்கத்தில் வேலை குறைந்து விட்டது. எவ்வளவு நாட்கள்தான் வெட்டி எடுப்பது? குறைந்து விடாதா? அக்கம் பக்கங்களில் இருந்த சுரங்கத்தை மூடி விட்டார்கள்.

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிட்டது. தொழிலாளர்கள் வேலையில்லாமல் தெரு முனைகளில் கூடி சோம்பேறிகளாய்க் காலம் கழித்தனர்.

இதைக் கண்ட முனுசாமிக்கு ஒரு பக்கம் வருத்தம்; ஆனலும், இனி யாரும் தன்னை சுரங்கத்தில் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்த முடியாதல்லவா என்பதை நினைத்து மகிழ்ச்சியடைந்தான்.

அவன் தகப்பனர் வேலைசெய்து வந்த சுரங்கத்திலும் ஆட்களைக் குறைக்க ஆரம்பித்தனர். ஒரு நாள் அவன் தகப்பனருக்கும் வேலை போய்விட்டது! இனி அவர்கள் குடும்பம் எப்படிப் பிழைப்பது?

சாப்பாடு இல்லாமல் மூன்று நாட்களாக அவர்கள் பட்டினி! பணம் இருந்தால்தானே அரிசி, சாமான்கள் வாங்க முடியும்? அவன் தகப்பனர் அலையாத இடம்இல்லை. வேலை கிடைக்க வில்லை. குடும்பம் ரொம்பவும் கஷ்டப்பட்டது.

அன்று பக்கத்து வீட்டுக்காரன் முனுசாமியின் தகப்பனரிடம் ஓடி வந்தான். ''அண்ணே, சின்னச் சுரங்கத்திலே பையன்களை மட்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளுகிருர்களாம். முனுசாமியை அனுப்பி வையேன். வேலை கிடைத்தாலும் கிடைக்கலாம்'' என்ருன்.

''சின்னச் சுரங்கமா? ஐயோ! ஆறுமைல் தூரம்போகவேண்டுமே! அவனல் முடியாது'' என்ருள் முனுசாமியின் தாயார்.

திண்ணையில் உட்கார்ந்திருந்த முனுசாமி இதைக் கேட்டு 'விருட்' டென்று எழுந்தான். உள்ளே சென்ருன். குடும்பம் படும் கஷ்டம் அவன் உறுதியைக் குலைத்து விட்டது.

''அப்பா, நான் வேலைக்குப் போகிறேன், அப்பா! என்னை அழைத்துச்செல்லுங்கள்'' என்ருன்.

அப்போது, அவன் பார்வையைக் கண்ணீர் மறைத்தது!



கரு நாகம்

வி. ஜானகிராமன்

மணி வழக்கம்போல் கடற்கரையில் உட்கார்ந்துகொண்டு கடலைப் பார்த்தவண்ணம் இருந்தான். அப்பொழுது திடீரென்று பின்னால் 'கண்ணா! கண்ணா!' என்ற குரல் கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

சுமார் 35 வயது மதிக்கத்தகுந்த ஒருவர் சாமியாரைப்போல் காவி உடை அணிந்திருந்தார். அவர் மணியிடம் ஓடிவந்து, "கண்ணா, நான்தான் உன்னைக் கொன்றேன். நான் கொலைகாரன்; பெரும்பாவி!" என்று சொல்லி மணியைக் கட்டியணைத்துக்கொண்டார்.

மணி திடுக்கிட்டான். மிகுந்த சிரமத்துடன் தன்னை விடுவித்துக் கொண்டு, "ஐயையோ! நான் மணியல்லவா?" என்றான்.

உடனே, "ஆம், நீ கண்ணன் அல்ல. அவனை நான்தான் கொன்று விட்டேனே!" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டார்.

மணிக்கு அவரைப்பற்றியும், அவர் சொன்ன கண்ணனைப் பற்றியும் அறிய ஆவல் உண்டாயிற்று. 'இவரைக் கேட்கலாமா?' என்று அவன் நினைத்தான். ஆனால், அதற்குள் அவர் வெகுதூரம் போய்விட்டார். அன்று முழுதும் அவன் மனம் சரியில்லை.

* * *

மறுநாள் சனிக்கிழமை. மணியின் வீட்டில் யாரும் சாப்பிடவில்லை. ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒரு சாமியாரை அழைத்து வந்து அவரோடுகூடச் சாப்பிடுவது அவன் வீட்டார் வழக்கம். ஆகையால், மணியின் அப்பா வாசலில் நின்றபடி யாராவது சாமியார் வருகிறாரா என்றுபார்த்துக்கொண்டிருந்தார். சற்று நேரத்தில் சாமியாருடன் உள்ளே நுழைந்தார்.

சாமியாரைப் பார்த்ததும் மணி ஆச்சரியப்பட்டுப் போனான். ஏனென்றால், நேற்றுக் கடற்கரையில் பார்த்தானே, அதே சாமியார்தான் அப்பாவுடன் வந்தவர். அந்தச் சாமியார் மிகவும் அமைதியாக இருந்தார்.

கண்ணனைப்பற்றியும் சாமியாரைப்பற்றியும் உடனே கேட்டுவிட வேண்டுமென மணிக்கு ஆசை. ஆனாலும், சாப்பிட்டுவிட்டுக் கேட்கலாம் என்று நினைத்துப் பேசாமல் இருந்தான்.

சாப்பாடு முடிந்தது. சாமியார் சாவதானமாக உட்கார்ந்து வெற்

மோட்டாரில் அடிபட்ட ஒருவரை ஆம்புலன்ஸ் காரில் வந்தவர்கள் தூக்கிச் செல்கிறார்கள்: "ஏனப்பா, உன் பெயரென்ன? இந்த விபத்துப் பற்றி உன் மனைவிக்கு அறிவிக்க வேண்டும். சொல், சீக்கிரம்"

"என் பெயரா? அது என் சம்சாரத்துக்குத் தெரியாதா என்ன? நீங்கள் ஒன்றும் சொல்லவேண்டாம்"

றிலைப்போட்டுக் கொண்டிருந்தார். அப்போது மணி மெதுவாக ஆரம்பித்தான். "சாமியாரே, உங்களைப் பற்றிக் கொஞ்சம்தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆசை. தெரிந்துகொள்ளலாமோ?" என்றான்.

"ஓ! தாராளமாக நானே என் [illegible]தை முழுவதையும் கூறிவிடுகிறேன், கேள்.

"நான் ஒரு டாக்டர். எனக்குக் கண்ணன் என்ற ஒரு பையன் இருந்தான். ஒருநாள் கண்ணன் பேய் அறைந்தவன்போல் களையிழந்த முகத்துடனும், பீதியுடனும் என்னிடம் ஓடிவந்தான். 'என்னடா கண்ணா?' என்றேன். 'அப்பா! இன்றைக்கு நம் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு கருநாகம் எங்கிருந்தோ 'சர்' என்று வந்தது. உடனே, நான் பக்கத்திலிருந்த ஒரு கல்லை எடுத்து அதன் தலையைப் பார்த்துப் போட்டேன். ஆனால், நான் போட்ட கல் தலையில் விழவில்லை. வாலில் விழுந்து வால் மட்டும் தனியாகத் துண்டிக்கப் பட்டுவிட்டது. ஆனாலும், பாம்பு ஓடிவிட்டது!' என்று கூறினான். கூறிவிட்டு, 'ஏனப்பா! அந்தப் பாம்பு மறுபடியும் வந்து என்னைக் கடிக்காமல் போகாதாமே! சீனுவின் பாட்டி சொன்னாள். அதைக் கொல்லாமல் விட்டது தப்பாம்! இனி எப்பொழுதாவது வந்துவிடுமாமே! உண்மையா?' என்று திகிலுடன் கேட்டான்.

"இதைக்கேட்டதும் நான் சிரித்தேன். நாகம் மறுபடியும் வந்து பழி தீர்த்துக்கொள்ளும் என்று தான் சொல்கிறார்கள். ஆனால் அதில் எனக்குப் பூரணமாக நம்பிக்கை ஏற்படவில்லை. இருந்தாலும், கண்ணனுக்கு அதெல்லாம் பொய் என்று கூறி சமாதானப்படுத்தி, படுக்கைக்கு அனுப்பினேன். ஆனால், அவன் அன்று இரவு முழுவதும் அதே நினைவாக 'பாம்பு! பாம்பு! ஐயோ, பாம்பு!' என்று பயத்தால் கத்திக்கொண்டிருந்தான். அவன் உடல் ஜுரத்தால் கொதித்தது. இப்படி நான்கு நாட்கள் கழிந்தன.

"அன்று, கண்ணனின் உடல்நிலை முன்னிலும் மோசமாக இருந்தது. காய்ச்சல் கொஞ்சமும் விடவில்லை. அவன் பயத்தைப் போக்க மனோதத்துவப்படி என்ன செய்யலாம் என்று யோசித்தேன்.

"கடைசியில், எனக்கு ஒரு யோசனை தோன்றியது. ஒரு 'ரப்பர்' பாம்பை வாங்கி அதை அவன் படுக்கும் கட்டிலுக்கு அருகில் அவனுக்குத் தெரியாமல் வைத்து விடவேண்டும். அவன் திடீரென்று எழுந்து ரப்பர் பாம்பைப் பார்த்துக் கதறுவான். உடனே, நாம் அவன் அறைக்கு ஓடி, ஒரு தடியினுல் அந்த ரப்பர் பாம்பைக் கண்ணனுக்கு எதிரிலேயே அடித்துக் கொல்வதுபோல் பாசாங்கு செய்து அதைத் தூக்கி எறிந்துவிடலாம். பிறகு கண்ணனின் பாம்புப் பயம் பறந்துவிடும் என்று முடிவு செய்தேன்.

"அவ்வாறே அன்று இரவு கண்ணனின் அறையில் அவன் சற்றுத் தூங்கும் சமயத்தில் ரப்பர் பாம்பை வைத்துவிட்டு, நான் பக்கத்து அறையில் ஒரு தடியுடன் தயாராகக் காத்திருந்தேன். சற்று நேரத்தில், 'ஐயோ! பாம்பு! பாம்பு!' என்ற கதறல் சப்தம் கேட்டது. உடனே, என் திட்டம் வெற்றிபெற ஆரம்பித்துவிட்டது என்ற எண்ணத்துடன் உள்ளே ஓடினேன். அப்பொழுது கண்ணன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"நான் அவனைச் சற்றும் கவனிக்காமல் திட்டப்படி முன்பே வைக்கப்பட்ட ரப்பர் பாம்பின் மேல் நான்கு அடி அடித்துவிட்டு அதைக் கையில் எடுத்துக்கொண்டு, 'கண்ணு! இதோ அந்தப் பாம்பு செத்துவிட்டது. இனி, பயப்பட வேண்டாம். நான் இதைக் கொன்றுவிட்டேன். இதோ பார்!' என்று கூறிக்கொண்டே அவன் பக்கம் திருப்பினேன்.

"அப்பொழுது அவன் தலை படுக்கையில் சாய்ந்துவிட்டது. அருகில் சென்று பார்த்தேன். ஐயோ! அவன் மூச்சு நின்றுவிட்டது! ஆம், நான் வைத்திருந்த ரப்பர் பாம்பைக் கண்டு தன்னிடம் அடிபட்டுச் சென்ற பாம்புதான் வந்திருக்கிறது என்ற பயத்தில் அவன் மடிந்துவிட்டான்! நான் இப்படி ஆகும் என்று எதிர்பார்க்கவே இல்லை! உடனே, நான் காட்டுக் கத்தாகக் கத்தினேன். அப்பொழுது வீட்டிலுள்ள எல்லோரும் எழுந்து ஓடிவந்தார்கள். ஆனல், என் மனச்சாட்சி என்னை வதைத்தது. 'அவனைக் கொன்றது நீதான்! உன் அவசரத் திட்டத்தினுல்தான் மடிந்தான் உன் மகன்! நீயே கொலைகாரன்! நீ டாக்டர் அல்ல! ஓர் உயிரைக் கொன்ற மகா பாதகன்!" என்று என் உள்ளம் என்னைக் குத்திக் காட்டியது.

"அடுத்த கணம் மயங்கிக் கீழே விழுந்துவிட்டேன். விழித்தெழுந்தபொழுது, ஆஸ்பத்திரியில் இருப்பதை உணர்ந்தேன். மீண்டும் மீண்டும் அதே சொற்கள் என்னை வாட்டி வதைத்தன. அதே சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. உடனே ஆஸ்பத்திரியைவிட்டு வெளியே ஓடிவந்தேன். அன்றையிலிருந்து இன்றுவரை நான் கொலைகாரனுக, பைத்தியக்காரனுகத் திரிகின்றேன்" என்று அவர் கூறிவிட்டு, "கண்ணு! கண்ணு! உன்னைக் கொன்றவன் நான்தான்! நானேதான்!" என்று கதறியபடியே எங்கள் வீட்டைவிட்டு வெளியேறினுர். ★

ஜோடி பங்களா

ரேவதி

'ஜோடி பங்களா' என்றாலே எல்லோருக்கும் தெரியும். இரண்டு பங்களாக்களின் காம்பவுண்டுச் சுவரும் மஞ்சள் நிறம் தான். இரண்டிலும் தென்னை மரங்கள் இருந்தன. அதுபோலவே உள்ளமைப்புகளும். இந்தக் காரணங்களினாலேயே அவைகளுக்கு 'ஜோடி பங்களா' என்ற பெயர் வந்ததாம்.

இதில் மற்றோர் அதிசயம் என்னவென்றால், இரண்டு வீட்டில் குடியிருந்தவர்களும் ஒற்றுமையாக இருந்ததுதான்! ஒன்றில் கமலாவும் அவள் தாய் தந்தையும், மற்றொன்றில் விமலாவும் அவள் தாய் தந்தையும் வசித்து வந்தனர். கமலாவும் விமலாவும் ஒரே உயரம்; ஒரே மாதிரி உடை உடுத்துவர். இவர்களைப் போலவே கமலாவின் தாயும், விமலாவின் தாயும் சிநேகமாக இருந்தனர். கமலாவின் தந்தையும், விமலாவின் தந்தையும் நெருங்கிய நண்பர்களாயிருந்தனர்.

கமலாவின் அப்பா மார்க்கெட்டுக்குப் போய் கத்தரிக்காய் ஒரு வீசை வாங்கினால், விமலா வீட்டுக்கு அரை வீசை வந்துவிடும். அதைப் போலவே விமலாவின் ஊரிலிருந்து பலகாரங்கள் வந்தால் சரிபாதி கமலா வீட்டுக்குப் போய் விடும்.

இந்த ஜோடி பங்களாவில் வசித்த இவர்களது நட்பையும், ஒற்றுமையையும் கண்டு ஊரே அதிசயித்தது.

இரண்டு வீடுகளுக்கும் பொதுவில் ஒரு கிணறு இருந்தது. அந்தக் கிணறு விமலா வீட்டில் பாதிப் பாகமும் கமலா வீட்டில் பாதிப் பாகமுமாக இருந்தது. ஒரு பாகத்தில் ஒருவரும் மற்றொரு பாகத்தில் இன்னொருவருமாக அதை உபயோகித்து வந்தனர்.

அன்று விமலாவின் தாய் ஒரு பக்கம் இருந்து குடத்தைக் கட்டித் தண்ணீர் இழுத்தாள். அதே சமயம் கமலாவின் தாயும் இழுத்தாள். இரண்டு குடங்களும் நன்றாக மோதிக்கொண்டன. அது மட்டுமா? இரண்டு கயிறுகளும் முறுக்கிக்கொண்டன. இந்தப் பக்கம்

விமலாவின் தாய் இழுக்க, அந்தப் பக்கம் கமலாவின் தாய் இழுக்க, கமலா வீட்டுக்குடம் நன்ருக நசுங்கி விட்டது.

இதிலிருந்துதான் சண்டை ஆரம்பமாயிற்று. கமலாவின் தாயார், குடத்தை விமலாவின் தாய்தான் சீர்செய்து தரவேண்டும் என்று கூறினுள். விமலாவின் தாய் மறுத்தாள்.

"தரித்திரம். இந்தாடி கமலா, இனிமேல் விமலாகூடச் சேர்ந்தாயோ, காலையும் கையையும் முறித்து அடுப்பிலே வைத்துவிடுவேன். சனியன்கள்! குடத்தை எப்படி அப்பளாம்போல் நசுக்கி விட்டதுகள். அசல் அவள் மூஞ்சி மாதிரியே இருக்கிறது!" என்று கமலாவிடம் நசுங்கிய குடத்தைக் காட்டித் தடையுத்தரவு பிறப்பித்தாள், அவள் அம்மா.

அது போலவே, "இந்தாடி விமலா, பக்கத்து வீட்டு சனீஸ்வரன்கூடச் சேர்ந்தாயோ, பல்லை எண்ணிக் கையிலே கொடுத்து விடுவேன். பீடைகள்! என்றைக்கு ஒழியுமோ" என்று விமலாவிடம் அடுக்கினுள் அவள் தாய். இதுபோலவே இரண்டு தந்தைகளுக்கும் உத்தரவுகள் பிறந்தன. ஒரு தந்தை கிழக்கே நோக்கினுல் மற்றவர் மேற்கே நோக்குவார். இதிலிருந்து காலையில் கிணற்றடிச் சண்டை ஒரு வழக்கமாகிவிட்டது. அக்கம் பக்கத்தாருக்கு இது ஆனந்தத்தைக் கொடுத்தது.

கமலாவின் அம்மா 100 ரூபாயில் புடவை வாங்கினுல், விமலாவின் அம்மா 150 ரூபாய்க்குப் புடவை வாங்குவாள். விமலாவின் அம்மா வாசலில் ஒரு வீசை கத்தரிக்காயை நான்கணுவுக்கு வாங்கினுல், உடனே கமலாவின் அம்மா அதே ஆளிடம் வீசை ஐந்தணு வீதம் இரண்டு வீசை வாங்குவாள். இவர்கள் வீட்டில் பிச்சைக்காரனுக்குப் பழையது போட்டால், உடனே அவர்கள் வீட்டில் புதிதாகச் சமைத்த சாதம் போடுவார்கள். இவை மட்டுமா? கமலா இரட்டைப் பின்னல் போட்டுக் கொண்டால், உடனே விமலாவின் அம்மா விமலாவைப் பிடித்து உட்காரவைத்து மூன்று பின்னல்கள் பின்னுவாள்.

விமலா ஐந்து ரூபாய் கொடுத்து ஹிந்தி சொல்லிக் கொண்டால், உடனே பத்து ரூபாய் கொடுத்து கமலாவுக்கு ஹிந்தி சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்வாள் அவள் அம்மா.

இவர்கள் வீட்டில் 200 ரூபாய்க்கு ரேடியோ வாங்கினுல், உடனே அவர்கள் வீட்டில் 400 ரூபாய்க்கு ரேடியோ வாங்குவார்கள். இது போலவே இரண்டு குடும்பங்களும் போட்டி போட்டுச் சண்டையை வளர்க்கலாயின. இதனுல் ஊரில் உள்ள சிலருக்கு மிகவும் அனுகூலமாக இருந்தது. கமலாவின் அம்மாவிடம் விமலா வீட்டை இகழ்ந்தும், விமலா வீட்டில் கமலா வீட்டை இகழ்ந்தும் அவர்கள் இருவருடைய உதவியைப் பெற்றுக்கொண்டனர்.

இப்படி வெளவால் வேலை செய்து ரசித்தவர்களில் சுப்புப் பாட்டியும் ஒருத்தி. விமலாவின் அம்மாவிடம் போவாள்; கமலா வீட்டில் மசால் வடையும், ஜாங்கிரியும் தனக்குக் கொடுத்தார்க

ளென்பாள். உடனே விமலாவின் தாய் மசால் தோசையும், பாதம் அல்வாவும் செய்து கொடுத்து, தான் அவர்களை விட மட்டமில்லை என்று நிரூபிப்பாள். மறுநாள் கமலா வீட்டுக்குப் போய் இதே போல் சொல்லுவாள். இப்படியே செய்து அந்த சுப்புப் பாட்டி இரு குடும்பங்களின் உதவியையும் பெற்றுவந்தாள்.

எவ்வளவுதான் பெற்றோர்கள் போட்டி போட்டுச் சண்டையிட்டுக்கொண்டாலும், கமலாவும் விமலாவும் சண்டை போடவில்லை. பள்ளியில் பேசிக்கொண்டனர். அவர்களுக்குத் தங்கள் பெற்றோர்கள் இப்படி இருப்பது பிடிக்கவே இல்லை. எப்படியாவது இரண்டு குடும்பங்களையும் ஒன்று சேர்க்க எண்ணினார்கள். அவர்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கடைசியில் ஒரு யோசனை தோன்றியது. அதன்படியே நடக்கத் தீர்மானித்தார்கள்.

அன்று மாலை கமலா வீட்டினுள் நுழைந்ததும் அவள் அம்மா "ஐயையோ, இது என்னடி? கார், கீர் மேலே எறிவிட்டதா



"என்ன?" என்று பரபரப்புடன் கேட்டான். கமலாவின் கையிலும் காலிலும் கட்டுகள் காணப்பட்டன!

"ஒன்றுமில்லையம்மா. நீ தானே சொல்லியிருக்கிறாய், விமலா வீட்டில் எது நடந்தாலும் அதைப் போல் இரண்டுமடங்காக நம் வீட்டில் நடக்கவேண்டும் என்று? அது மாதிரியே நான் செய்தேன். இன்று விமலா பள்ளியிலிருந்து வரும் போது சுப்புப் பாட்டியின் பேரன் அவள் மீது சைக்கிளை எற்றிவிட்டான். அவளுக்குக் காயம் பட்டது. நான் மட்டும் சளைத்தவளா என்ன? உடனே அங்கு வந்துகொண்டிருந்த ஒரு மோட்டாரின் குறுக்கே விழுந்தேன். ஆனால் அம்மா, விமலாவைவிட எனக்கு இரண்டே இரண்டு காயங்கள்தான் அதிகம். சுப்புப் பாட்டி பேரனை விமலா நன்றாக உதைத்தாள். நாம் மட்டும் சளைத்தவர்களா என்ன? சுப்புப் பாட்டியையே நாம் நன்றாக உதைக்க வேண்டும்" என்று கூறி முடித்தாள் கமலா. இதையெல்லாம் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த சுப்புப் பாட்டி உடனே அங்கிருந்து மெதுவாக நழுவலானாள்.

விமலா வீட்டில் அவள் காலடி எடுத்து வைக்கும்போது, "அம்மா, சுப்புப் பாட்டி வேண்டுமென்றே அவள் தன் பேரனை அனுப்பி என் காலில் சைக்கிளை எற்றச் சொல்லியிருக்கிறாள். வரட்டும், அவளைச் சும்மா விடக்கூடாது. போலீஸில் பிடித்துக் கொடுத்து விடவேண்டும்" என்று சுப்புப்பாட்டி வருவதை அறிந்து கொண்டே விமலா அம்மாவிடம் கூறினாள்.

சுப்புப் பாட்டி இதைக் கேட்டதும் வந்த வழியே திரும்பி நடக்கலானாள். உடனே விமலா, "அம்மா அம்மா, அதோ பார் சுப்புப் பாட்டி

நழுவுகிறாள்'' என்றாள்.

''பாட்டி, இங்கே வா பாட்டி. உன்னை ஒன்று கேட்க வேண்டும்'' என்றாள் விமலாவின் அம்மா.

''வேண்டாம் உங்கள் சிநேகம்'' என்று கூறிக்கொண்டே நடந்தாள் பாட்டி.

விமலாவின் தாய் வாசல் வரையில் வந்து பாட்டியை வையலானாள். ''அட சனியனே! எங்கள் வீட்டிலே நன்றாக வேண்டிய மட்டும் சாப்பிட்டாயே, அப்பொழுது மட்டும் சிநேகம் வேண்டியிருந்ததா?'' என்று கேட்டுக்கொண்டே திரும்பினாள். அதே சமயம் கமலாவின் தாய் அடுத்த வீட்டு வாசலில் நிற்பதைக் கண்டதும் தன்னை அறியாமல் அவளிடம், ''பாருங்கோ மாமி இந்த அக்ரமத்தை. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்கிறது இந்தக் கிழட்டுப் பிணம்'' என்று திட்டினாள்.

''ஆமாம் மாமி, எங்கள் வீட்டிலேகூட வேண்டியமட்டும் சாப்பிட்டுவிட்டு இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி வருகிறாள். பொல்லாத விஷப்பூண்டு!'' என்று ஒத்தூதினாள் கமலாவின் தாய். இருவரும் மாறி மாறிச் சுப்புப் பாட்டியைத் திட்டிக்கொண்டிருந்தனர். இந்தக் கூட்டு முயற்சியில் அவர்கள் இருவருக்கும் ஏற்பட்டிருந்த சண்டை மறைந்தது. நட்பு மறுபிறவி எடுத்தது.

உடனே ''என் மாமி, உங்கள் கமலாவின்மீது சுப்புப் பாட்டியின் பையன் சைக்கிளை ஏற்றி விட்டானாமே...!'' என்று கூறுவதற்குள்... ''என்ன, என்ன! விமலாவின் மீதல்லவா சைக்கிள் ஏறியது என்று கமலா சொன்னாள்! அப்படியானால் யார் மீது கார் ஏறியது?'' என்றாள் கமலாவின் தாய்.

அப்போது கமலாவும் விமலாவும் அவர்கள் முன் ஓடிவந்து தங்கள் மேலுள்ள கட்டுகளை அவிழ்க்கலாயினர். அவர்கள் உடலில் ஒரு காயமும் இல்லை. இரு அம்மாக்களும் விழித்தனர். இரு பெண்களும் சிரித்தனர்! இப்பொழுதுதான் இரண்டு அம்மாக்களும் விஷயத்தை அறிந்து கொண்டனர். குழந்தைகளுக்கு இருக்கும் அறிவுகூடத் தங்களுக்கில்லையே என்று குறைப்பட்டனர்.

மறுநாள்—

''மாமி, நீங்கள் முதலில் தண்ணீர் இழுத்துக்கொள்ளுங்கள். அப்புறம் நான் இழுத்துக் கொள்கிறேன்'' என்றாள் கமலாவின் அம்மா.

''பரவாயில்லை. நீங்களே முதலில் இழுத்துக்கொள்ளுங்கள்'' என்றாள் விமலாவின் அம்மா.

''அம்மா, கமலாவுக்கு இரட்டைப் பின்னல் போட்டிருக்கிறார்கள்'' என்றாள் விமலா.

''அதுமாதிரியே நீயும் போட்டுக்கொள்'' என்றாள் அவள் அம்மா.

''எங்கள் வீட்டிலே ஒரு வீசை கத்தரிக்காய் வாங்கி வந்தார்கள். இந்தாங்கோ உங்களுக்கு அரை வீசை'' என்றாள் கமலாவின் அம்மா. அது போலவே விமலாவின் அம்மாவும் அரை வீசை உருளைக்கிழங்கு கொடுத்தாள்.

பழையபடி 'ஜோடி பங்களா'வில் ஒற்றுமை நிலவ ஆரம்பித்தது. இனி ஒற்றுமையைக் கலைக்க ஆயிரம் சுப்புப் பாட்டிகள் வந்தாலும் முடியவே முடியாது! ★

தங்க வளையல்

ஹரிஹரன்

பொங்கல் நெருங்கிவிட்டது என்பதை ஒவ்வொரு வீட்டிலும் 'பளிச்'சென்று தெரிந்த புதிய சுண்ணும்புப் பூச்சும், செம்மண் பட்டைகளும் அறிவித்தன. வெய்யில் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருந்தது. ஓரிரண்டு நாய்களைத் தவிர, வேறு ஜீவன்களின் நடமாட்டமே தெருவில் இல்லை. அந்த வேளையில்.........

"வளையல், வளையல், பம்பாய் வளையல்!..." என்ற குரல் தெருவில் கேட்டது. ஒரு வளையல்காரச் செட்டி, பலவித வளையல்கள் கொண்ட ஒரு மூட்டையைத் தோளில் போட்டுக் கொண்டு போய்க்கொண்டிருந்தான்.

"மீரா, அவனைக் கூப்பிட்டு வேண்டுமானால் வளையல் வாங்கிக் கொள்ளம்மா. பண்டிகை நெருங்க நெருங்க இன்னும் விலை அதிகமாகும். உம்...உன் அக்கா இருந்தால் வீடு இப்படியா இருக்கும்...?" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் அம்மா.

மீரா, வளையல்காரனைக் கூப்பிட்டாள். தனது கையிலிருந்த தங்கவளையல் ஒன்றைக்கழற்றி, அதன் அளவுக்கு இரண்டு டஜன் பம்பாய் வளையல்களை வாங்கிக் கொண்டாள். வளையல்காரன் பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்று விட்டான்.

நேரம் சென்றுகொண்டே இருந்தது. ஏதோ நினைத்துக்கொண்டிருந்தமீரா, தனது வலது கையைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

உடனே, "அம்மா, என்னுடைய தங்கவளையலைக் காணவில்லை! அளவுக்காக வளையல்காரனிடம் கொடுத்தேன். அவன் அதைத் திருப்பியே கொடுக்கவில்லை!" என்று அலறினாள்.

"ஐயையோ, அடி பாவிப் பெண்ணே! உன் அக்கா நினைவாக அது ஒன்றுதானேடி இருந்தது! 100 ரூபாய் மதிப்புள்ளவளையல்போய்விட்டதே!' என்று அலறினாள் அம்மா.

"அடி பாவிப் பெண்ணே, உன் அக்கா நினைவாக அது ஒன்றுதானே இருந்தது..." என்ற அம்மாவின் அலறல் மீராவின் காதுகளில் அலை போல் வந்து மோதியது. அவள் மனம் ஒரு வருஷத்திற்கு முன்பு தாவியது.

தாராவும், மீராவும் பெற்றோர்களின் செல்வக் குழந்தைகள். தாரா மூத்தவள்; மீரா இளையவள். இருவரும் இரண்டு தங்கக் கம்பிகள். குணத்தில் மேம்

பட்டு விளங்கிய இருவரும் ஒரே மாதிரி உண்டனர்; உடுத்தனர்; உறங்கினர்.

வடநாட்டிலிருந்து லீவுக்கு வந்திருந்த அவர்கள் மாமா, குணக் குன்றுகளான இரண்டு சகோதரிகளையும் கண்டு களிப்புற்று, ஒவ்வொருவருக்கும் ஒரு ஜதை தங்க வளையல்களை-அவர்கள் பெயர் பொறித்த வளையல்களைப் பரிசளித்துச் சென்றார்.

பொங்கலன்று, புத்தாடை உடுத்துத் தங்க வளையல்களை அணிந்து கொண்டு, மாலையில் பெற்றோர்களோடு படகில் சென்றார்கள் இருவரும். ஆற்றில் பிரவாகம் கரை புரண்டோடிக் கொண்டிருந்தது.

"ஐயோ சாமி, முதலை...!" —படகோட்டி பயத்தோடு கத்தினான். எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். அதற்குள்...

"சடார்!"

பலம் பொருந்திய, நீண்டு வளர்ந்த தனது பின் பாகத்தால் முதலை படகை அடித்தது.

'குபுக்...'

படகு மூழ்கியது. தாராவைத் தவிர எல்லோரும் தப்பினர்.

அவளைத் தன்னுள் அடக்கிக் கொண்டு 'கல கல' வென்று சிரித்தபடி ஓடிய ஆற்றைக் கண்டு புலம்பினாள், அம்மா. மனம் பதறினாள் மீரா. அலறினார் அப்பா.

ஆற்றில் எவ்வளவோ தேடிப் பார்த்தும் தாரா அகப்படவில்லை. திருநாளான பொங்கலன்று நிகழ்ந்த இந் நிகழ்ச்சிக்குப் பிறகு, அவ்வூரில் இருக்



"டேய், நான் நாளை முதல் சமண மதத்தைத் தழுவப் போகிறேன்டா"

"ஏண்டாப்பா, அதிலுள்ள அஹிம்சை உனக்கு ரொம்பப் பிடித்து விட்டதோ!"

"அதெல்லாம் இல்லையடா. நாம் நேற்றுப் புத்தகத்தில் படித்தோமே, 'சமணர்கள் மாலை 6 மணிக்கே தூங்கி விடுவார்கள்' என்று. இப்போது நான் சமண மதத்தில் சேர்ந்து விட்டால், 6 மணிக்கே தூங்கி விடலாமல்லவா, படிக்காமல்!"

—மு. கணேசமூர்த்தி.

கப் பிடிக்காது. பட்டிக்காடான அந்தக் குக்கிராமத்தை வந்தடைந்தனர், அம்மா, அப்பா, மீரா மூவரும். தாராவைக் கண்டுபிடிக்க எவ்வளவோ முயற்சி செய்தார் அப்பா. ஆனால், ஒன்றும் பயனளிக்கவில்லை.

நாட்கள் உருண்டன. விளையாட்டுப்போல் ஏறக்குறைய தாரா சென்று ஒரு வருஷமாகப் போகிறது.

* * *

ஆற்றங்கரை மணல் பரப்பில் ஒரே கூச்சலாக இருந்தது. லாரியில், வரிசை வரிசையாக புலி, சிங்கம் போன்ற மிருகங்கள் கூண்டோடு வந்து இறங்கிக் கொண்டிருந்தன. ஐந்தாறு யானைகள் ஆற்றைக் கலக்கிக் கொண்டிருந்தன. அதையடுத்திருந்த ஒரு மாந்தோப்பில் நான்கைந்து சிறுமிகள் பூப்பறித்தும் மரமேறியும் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது—

வளையல் செட்டி ஒருவன் அந்த வழியாகப் போய்க்கொண்டிருப்பதைக் கண்ட அச்சிறுமிகள் அவனைக் கூப்பிட்டனர். அவன் அவர்களிடம் வந்து கடை பரப்பினான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினுசுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள்.

"ஏய், வளைச்செட்டி, இதை எங்கே திருடினாய்? உண்மையைச் சொல். இது தங்க வளையலாக்கும், தெரியுமா?" என்று அதட்டினாள் ரீடா என்ற பெண். ஆம், அவள் கையிலிருந்தது, மீரா பறிகொடுத்த அதே தங்க வளையல்தான்! அதுமட்டுமல்ல. அவள்தான் தாரா என்ற பெயரில் மீராவின் அக்காவாக இருந்தவள். ஆற்றில் மிதந்து வந்த அவளை, அந்த சர்க்கஸ் கம்

பெனி முதலாளி எடுத்து, அவளுக்கு ரீடா என்று பெயர் வைத்து, எல்லா சர்க்கஸ் வேலைகளையும் கற்றுக் கொடுத்து, அருமை பெருமையாக வளர்த்தார். அவளை வளர்ப்பதற்கு முன்பே, ஆள் அனுப்பி, அவளது அப்பாவை அழைத்து வரச் சொன்னர். ஆனல், போன ஆள், அவர்கள் ஊரைவிட்டுச்சென்றுவிட்டதாகச் செய்திகொண்டு வந்தான்.

ரீடா, மீராவின் பெயர் பொறித்திருந்த அந்தத் தங்க வளையலைக் கண்டதும், அது தனது தங்கையுடையதுதான் என்று அறிந்து கொண்டாள். 'இவன் இதை எடுத்த வீட்டைக் கூறினல் தன் தங்கை, பெற்றோர்கள் எல்லோரையும் கண்டு பிடித்து விடலாம்' என்ற எண்ணத்திலேயே அதட்டிக் கேட்டாள்.

வளையல் செட்டி உண்மையாகவே பயந்து விட்டான். அவன் அதை வேண்டுமென்று எடுத்து வரவில்லை. கைப் பிசகாகவே வந்துவிட்டது.

"இல்லையம்மா. நான் திருடவில்லை. கைப் பிசகாக வந்திருக்கிறது. இதோ, இப்பொழுதே கொண்டுபோய் வளையல் வாங்கிய வீட்டில் கொடுத்துவிட்டு எனது நாணயத்தைக் காப்பாற்றிக் கொள்ளுகிறேன்" என்று கூறி எழுந்தான்.

அவனை இருக்கச் சொல்லிவிட்டு, முதலாளியிடம் சென்று விஷயத்தைக் கூறி அனுமதி பெற்றுக் கொண்டு வளையல்



"நாராயணா, 'உடைந்த சாமான்களைப் பழுது பார்ப்பது எப்படி?' என்ற புத்தகத்தை புத்தக சாலையிலிருந்து எடுத்து வந்தோமே அதனல் ஏதேனும் உபயோகம் இருக்கிறதா?"

"இருக்கிறது, இருக்கிறது. இதோ பார். இந்த ஓட்டைச் 'செயருக்கு' அதைத்தானே முட்டுக் கொடுத்து வைத்திருக்கிறேன்!"

செட்டியோடு கிளம்பி விட்டாள் ரீடா என்னும் தாரா.

"மீரா!" என்று கூறிக் கொண்டே உள்ளே வந்த தாராவைக் கண்டதும் வியப்பினல் கிரீச்சிட்டாள் மீரா. விஷயத்தைக் கூறி தங்களை ஒன்று சேர்த்த தங்க வளையலையும் காட்டினள் தாரா.

வளையல்செட்டி, நிறைந்த சன்மானங்களோடு திரும்பினன்.

இப்பொழுது, மீராவும் தாராவோடு சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்து விட்டதாகக் கேள்வி! ○

தீபாவளி ஜோஸ்யம்

('சேது')

காட்சி-1

[தீபாவளிக்கு முதல் தினம். ராஜு கூடத்திலுள்ள ஒரு மேஜையின் மேல், காலை ஆட்டியவாறு உட்கார்ந்திருக்கிறான். அவன் அப்பா அன்றைய செய்தித்தாளைப் படித்துக் கொண்டிருக்கிறார். அம்மா உள்ளே பக்ஷண வகைகள் செய்வதில் ஈடுபட்டிருக்கிறாள். ஒரு தூணில் சாய்ந்தவாறு, ஒரு காலை நீட்டிக் கொண்டிருந்த அவன் பாட்டி ஏதோ மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருக்கிறாள். கலியாணமான அவன் அக்கா, ரயில்வே அட்டவணையைப் புரட்டிக்கொண்டிருக்கிறாள். அவன் தங்கை குஞ்சு எதையோ வெட்டி ஒட்டிக் கொண்டிருக்கிறாள்]

ராஜு: அக்கா! எனக்கு ஒரு வரம் கிடைத்திருக்கிறது; உனக்குத் தெரியுமோ?

அக்கா: [அலட்சியமாக] அதென்னடாப்பா, அப்படி ஒரு வரம்? நீ கடுந்தவம் ஏதாவது செய்ததாக எனக்குத் தெரியவில்லையே?

குஞ்சு: [அலட்சியமான குரலில்] வரங் கொடுத்தது யார்? நாடகத்தில் வேஷம் போட்டுக் கொண்டு வருகிறாரே சிவபெருமான், அவரா? அல்லது விஷ்ணுவா?

ராஜு: அதையெல்லாம் என்னால் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. நாளைக்குத் தீபாவளி

தினத்தில்மட்டும் நான் சொல்லப் போகும் ஜோசியங்கள் எல்லாம் பலிக்கப் போகின்றன ; வேண்டு மானல் பாருங்களேன் !

குஞ்சு : அடேயப்பா ! எல்லாம் தெரிந்த ஜோசியரே ! எங்கே சொல்லுங்கள், பார்ப்போம். நான் பரீட்சையில் 'பாஸ்' பண்ணு வேஞ, மாட்டேஞ ?

ராஜு : குஞ்சு, விஷயத்தை முழுவதும் கேட்காமல் நீ பாட்டுக் குப் பேசிக் கொண்டே போகி ருயே ! நீ 'பாஸ்' பண்ணுவாயா, 'பெயி'லாய்ப் போவாயா என்பதற் கெல்லாம் எனக்கு ஜோசியம் சொல்லத் தெரியாது. நாளைக்கு மட்டும் நடக்கப்போகும் சம்பவங் களைச் சொல்லக் கூடிய ஜோசியத் திறமைதான் எனக்கு வரமாகக் கிடைத்திருக்கிறது. அதுவும் ஒவ் வொருவருக்கு ஒவ்வொரு ஜோசி யத்துக்கு மேல் சொல்ல முடியாது. எங்கே கேளுங்கள்.

அக்கா : [அவனையே ஆச்சரி யத்தோடு பார்த்து] அட பைத்தி யம் ! எதையாவது உளறிக் கொட் டிக் கொண்டு காலத்தை வீணுக்கிக் கொண்டிருக்காதே, போ !

ராஜு : [ரோஷத்துடன்] யாரக்கா பைத்தியம் ! என் ஜோசியம் பலிக்காதென்ற எண்ணம்தானே உனக்கு ? அந்த உன் எண்ணத்திலே மண் ணைப் போடுகிறேன் ! பார் ! நீ 'ரயில்வே' கால அட்டவணையை எதற்காகப் பார்க்கிருய் ? என் அத்திம்பேர், நாளைக் காலை எந்த ரயிலில் வருவார், எத்தனை மணிக்கு வருவார் என்பதைத் தெரிந்து கொள்ளத்தானே ! இதோ அதற்கு ஒரு ஜோசியம் ! கேட்டுக் கொள் ['கிளிக்கண்ணி' மெட்டில் பாடு கிருன்]

வருவார் வருவாரென்று
வழிமேல் விழிவைத்தாய் நீ.
வரமாட்டார் உன் கணவர்—
அக்கா நீ
வருந்திப் பயன் என்னவோ ?

அக்கா : [சீற்றத்துடன்] என் னடா சொன்னுய் ? உன் அத்திம் பேர் வரமாட்டாரா ? மடப்பயலே ! விடியா மூஞ்சி ! வாயிலே வருகிற வார்த்தையைப் பார் ! தலைத் தீபா வளிக்கு அவர் வராமல் போனல் ? அபசகுனம் மாதிரி...மூதேவி ! [ராஜுவிடம் சென்று அவன் தலை யில் 'நறுக்' கென்று குட்டு வைக் கிருள்]

ராஜு : [சாந்தமாக] ஆத்திரப் படாதே, அக்கா ! உண்மையைச் சொன்னல் உனக்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது ?

அக்கா : [அளவு மீறிய கோபம் பொங்க] உண்மையா...? உன் ஜோசியமும், மண்ணுங்கட்டியும்...! போடா... புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தா லாவது உபயோகமாயிருக்கும்... ...போடான்னு...[அவனை மறுபடி யும் அடிக்கக் கையை ஓங்குகிருள்]

ராஜு : [தப்பி ஓடிக் கொண்டு] அக்கா, நான் சொன்னது ஒருக் காலும் பொய்யாகாது !

[அக்கா சீறி ஓடி வருகிருள் ; அவளுக்கு அழுகையாய் வரு கிறது]

குஞ்சு : [ஓடும் ராஜுவைப் பார்த்து] ராஜு ! எனக்கு

நாளைக்கு என்ன நடக்குமென்று சொல்லேன்; பார்ப்போம்!

['இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறான், பார்க்கலாம்' என்ற ஆவலில் அக்கா நின்று, அவனையே கவனிக்கிறாள். அப்பாவும் நடக்கும் ரகளையைக் கண்டு பேப்பரைத் தாழ்த்திக் கவனிக்கிறார்]

ராஜு: அருமைத் தங்கையே, உனக்கும் ஜோசியம் சொல்ல வேண்டுமா? சரி; இதோ கேள்! [பாடுகிறான்]

ஒளித்துநீ வைத்திருக்கும்
ஒருபொருள் நாளைக்காலை
வெளிப்படப் போகிறதே—
தங்கையே
மிரண்டு நீ சாகாதேடி.

குஞ்சு: [பயந்த குரலில்] என்ன? ஒளித்து வைத்திருக்கிறேனா? சரிதான்...! அக்கா சொல்வது சரிதான்! அசல் பைத்தியமேதான்! கீழ்ப்பாக்கத்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டியதுதான்!

ராஜு: தேவையில்லை, தங்கையே! எனக்கு ஒன்றுதான் சொல்லத் தெரியும். என் ஜோசியம் ஒருக்காலும் பொய்க்காது! நாளை நீயே பாரேன்!

அப்பா: டேய்! டேய்! என்னடா உனக்கு இன்றைக்கு?

ராஜு: ஒன்றுமில்லையப்பா! காசில்லாமல் ஜோசியம் சொல்லுகிறேன், அக்காளுக்கும் தங்கைக்கும். அவ்வளவுதான்!

அப்பா: போடா பொழுது போகாதவனே! பெரிய ஜோசியக்காரனென்ற எண்ணம் போலிருக்கிறது. மடையன்!

ராஜு: அப்பா! என் ஜோசியத்துக்கு நான் 'காரெண்டி'. நாளைக்குப் பலிக்காத போனால் என்னைக் கேளுங்கள்.

[அம்மா உள்ளேயிருந்து கரண்டியும் கையுமாக வருகிறாள்]

அம்மா: என்ன இங்கே ஏகச் சத்தம்?

அப்பா: உன் அழகுப் பிள்ளை எல்லாருக்கும் ஜோசியம் சொல்கிறானாம்! எங்கேடா ராஜு, எனக்கு நாளை நடக்கப் போவதைச் சொல், பார்ப்போம்! அது மட்டும் நாளைக்கு நடக்காமல் போகட்டும்; முதுகுத்தோலை உரித்து விடுவேன். ஜாக்கிரதை!

ராஜு: நடக்காத போனால் அப்படியே செய்து விடுங்கள், அப்பா! இதோ உங்களுக்கு ஜோசியம்! [பாடுகிறான்]

கோடிவேஷ்டி கட்டியே
கொண்டாடப் போவதில்லை.
நாடி தளர வேண்டாம்—
தந்தையே
நன்மை யுண்டாம் பிறர்க்கே.

அப்பா: [துள்ளி எழுந்தவாறு] என்ன, நான் புது வேஷ்டி கட்டிக் கொள்ள முடியாதா? போடா, முட்டாள்! உன் ஜோசியத்தின் அருமை இப்போதே தெரிந்து விட்டது. உப்புக்குக் கூடப் பிரயோஜனமில்லை, உன் மண்ணாங்கட்டி ஜோசியம்! நான் நேற்றுத்தான் முப்பது ரூபாய் போட்டு ஒரு ஜோடி வேஷ்டி வாங்கி வைத்திருக்கிறேன்; நீ இப்படி உளறுகிறாயே!

ராஜு: [பொறுமையாக] நன்றாகப் பொறுத்துப் பாருங்கள்,

அப்பா! என் ஜோசியம் ஒருக்காலும் பொய்க்காது!

அக்கா - குஞ்சு: [ஏகக் குரலில் ஆத்திரத்துடன்] ஜோசியமாம்! முழுக்க முழுக்கப் பொய்!

அம்மா: ஜோசியம் இன்னும் கேட்க வேண்டியவர்கள் நானும் உன் பாட்டியும் தான். எங்கே உன் பொய் ஜோசியத்தை எங்களுக்கும் சொல் பார்ப்போம்!

ராஜு: என் ஜோசியம் பொய் யல்ல; உண்மையிலும் உண்மை. இதை நீங்கள் நாளைக்குத் தான் உணருவீர்கள்; சரி அம்மா, கேள் உன் ஜோசியத்தை! [பாடுகிறான்]

நாளைத் தீபாவளியில்
நல்லதோர் நிகழ்ச்சியாம்.
காலை நிகழ்ச்சியதால்—
அன்னையே
களித்திடுவாய் நிஜமே.

அம்மா: [மகிழ்ச்சியுடன்] இதோ பாருங்கள், உங்களைத் தானே! என் ராஜுவைத் திட்டுகிறீர்கள்? அவன் நன்றாகத் தானே ஜோசியம் சொல்கிறான்?

குஞ்சு: அடேயப்பா! அம்மாவுக்கு இருக்கிற பரிவைப் பார்! தனக்கு நல்ல ஜோசியம் சொல்லி விட்டானும்; அதல்லவா அப்படிப் பேச வைக்கிறது, அம்மாவை!

பாட்டி: [குறுக்கிட்டு] ஏண்டாப்பா, கண்ணே ராஜு! இந்தக் கட்டைக்கு ஜோசியம், கீசியம் ஒன்றும் வேண்டியதில்லை! இருந்தாலும், உன் ஆசையைக் கெடுக்கக் கூடாதல்லவா? எங்கே எனக்கும் சொல்.

ராஜு: சொல்லுகிறேன், கேள் பாட்டி. [பாடுகிறான்]

ஆண்டவன் அருள் வேண்டி
அனுஷ்டானம் செய்பவளே,
வேண்டும் பொருள் காணமல்
—பாட்டியே
வீண்கதத்துக் கத்துவாயே!

பாட்டி: [குறுக்கிட்டு] அட, உருப்படாக் கழுதை! இப்படி ஏதாவது அபசகுனம் மாதிரி சொல்கிறதற்குப் பதிலாக 'ராமா ராமா' என்று பத்துத் தடவை சொன்னாலும் புண்ணியமா யிருக்குமே!

ராஜு: ஆத்திரப்படாதே பாட்டி! நான் சொன்ன ஜோசியம் எல்லாம் நடந்துதான் தீரும். பார்த்துக் கொண்டேயிருங்கள்!

[ராஜு கம்பீர நடையுடன் வெளியேறுகிறான்; அவனையே பிரமிப்புடன் பார்க்கிறார்கள் ஐவரும்]

காட்சி-2

[மறுநாள் தீபாவளி தினம். வாங்கிவந்த புது வேஷ்டியைப் பூஜைப் பலகையில் வைக்க, பீரோவைத் திறந்து கொண்டிருக்கிறார், அப்பா. ஒன்றுமே ஓடாது சோகத்துடன் நிற்கிறாள் அக்கா]

அக்கா: அப்பா! கடைசி ரயிலும் போய்விட்டது; வந்தால் இதில்தான் 'அவர்' வருவேனென்றார். இப்போது தலைத் தீபாவளிக்கு 'அவர்' வரவில்லை என்று தெரிகிறது. அந்த சேட்டைக்காரன் ராஜு சொன்னது பலித்தே விட்டது! எந்த நேரத்திலே சொன்னானோ! [வருத்தமுடன் இருக்கிறாள்]

அப்பா: [வேஷ்டி வைத்திருந்த பொட்டலத்தைத் திறந்தவர் திடுக்கிட்டுத் துள்ளி] ஐயையோ! என்ன, நான் இரண்டு கோடி வேஷ்டியல்லவா வாங்கினேன்...! இது பட்டுப் புடவையாக இருக்கிறதே!

அக்கா: [ஆச்சரியத்துடன்] வேஷ்டி புடவையாக மாறி விட்டதா... ஆச்சரியமாக இருக்கிறதே!

அப்பா: [ஏதோ நினைவுக்கு வந்தவராய்] இப்போது புரிகிறது. நேற்று நான் ஜவுளிக் கடையில் வேஷ்டிகள் வாங்கிக் கொண்டிருந்தபோது, பக்கத்தில் ஒருவர் சிவப்புப் பட்டுப்புடவை வாங்கிக் கொண்டிருந்தார்; இருவர் பொட்டலங்களும் மாறிப் போய் விட்டன. காரணம் இதுதான்! எப்படியோ, அந்தக் சுட்டிப் பயல் சொன்ன ஜோசியம் மாதிரி, இன்றைக்குக் கோடி வேஷ்டி கட்டிக் கொள்ள முடியாது!

[அம்மா கேட்டுக் கொண்டே வருகிறாள்]

அம்மா: அது மட்டுமா? அவன் எனக்கு யோகமிருக்கிறதாகச் சொன்னானே, அந்த ஜோசியமும் பலித்து விட்டது. இப்போது இந்தப் புடவை என்னைத் தானே சேரப் போகிறது! [சிரிக்கிறாள்]

அக்கா: தீபாவளிக்கு அம்மாவுக்கு இரண்டு புடவைகள்! அப்பா, அதனாலேதான் ராஜு உங்களுக்கு ஜோசியம் சொன்னபோது 'நீங்கள் வேஷ்டி யென்று நம்பியிருக்கிறதை அனுபவிக்கப் போகிறவர் வேறொருவர்' என்று சொன்னான்! இப்போது அதை அனுபவிக்கப் போவது அம்மா தானே!

[உள்ளே யிருந்து பாட்டி கூவிக் கூவிக் கத்துவதைக் கேட்டதும் எல்லோரும் அங்கே போகிறார்கள்]

பாட்டி: இந்த வீட்டிலே பாவம், புண்ணியம் என்பதெல்

லாம் கிடையவே கிடையாது! நாசமாய்ப் போக! வேறு யாருடனாவது, எதையாவது செய்துவிட்டுப் போகட்டுமே! இந்தக் கிழத்திடம் வந்துதான் விளையாட வேணுமா? ஏதோ கடைசி காலத்திலே 'ராமா' 'சிவா' என்று நல்ல பொழுதாய்ப் போக்கலாமென்றால், அதற்குமா இடைஞ்சல்? சீ... நல்ல வீடு...! நல்ல குடும்பம்...! நடக்கிறது ஒன்றும் நன்றாயில்லை!...

அக்கா: [குறுக்கிட்டு] என்ன பாட்டி, எதற்கு இந்தக் கூக்குரல்?

பாட்டி: [கடுங்கோபத்துடன்] என்னவா? இங்கே பழைய ராமர் படம் ஒன்றை ஒட்டி வைத்துக் கொண்டு, நான் பாட்டுக்குத் தானே ஜபம் செய்து கொண்டிருந்தேன்; அது பொறுக்கவில்லை யாருக்கோ! அந்த ராமர் படத்தை இப்போது காணோம்!

அப்பா: [மனத்திற்குள்] அந்தப் பயல் சொன்ன ஜோசியம் இதிலும் பலித்து விட்டது!

[இதற்குள் சமையலறையிலிருந்த குஞ்சுவின் இரும்புப் பெட்டியினுள் என்னவோ வெடிக்கும் சப்தம் கேட்கிறது. குஞ்சுவிடம் சாவியை வாங்கி, அப்பா பெட்டியைத் திறக்கிறார். உள்ளே பட்டாணி வெடிகள் வெடித்துக் கொண்டிருக்கின்றன]

அக்கா: [திடீரென்று திறந்திருந்தபெட்டியிலிருந்து எதையோ எடுத்தவாறு] அப்பா! இதோ பாரப்பா! குஞ்சுவின் கால் பரீட்சை 'பிராக்ரஸ் ரிபோர்ட்.' இதை எவ்வளவு நாளாக உங்களிடம் காட்டவில்லை, இந்தக் கள்ளி!

அப்பா: 'மார்க்'குகள் எப்படி?

அக்கா: தனித் தனியாக எதற்குச் சொல்லவேண்டும்? மொத்தத்திலே 'மார்க்' சூன்யம்தான்! இன்றைக்குத்தான் இவள் குட்டு வெளிப்பட்டது!

அப்பா: அந்தப் பயல் ராஜு சரியாய்த்தான் ஜோசியம் சொல்லியிருக்கிறான்!

[ராஜு வருகிறான்]

ராஜு: நான் சொன்ன ஜோசியங்கள் எப்படி?

அப்பா: [அவனைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே] அபாரம்! அபாரம்! அவ்வளவும் நூற்றுக்கு நூறு உண்மை! அது சரி, உனக்கு ஜோசியம் யார் சொல்லிக் கொடுத்தார்கள்?

ராஜு: [பலத்த சிரிப்புடன்] நான் சொன்னவைகள் அவ்வளவும் ஜோசியமில்லை அப்பா, ஜோசியமில்லை!

குஞ்சு—அக்கா: [திடுக்கிட்டு] ஜோசியமில்லையா? அப்படியானால் நீ சொன்னபடியே ஒவ்வொன்றும் நடந்ததே! அது எப்படி?

ராஜு: எல்லாம் இவ்வாறுதான் நடக்கும் என்ற யூகத்திலே சொன்னேன்!

அக்கா: [ஆவலுடன்] உன் அத்திம்பேர் வரமாட்டார் என்று அவ்வளவு நிச்சயமாக எப்படிச் சொன்னாய்?

ராஜு: நான் சொன்னால் கோபித்துக் கொள்ளக் கூடாது. அக்கா, நேற்று அத்திம்பேரிடமிருந்து உனக்கு வந்த போஸ்ட் கார்டை என்னிடம் கொடுத்து விட்டான், 'போஸ்ட் மேன்.'

அதில் அவர் 'தனக்கு வேலை அதிக மிருப்பதால், தீபாவளிக்கு வர இயலாது' என்று எழுதியிருந்தார்! அதை வைத்துக்கொண்டு தான் உன்னிடம் கதை விட்டேன்! இந்தா அந்தக் கடிதம்! [கடிதத்தைக் கொடுக்கிறான்]

குஞ்சு: என் குட்டு எப்படி வெளிப்படும் என்று அறிந்தாய்?

ராஜு: அதுவா? நீ 'பிராக்ரஸ் ரிபோர்ட்'டை அப்பாவிடம் காண்பிக்கப் பயந்து, உன் பெட்டிக்குள் வைத்துக் கொண்டிருந்தது எனக்குத் தெரியும்! நீ நேற்று பட்டாணி வெடியை அந்தப் பெட்டிக்குள் வைத்ததையும் பார்த்தேன்! உன் பெட்டி இருப்பதோ சமையலறையில். அடுப்பின் பக்கத்தில் இருப்பதால், உன் இரும்புப் பெட்டி உஷ்ண மடைந்து விடும். பட்டாணி வெடி வெடிக்கக் கொஞ்ச உஷ்ணமே போதுமாகையால், அது பெட்டிக்குள்ளேயே வெடிக்கும். அந்தச் சப்தம் கேட்டு, 'என்னவோ' 'ஏதோ' என்று பெட்டியைத் திறக்க வருபவர்கள் நிச்சயம் உன் 'பிராக்ரஸ் ரிபோர்ட்'டைப் பார்த்து விடுவார்கள் என்பதை நான் முன்பே அறிந்து வைத்திருந்தேன்.

அப்பா: சரி, போகட்டும். என் விஷயம்?

ராஜு: இது ஒன்றும் பிரமாதமில்லை; நீங்கள் நேற்று முன்தினம் இரவில் கொண்டுவந்த பொட்டலத்தை நான் வெளிச்சத்தில் பார்த்தேன். பொட்டலத்துக்குள் ஏதோ சிவப்பாகத் தெரிந்ததும் சந்தேகம் வந்து பிரித்துப் பார்த்தேன். நீங்கள் மாற்றிக்கொண்டு வந்து விட்டீர்கள் என்பதை உணர்ந்து கொண்டேன். அந்தப் புடவை அம்மாவுக்குத்தான் சேரும் என்பது தெரிந்ததுதானே!

பாட்டி: டேய் ராஜு, என் ராமர் படம் காணுமல் போய் விட்டதே, அதற்கு என்ன சொல்கிறாய்?

ராஜு: அதுவா பாட்டி! நேற்று நான் உங்கள் எல்லோருக்கும் ஜோசியம் சொல்லிக்கொண்டிருந்தபோது, குஞ்சு வெட்டிக் கொண்டிருந்தது உன் ராமர் படத்தைத்தானே! அதை வைத்துக் கொண்டு உனக்கும் ஒரு ஜோசியம் சொன்னேன். நீங்கள் ஒருவரும் குஞ்சு செய்து கொண்டிருந்த வேலையைக் கவனிக்கவே...யில்லை போலும்!

பாட்டி: வெட்டி, வெட்டிக் குட்டிச் சுவராக்கி விட்டாளா? அடி மூதேவி!

அப்பா: பேஷ்! பேஷ்! ராஜுவின் தீபாவளி ஜோசியங்கள் வெகு ஜோர்!

[எல்லோரும் சிரிக்கிறார்கள்]

(திரை)

★

புரசையில் புத்தகக் காட்சி

எம். எஸ். ஸ்ரீநிவாஸன்

மயிலாப்பூர் மாணவிகள் வந்தார்கள்; திருவல்லிக்கேணி மாணவர்கள் வந்தார்கள்; அடையாற்றுச் சிறுவர்கள் வந்தார்கள்; திருவொற்றியூரிலிருந்தும் சிலர் வந்தார்கள். பெரியவர்கள் வந்தார்கள்; சிறியவர்கள் வந்தார்கள்; இரண்டு மாதக் குழந்தை ஒன்றும் தன் தாயை அழைத்துக்கொண்டு வந்திருந்தது! பல் விழுந்த கிழவர்கள் ஒரு கையில் தடியையும், ஒரு கையில் பேரப் பிள்ளையையும் பிடித்தபடி வந்தார்கள்; எழுத்தாளர்கள் வந்தார்கள்; பிரசங்கிகள் வந்தார்கள்; சிறந்த நடிகர்கள் வந்தார்கள்; பள்ளிக்கூட ஆசிரியர்கள், ஆசிரியைகள், கல்வி இலாகா அதிகாரிகள் எல்லாரும் வந்தார்கள்; தமிழர், தெலுங்கர், கன்னடக்காரர் முதலிய பலமொழி பேசுவோரும் வந்தார்கள்; ஓர் அமெரிக்கர் குடும்பத்தோடு வந்தார்!



ஆம், சென்ற மாதம் 17, 18 தேதிகளில் புரசைவாக்கம் லேடி எம். ஸி. டி. எம். பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு இத்தனை பேரும், இன்னும் ஆயிரக் கணக்கானவர்களும் வந்தார்கள். என்ன விஷயமாக...? **நாலாவது குழந்தைப் புத்தகக் காட்சி**யைப் பார்க்கத்தான்!

ஆண்டுதோறும் குழந்தை எழுத்தாளர் சங்கத்தார் நடத்தும் இக்காட்சி, சென்ற ஆண்டு முதல், நகரின் வெவ்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகிறது. சென்ற ஆண்டு மயிலாப்பூர் குழந்தைகள் இதைப் பார்த்துப் பாராட்டினர். இந்த ஆண்டு புரசையில் நடைபெற்றது. புரசை மக்களோடு, நகரின் பல்வேறு பகுதிகளில் வாழ்வோரும் கலந்துகொண்டு விழாவை வெற்றிகரமாக நடத்திவிட்டனர்.

பதினேழாம் தேதி சனிக் கிழமை காலை 10-30 மணிக்கு **கல்விமந்திரி கனம். ஸி. சுப்பிரமணியம்** அவர்கள் காட்சியைத் திறந்து வைத்தார்கள். அந்தப் பள்ளிச் சிறுமியர் நால்வரின் கடவுள் வணக்கப் பாட்டுடன் விழா ஆரம்பமானது.

சங்கத் தலைவர் **ஸ்ரீ. வை. கோவிந்தன்** அவர்கள் மந்திரியையும், மற்றவர்களையும் வரவேற்றுப் பேசுகையில், மட்டரகப் புத்தகங்களுக்குப் பெற்றோர் ஆதரவு கொடுக்கக்கூடாதென்றும், தங்கள் குழந்தைகள் படிக்கும் புத்தகங்கள் நல்லவைதானா என்பதை அடிக்கடி கவனித்து வரவேண்டும் என்றும் கூறினார். அத்துடன், குழந்தைகளுக்கான நல்ல புத்தகங்கள் வெளிவர சர்க்கார் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் மந்திரியைக் கேட்டுக் கொண்டார்.

கல்வி மந்திரி கனம் சுப்பிரமணியம் அவர்கள் மிகவும் அழகாகவும், கச்சிதமாகவும் பேசினார்கள். "நான் பல நாட்களாகவே குழந்தை இலக்கியத்தில் அக்கறை கொண்டவன். மந்திரியாவதற்கு முன்புகூட அதைப்பற்றிச் சிந்தித்திருக்கிறேன். அரசாங்கத்தால் செய்யக்கூடியதை நாங்கள் செய்வோம். பொது மக்களும் சேர்ந்து ஒத்துழைத்தால்தான் நிறையப் புத்தகங்கள் குழந்தைகளுக்குக் கிடைக்கும்.

"ஒரு நாட்டின் செல்வம் என்ன தெரியுமா? அதன் குழந்தைகள்தான். நல்ல குழந்தைகள், பண்பாடுடன் வளர்க்கப்பட்ட குழந்தைகள், அறிவிற்சிறந்த குழந்தைகள்- இவர்களே நாட்டின் செல்வம். இவ்வாறான குழந்தைகள் இருந்து விட்டால் வேறு ஒன்றுமே தேவையில்லை. தேவையானது எல்லாம் தானே வந்து விடும். குழந்தைகள் நல்ல புத்தகங்கள் மூலமே இப்படிப் பயிற்சி பெறமுடியும். இளமையில் கற்பதுதான் நெடுநாள் நிலைக்கும். இளம் வயதிலேயே தாய் சொன்ன வீரக்கதைகளைக் கேட்டுத்தான் சிவாஜி பெரிய தேசபக்தனாகவும், வீரனாகவும் விளங்கினான். இதனால், பெற்றோருக்கும் பிறருக்கும் குழந்தைகள் விஷயத்தில் மகத்தான பொறுப்பு உண்டு" என்று கூறினார்.

மேலும், குழந்தை எழுத்தாளர் சங்கம் செய்து வரும் சேவையை மந்திரி பெரிதும் பாராட்டிப் பேசினார். தாம் இப்புத்தகக் காட்சியில் பல வகையான புத்தங்களைப் பார்த்ததைச் சொல்லி, பிறநாடுகளில் போல நமது நாட்டிலும் சீக்கிரத்தில் உயர்ந்த ரகக் குழந்தை நூல்கள் வெளிவரவேண்டிய அவசியத்தை விளக்கினார்

பிறகு பி. ஸ்ரீ ஆச்சாரியார் அவர்கள் குழந்தைகளைப் பற்றியும், அவர்கள் அறிவு வளர்ச்சியைப் பற்றியும், குழந்தைகளை வளர்க்கும் விதங்களைப் பற்றியும், அவர்களுக்குக் கல்வி கற்

பிப்பதைப் பற்றியும் பேசினார். பெற்றோரும் உபாத்தியாயரும் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களை அவர் பேசினார். கணக்கில்லாத சின்னச் சின்னக் கதைகள் சொல்லி அவர் விஷயங்களை விளக்கினார். அவர் சொன்ன கதைகளுள் ஒன்று, சிறுவர்கள் கற்பனையுடன் பொய் சொல்வதைப் பற்றியது:

ஒரு சிறுவனுக்கு அவன் அப்பா புதிதாகச் செருப்புகள் வாங்கிக் கொடுத்திருந்தார். அவன் பள்ளிக்கூடம் போய் விட்டுத் திரும்பும்போது ஒற்றைக் கால் செருப்புடன் வந்தான். "ஏண்டா, மற்றொரு கால் செருப்பு எங்கே?" என்று தந்தை கேட்டார்.

"அதை ஒரு திருடன் பிடுங்கிக் கொண்டான்" என்றான் சிறுவன்.

"என்ன! திருடன் ஒரு கால் செருப்பைமட்டும் பிடுங்கிக் கொண்டானா? ஒரு கால் செருப்பை வைத்துக்கொண்டு அவன் என்ன செய்வான்? செருப்பைத் தொலைத்துவிட்டுப் பொய்யா சொல்கிறாய்?"

"இல்லை அப்பா, அவன் ஒரு கால் நொண்டி. அதனால் ஒரு கால் செருப்பை மட்டும் வாங்கிக்கொண்டான்" என்றான் சிறுவன்.

"அவன் நொண்டியா! அப்படியானால், அவன் வெகுதூரம் போயிருக்க மாட்டான். வா, அவனைக்காட்டு" என்று சிறுவனை அழைத்துக்கொண்டு வாசலுக்கு வந்தார், தந்தை.

இப்போது சிறுவனால் என்ன செய்ய முடியும்? யோசித்தான். அப்போது தூரத்தில் ஒரு மோட்டார் போவது தெரிந்தது. அதைக் காட்டி, "அப்பா, அந்தத் திருடன் அந்தக் காரில்தான் ஏறிக் கொண்டு போய்விட்டான்" என்றான் திடீரென்று!

பையனின் கற்பனையை மெச்சுவதா? பொய் சொல்வதற்காக அவனைக் கண்டிப்பதா?

பிறகு, மந்திரி சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வெள்ளித் தட்டு, வெள்ளிக் கோப்பை, காரம் போர்டு மூன்றும் முறையே முதல், இரண்டு, மூன்றாவது பரிசுகளாக வழங்கினார். கடைசியாக சங்கக் காரியதரிசி, சங்கம் தற்போது செய்துவரும் வேலைகளையும், இனி செய்யப் போகும் வேலைகளையும் எடுத்துக் கூறினார்.

கூட்டம் முடிந்ததோ இல்லையோ... புத்தகங்கள் வைத்திருந்த ஐந்து அறைகளையும் நோக்கிக் கூட்டத்தினர் படையெடுத்தனர்! இரண்டு அறை

சென்னை-600 008

முதல்வன்: என்னப்பா பவளக்காரத் தெருவு எங்கே இருக்கு?

மற்றவன்: அட போ அப்பா. நானும் அதே தெருவைத் தேடித் தேடிக் களைத்துப்போய்த்தான் உட்கார்ந்திருக்கிறேன்.

முழுதும் தமிழ்ப் புத்தகங்கள்; மற்ற அறைகளில் ஆங்கிலப் புத்தகங்களும், சில ரஷ்ய, சீனப் புத்தகங்களும் வைக்கப் பட்டிருந்தன. மொத்தம் 1155 புத்தகங்கள் இருந்தன. சென்ற ஆண்டைவிடத் தமிழில் அதிகப் புத்தகங்கள் குறிப்பிடத் தக்க அளவில் வெளிவரவில்லை.

சந்தோஷப்பட வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. சென்ற ஒரு வருஷ காலத்தில் குழந்தைகள் ஒழுக்கத்தைக் கெடுக்கும் நூல்கள் அநேகமாய் வெளிவராததைக் குறித்து மகிழவேண்டும். குழந்தைகள் முன்னேற்றத்தைக் குறியாகக்கொண்டு நமது எழுத்தாளரும் பதிப்பாளரும் உழைத்துவருகிறார்கள் என்றும், இனி அடுத்த ஆண்டில் நல்ல நல்ல குழந்தை நூல்கள் நிறைய வரும் என்றும் நாம் நம்பலாம்.

கையெழுத்துப் பிரதிகள் வழக்கத்தைவிட இவ்வாண்டு நிறைய இருந்தன. தமிழ் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து வந்த சுமார் 70 பிரதிகள் கண்ணைக் கவர்ந்தன. சென்ற ஆண்டுகளில் திரு. ரத்னம் தயாரித்த புத்தகங்களை நுணுக்கமாகக் கவனித்துச் சென்ற தம்பி தங்கைகள், தாமே சில கையெழுத்துப் புத்தகங்களைத் தயாரித்துக்கொண்டு வந்திருந்தார்கள். அச்சுப் புத்தகங்கள் கெட்டன, போங்கள்! ஏன், நமது ரத்னம் தயாரிப்பதை விட சில விஷயங்களில் உயர்வாயிருந்தன அந்த நூல்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

'இத் தயாரிப்புகள், அச்சுப் புத்தகப் பதிப்பாளரை வெட்கமுறச் செய்யும். அவர்கள் வெட்கப்பட்டு, கட்டாயம் நல்ல புத்தகங்கள் கொண்டு வருவார்கள்' என்று நான் அப்போது எண்ணினேன். விரைவில் அந்த எண்ணம் நிறைவேறுமா?

காட்சியில் இருந்த சுமார் 700 ஆங்கிலப் புத்தகங்களும் பல திறப்பட்டவை. அவற்றில் நிறையக் கதைப் புத்தகங்கள் இருந்தன. ஒரே கதைப் புத்தகத்துக்குப் பலவேறு வகைப் பதிப்புகள் இருந்ததைப் பார்த்

தேன். விளையாட்டுக்களைப் பற்றி ஒரு புத்தகவரிசை இருந்தது. சைக்கிள் பழகுதல், நீச்சல், கிரிக்கெட், கால் பந்து, ஹாக்கி, முகாம் போடுதல் போன்ற ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் விவரமாக எழுதப்பட்டு, குறைந்த விலையில் தயாரான அப்புத்தகங்கள் நன்றாயிருந்தன.

சின்னச் சின்னப் பாப்பாக்களுக்காகத் தயாரான பெரிய பெரிய புத்தகங்கள் இருந்தன. ஓர் அகராதி மிகக் கவர்ச்சியாயிருந்தது. அதில் அநேகமாய் ஒவ்வொரு வார்த்தைக்கும் வர்ணப் படம் போடப் பட்டிருந்தது. சாதாரணமாக அகராதிகள் பொடி எழுத்தில் அச்சாகி இருக்கும். இந்த அகராதி பெரிய அழகான எழுத்தில் அச்சாகி இருந்தது. அந்த அமெரிக்கப் புத்தகம் நன்றாயிருந்ததே என்று அதன் விலையைப் பார்த்தேன்; மூர்ச்சை போட்டு விழாமல் தப்பினேன்!

அது போலவே, பக்கத்துக்குப் பக்கம் வர்ணப் படங்களுடன் அச்சான சிறுவர் கலைக் களஞ்சியம் ஒன்று கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. 18 அங்குல நீளம், 12 அங்குல அகலம் 128 பக்கங்கள் கொண்ட அந்நூல் தமிழில் மட்டும் இருந்தால் எந்தச் சிறுவனும் அதை வாங்கி வைத்துக்

அப்பா: என்னடா இது! சிலேட்டிலே பெரிய சைபராக வாங்கி வந்திருக்கிறாயே! இதுதான் படித்த லட்சணமோ?

பையன்: அப்பா, இது சைபர் இல்லையப்பா. நான் வரைந்த முட்டைப்படம் அப்பா.

—A. சுலோசனா

கொள்ள ஆசைப்படுவான்.

புத்தகக் காட்சியைக் காண வந்த அத்தனை சிறுவர் சிறுமியருக்கும் திரு. தணிகை அவர்கள், தாம் வெளியிட்ட மாணவர் குறிப்பு என்ற பயனுள்ள குறிப்புப் புத்தகத்தை அன்புடன் அளித்தார்.

சுமார் 1200 புத்தகங்கள் நிறைந்த இக்காட்சியைக் காண மக்கள் ஓயாமல் வந்தபடி இருந்ததில் வியப்பு என்ன? இரண்டு நாளில் இதை முடித்து விட்டார்களே என்றுதான் பலர் குறைப்பட்டார்கள்.

o

ஐயோ, பரிசு!

'புவியரசன்'

"ஸார் போஸ்ட்!" என்ற குரல் கேட்டு எழுத்தாளன் ஏகாம்பரம் உள்ளேயிருந்து ஓடி வந்தான்.

"யாருக்கப்பா தபால்?" என்று தபால்காரரைப் பார்த்துக்கேட்டாள், ஏகாம்பரத்தின் அம்மா.

"மல்லிகா என்று யாராவது இருக்கிறார்களா? ஒரு கடிதம் வந்திருக்கிறது" என்றார், தபால்காரர். உடனே ஏகாம்பரம் ஆவல் ஆவலாகக் கடிதத்தை வாங்கிப் பிரிக்க ஆரம்பித்து விட்டான்.

"ஏண்டா அதைப் பிரிக்கிறாய்? யாரோ மல்லிகாவாமே! தங்கை சுசீலா வரட்டும், காண்பிக்கலாம். அவள் சிநேகிதி யாராவது எழுதி இருப்பாள்" என்றாள் அம்மா.

"பாழாய்ப் போச்சு. மல்லிகாவும் இல்லை; மசால்வடையும் இல்லை. என் புனைபெயர் தான் 'மல்லிகா'. தெரிந்ததா?" என்று கூறிக்கொண்டே கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான், ஏகாம்பரம். உடனே, அவன்முகம்பிரகாசமடைந்தது.

"அம்மா! அம்மா! எனக்கு இருநூறு ரூபாய் பரிசு!" என்றுகூறிக்கொண்டே குதித்தான், ஏகாம்பரம்.

"என்னடா மண்டு, உனக்கா இருநூறு ரூபாய் பரிசு! தூங்கி விழித்தாயா?"

"நிஜமாகத்தான் அம்மா! 'மகிழம்பூ' பத்திரிகைக்கு, 'தாமரைப்பூ' என்ற கதையை அனுப்பினேன். அது போட்டியில் முதற் பரிசு பெற்றிருக்கிறது"

"உன் கதை பரிசு பெற்றதென்றால், போட்டி ஆசிரியருக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கவேண்டும்"

"உனக்கென்னம்மா தெரியும், அதன் அருமை? அப்பா வந்தால் எவ்வளவு சந்தோஷப் படுவார், பார். இதோ கடிதத்தைப் படிக்கிறேன், கேள்:

அன்புள்ள 'மல்லிகா'வுக்கு, நீ எழுதிய 'தாமரைப்பூ' என்ற கதை, போட்டியில் முதல் பரிசு, பெற்றிருக்கிறது. பரிசு ரூபாய் சீக்கிரம் அனுப்பப்படும்.

ஆசிரியர்,
'மகிழம்பூ'

கடிதத்தைப் படித்துக் காட்டிவிட்டு, "அம்மா, என் முதல் கதைக்கே பரிசு வந்து விட்டது! என்னை யாரென்று நினைத்திருக்கிறாய்?" என்று பெருமையுடன் கூறிவிட்டு, நோபல் பரிசு பெற்ற விஞ்

ஞானி போல், மகிழ்ச்சிக் கடலில்மூழ்கினுன்

* * *

மர்டியின்முன் அறையில் ஏகாம்பரமும், அவன் நண்பர்கள்ரகு, சோமு, சீனு, கிட்டு முதலியோரும்பேசிக்கொண் டிருந்தார்கள்.

“ஏண்டா ஏகாம்பரம், முதல் வெற்றியே, இருநூறு ரூபாய் வெற்றியாய் விட்டதே!” என்று ஆச்சரியத்துடன்கூறினுன், ரகு.

“அது சரி, பணம் வந்துவிட்டதா? இல்லே, நாமம் தானு?” என்று குறுக்கிட்டுக் கேட்டான், சோமு.

“நாமமா! நாணு சும்மா விடுவேன்? அந்தக் கதையை எழுத எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா?” என்று பூஞ்சோலே

மிடுக்காகக் கூறினுன், ஏகாம்பரம்.

“ஆமாண்டா, ரொம்ப சிரமப்பட்டுத்தான் எழுதியிருப்பாய். உன் அப்பா வைத்திருக்கும் பழைய பத்திரிகைகளே எல்லாம் புரட்டினுயோ?” என்று குத்தலாகக் கேட்டான், சீனு.

“என்ன! இந்த ‘மல்லிகா’வை அவ்வளவு மட்டமாகவா எண்ணிவிட்டாய்?” என்று சிறிது கோபமாகக் கேட்டான் ஏகாம்பரம்.

“சும்மாவிளேயாடுகிருன், சீனு. நீ இருநூறு ரூபாய் பரிசு பெற்ருயே, எங்களுக்கு ஏதாவது வாய்க்கு இனிப்பாக....!” என்று இழுத்தான் கிட்டு.

“ஓ! உங்களுக்கு இல்லாமலா? சாயங்

காலம் இங்கே வாருங்கள். உங்களுக்கெல்லாம் இங்கே ஒரு 'டீ பார்ட்டி' வைத்து விடுகிறேன். மறந்துவிடாதீர்கள்!" என்றான், ஏகாம்பரம் வெகு குஷியாக.

"என்னடா ஏகாம்பரம், மிட்டாய்க்கடை பகோடாவைக் கொடுத்து அனுப்பி விடுவாயோ!" என்று சந்தேகத்தைக் கிளப்பினான், ரகு.

"சேச்சே, 'ராமச்சந்திர விலாஸ்' ரசகுல்லா, போண்டா, மிக்ஸர் எல்லாம் உண்டு. மறந்துவிடாமல் சாயங்காலம்வந்து விடுங்கள்" என்று கூறி அவர்களை அனுப்பிவைத்தான் ஏகாம்பரம்.

* * *

மாலை மணி நான்கு. ஏகாம்பரத்தின் அப்பா அப்போது தான் ஆபீஸிலிருந்து வந்தார். "அப்பா, எனக்கு முதல் பரிசு!" என்று ஆனந்தமாகக் கூறிக் கொண்டே அப்பாவின் அருகே ஓடினான் ஏகாம்பரம்.

"எதிலேடா, சாப்பாட்டுப் போட்டியிலா?"

"என்ன அப்பா இப்படிக் கேட்கிறீர்கள்? என் கதை 'மகிழம்பூ'பத்திரிகையில் இருநூறு ரூபாய் பரிசு பெற்றிருக்கிறது"

"அடடே! அவ்வளவு தூரம் போய்விட்டதா உன் கதை?"

"ஆமப்பா, இதோ பாருங்கள்" என்று மகிழம்பூ ஆசிரியர் எழுதிய கடிதத்தைக் காட்டினான், ஏகாம்பரம். அப்பா அதைப் படித்துப் பார்த்தார். பிறகு, "யாரடா இந்த மல்லிகா?" என்று கேட்டார்.

"நான்தானப்பா. அது என் புனைபெயர்!"

"ஏண்டா, மல்லிகாவைவிட மண்ணாங்கட்டி என்று வைத்திருக்கலாமே!"

"எல்லாம் இப்போது அப்படித்தானப்பா இருக்கும். இன்னும் கொஞ்ச காலத்திற்குள் உங்கள் மகன் எவ்வளவு தூரம் பெயரெடுக்கப் போகிறான், பாருங்கள்."

"சரி, சரி. பார்க்காமலா போகப்போகிறேன்"

"அப்பா, நான் பரிசு பெற்றதற்காக என் நண்பர்களுக்கெல்லாம், ஒரு 'டீ பார்ட்டி' வைக்கப் போகிறேன். அதற்காக இப்போது இருபது ரூபாய் வேண்டும்."

"என்ன! இருபது ரூபாயா? என்னிடம் இல்லை...வேண்டுமானால் வீட்டு வாடகைப்பணம் இருபது ரூபாய் இருக்கிறது. எடுத்துக்கொள். பரிசு வந்தவுடன் கொடுத்துவிடு."

"ஆகட்டும் அப்பா!..."

வாடகைப்பணம் இருபது ரூபாயில் அன்று தன் நண்பர்களுக்கெல்லாம் பலமாக ஒரு விருந்து வைத்து விட்டான் ஏகாம்பரம். எல்லோரும்மூக்குப் பிடிக்க சாப்பிட்டுவிட்டு சந்தோஷமாக 'மல்லிகா'வை வாழ்த்திக்கொண்டே வீடு சென்றனர்.

அன்று இரவு கூடத்தில் ஏகாம்பரம் உட்கார்ந்து கொண்டு தனக்கு மகிழம்பூ

ஆசிரியர் எழுதிய கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் தம்பி மணி ஓடி வந்து, "அண்ணு, அண்ணு உனக்குத் தான் இருநூறு ரூபாய் பரிசு கிடைத்திருக்கிறதே! எனக்கு ஒரு பொம்மைக் குதிரை வாங்கித் தருவாயா?" என்று ஆவலாகக் கேட்டான்.

"என் பரிசு வரட்டும்; கட்டாயம் வாங்கித் தருகிறேன்" என்ருன், ஏகாம்பரம். அதற்குள் தங்கை சுசீலா ஓடிவந்து, "அண்ணு, என்னை மறந்து விடாதே! எனக்கு ஒரு நல்ல பேனு வாங்கித் தரவேண்டும்" என்ருள்.

"சரி, ஆகட்டும். பரிசு வந்ததும் முதல்முதலாக உனக்குப் பேனு வாங்கித் தருகிறேன்" என்று உறுதிகூறினன் ஏகாம்பரம்.

"ஏகாம்பரம், உனக்குப் பரிசு கிடைத்திருக்கிறது என்பதை நான் நம்பவே இல்லை. இப்போதுதான் தெரிகிறது உன் கெட்டிக்காரத்தனம். வருங்காலத்தில் நீ ஒரு பெரிய கதாசிரியனுக வருவாய். சந்தேகமில்லை... ஆமாம், பரிசு வந்ததும் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். என் கம்மலில் ஒரு கல் உடைந்துபோயிருக்கிறது. அதை வாங்கிக் கொடுக்கிருயா?..." என்று அவன் அருகே வந்து குழைவாகக் கேட்டாள், அம்மா.

"பரிசு வரட்டும் அம்மா. அதற்குள்ளே இத்தனைபேர் படை எடுக்கிறீர்களே!" என்று சிறிது சலிப்புடன் கூறினன் ஏகாம்பரம். அதே சமயம் சமையல் கட்டிலிருந்து வந்த பாட்டி, "என்னடா, உனக்கு ஏதோ பணம் வந்ததாமே! இந்தக் காலத்துப் பையன்களே இப்படித்தான். அதை வாங்கி நீயே செலவு செய்வதா? எனக்கு ஒரு புடவை எடுத்துக் கொடேன். உன் பெயரையாவது சொல்லிக் கொண்டு யாத்திரை போய் வருகிறேன்" என்று ஆரம்பித்தாள்.

"சரி பாட்டி, பணம் இன்னும் வரவில்லை. வரட்டும். கொஞ்சம் பொறுத்திரு" என்ருன், ஏகாம்பரம்.

அவன் இதைச் சொல்லி வாய் மூடவில்லை. அதற்குள், "என்னடாப்பா, சொன்னல் நான் என்ன பிடுங்கியா கொள்வேன்? எனக்கு ஒன்றும் வேண்டாம். என் மூக்குக் கண்ணுடி 'பிரேம்' ஒருபக்கம் உடைந்து விட்டது. அதைக் கயிறுபோட்டுக் கட்டிக்கொண்டிருக்கிறேன். அதை மாற்றி வேறு ஒரு 'பிரேம்' போட்டுக் கொண்டால் நல்லது. அதுக்குத்தான் கேட்டேன்!" என்று ஆரம்பித்துவிட்டார், தாத்தா.

"ஆகட்டும் தாத்தா, பணம் கைக்கு வருவதற்குள் எல்லோரும் இப்படி அவசரப்படுகிறீர்களே! நான் கஷ்டப்பட்டு எழுதினேனே, எனக்கு என்னதான் மிச்சப்படும்!" என்று அலுத்துக்கொண்டான் ஏகம்பரம்.

ஒரு வாரம் ஓடிவிட்டது. பரிசுத்தொகை வரும் வரும் என்று ஏகாம்பரம் எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தான்.

அன்று, 'போஸ்ட்' என்று கேட்டதுதான் தாமதம்; ஏகாம்பரம் விழுந்தடித்துக்கொண்டு வாசலுக்கு ஓடிவந்தான். 'மகிழம்பூ' காரியாலயத்திலிருந்து வந்த கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டுத் தபால்காரர் போய்விட்டார். "இந்தக் கவருக்குள் 'செக்' வைத்து அனுப்பியிருப்பார்கள்" என்று நினைத்துக்கொண்டே கவரைப் பிரித்துப் பார்த்தான் ஏகாம்பரம்.

'செக்' எதுவும் இல்லை. கடிதத்தைப் படித்தான். முதல் இரண்டு வரிகளைப் படித்ததுமே, அவன் தலை சுற்ற ஆரம்பித்து விட்டது. அங்கேயே மூர்ச்சை போட்டு விழுந்து விட்டான். உடனே, அவன் தாயார் ஓடிவந்து முகத்தில் தண்ணீர் தெளித்து மூர்ச்சை தெளிவித்தாள். தங்கை சுசீலா கடிதத்தில் இருந்ததை உரக்கப்படித்தாள்.

"மல்லிகாவுக்கு, உன் கதையை முதல் பரிசுக்குத் தேர்ந்தெடுத்தது எங்கள் முட்டாள்தனம். இரண்டு வருடத்திற்கு முன்பு 'வெடிகுண்'டில் வெளிவந்த 'விமானம்' என்ற கதையை அப்படியே சிறிதும் மாற்றுமல் 'தாமரைப்பூ' என்ற பெயரிட்டு எழுதி இருக்கிறுய். அதைப் போட்டி ஆசிரியர்கள் இப்பொழுதுதான் கண்டுபிடித்தனர். ஆதலால், உன் கதை பரிசுபெற லாயக்கில்லை. இதைப்போல் 'காப்பி' அடித்துக் கதை எழுதிப் புகழோ, பணமோ சம்பாதிக்கலாம் என்று கனவிலும் நினையாதே! இனிமேல் எங்கள் பத்திரிகைக்கு நீ கதைகள் எழுத வேண்டாம். கண்டிப்பாகக் கூறுகிறேன்.

ஆசிரியர்,
'மகிழம்பூ'

இதைப் படித்த அவன் வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் தாங்கள் நினைத்தது பகற் கனவானதைப் பற்றி வருந்தினர். தாத்தாவின் மூக்குக் கண்ணுடிக்கு மோட்சம் கிடைக்கவில்லை. பாட்டியின் யாத்திரை ஒத்திப் போடப்பட்டது. அம்மாவின் கம்மல், பெட்டியிலேயே தூங்கியது. சுசீலாவின் பேனுவும், மணியின் பொம்மைக் குதிரையும் கனவில் கிடைத்தது போலாயின.

பகல் சாப்பாட்டுக்கு வந்தார் அப்பா. விஷயத்தைக் கேள்விப்பட்ட அவருக்குக் கோபம்தான் வந்தது. வாடகைப் பணம் போன கோபத்தில் ஏகாம்பரத்தின் முதுகில் இரண்டு வைத்தார்.

'மல்லிகா' என்ற பெயர் மண்ணேடு மண்ணுய் மறைந்து விடுவதை எண்ணி, முதுகைத் தடவிக் கொண்டே எழுந்திருந்தான் ஏகாம்பரம்!

○

கேளுங்கள்: பதில் சொல்லுகிறோம்

○ ராஜாஜி கல்வித் திட்டத்தால் மாணவர்கள் தொழில் தெரிந்துகொள்ளுவார்கள் என்கிறார்களே, இது சாத்தியமா?

—என். ராஜசேகரன், மதுரை.

சாத்தியம்தான், ஒவ்வோர் ஊரிலும் உள்ள பணக்காரர்கள், ஆங்காங்கே உள்ள மாணவர்கள் தொழில் கற்றுக் கொள்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதாயிருந்தால்!

○ ஔவையார் படத்தைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

—வி. மீனலோசனி, சென்னை. 4

சிறுவர் சிறுமியருக்குத் தனியாக ஒரு படம் இல்லையே என்ற குறையை ஔவையார் ஓரளவு நீக்கிவிட்டது. மிகவும் நல்ல முறையில் எடுத்திருக்கிறார்கள். துண்டு துண்டான நிகழ்ச்சிகளும், ஏராளமான பாடல்களும் இருந்தும்கூட இப்படம் ஆரம்ப முதல் கடைசி வரை விறுவிறுப்பாகச் செல்கிறது.

○ ஹிட்லர் ஆட்சியில் பிரமாதப்படுத்தப்பட்ட 'ஸ்வஸ்திக் சின்னம்' நம்நாட்டில்தான் ஆதியில் இருந்தது என்கிறார்களே, உண்மையாகவா?

—ரா. குமாரவேல், மேட்டுப்பாளையம்.

கிரீஸ், ஜப்பான், சைனா, திபெத், பாரசீகம், வட ஆப்பிரிக்கா, ஸ்காண்டிநேவியா முதலிய இடங்களில் முன்பே இருந்ததாகக் கூறுகிறார்கள். ஆனாலும், ஸர் ஜார்ஜ் பேர்ட்வுட் என்ற ஆராய்ச்சியாளர் அது இந்தியாவில்தான் முதன் முதலில் இருந்திருக்க வேண்டுமெனக் கூறுகிறார். வலது பக்கம் வளைவுடைய ஸ்வஸ்திக் சின்னம் கணேசருக்குரிய சின்னம் என்றும், இடது பக்கம் வளைவுடையது காளிக்கு உரியது என்றும் கருதப்பட்டதாம்.

○ வண்டு பறக்கும்போது 'கும்'மென்று ஒரு சத்தம் கேட்கிறதே, அது எதனால்?

—R.T. அரசு, திண்டுக்கல்.

வண்டு பறக்கும்போது இறக்கைகளை மேலும் கீழும் மிகமிக வேகமாக அடித்துக்கொண்டு பறக்கும். உயரப் பறக்கும் காற்றாடியைச் சுண்டி இழுத்தால் 'விர், விர்' என்ற சப்தம் கேட்கிறதல்லவா? அதேபோலத்தான் காற்றை ஒதுக்கிக்கொண்டு வேகமாக வண்டு பறக்கும்போதும் ஓசை எற்படுகிறது.

○ இலையில் சாப்பிடுவது நல்லதா? 'பிளேட்'டில் சாப்பிடுவது நல்லதா?

—K. ஆராவமுதன், சென்னை 2.

இலையில் சாப்பிடுவது நல்லதுதான். ஆனாலும், தினமும் இலை வாங்கினால் பணச்செலவு அதிகமாகாதா? 'பிளேட்'டைச் சுத்தமாக வைத்துக்கொண்டு அதில் சாப்பிடுவதே நல்லது.

○ பெரியோர்களைப் பற்றிப் 'பூஞ்சோலை'யில் நல்ல நல்ல கட்டுரைகளெல்லாம் வருகின்றன. கேள்விக்குப் பொருத்தமாகப் பதிலும் கூறப்படுகிறது. ஆனால், இந்த இரண்டிலும் எழுதுகிறவர் பெயர் போடுவதில்லை, காரணம் என்ன?

—வி. சடகோபன், சென்னை 4.

ஆசிரியரே எழுதுவதால்தான் பெயர் போடுவதில்லை. எழுதியவர் பெயர் போடாமல் எந்த விஷயம் வந்தாலும் அதை ஆசிரியர் எழுதியதாகவே கருதுங்கள்.

○ என் பெயர் நன்றாக இல்லை. அதை மாற்றிக் கொள்ள விரும்புகிறேன். எப்படி மாற்றலாம்?

—சுப. கருப்பையா, காரைக்குடி.

பெயர் எதுவாயிருந்தால் என்ன? ரோஜாவை நாம் எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும், அதன் மணமும் குணமும் மாறப் போவதில்லை. இதைத்தான் ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கில மகா கவி,

'What's in a name?
A rose by any other name would smell as sweet'

என்று கூறியிருக்கிறார். பெயரை மாற்றுவதைவிட நம்மிடம் ஏதேனும் தீயகுணம் இருந்தால் அதை மாற்றிக்கொள்வதே முக்கியம்.

○ குழந்தைகளுக்காக வெளிவரும் பத்திரிகைகளில் 'பூஞ்சோலை'யும் 'கண்ண'னும் சிறந்தவை என்று டில்லியில் நடந்த தமிழ் விழாக் கூட்டத்தில் பேசினார்களாமே, உண்மையா?

—கே. கே. சாமி, பழனி.

அப்படித்தான் சொல்கிறார்கள்.

○ சாக்ரடிஸ் எந்த தேசத்தில் பிறந்தவர்?

—N. பார்வதி, திருநெல்வேலி.

கிரேக்க நாட்டில் பிறந்தவர்.

○ உயரமான கட்டிடங்களில் மேலும் கீழும் போய்வர உபயோகப் படுத்துகிறார்களே லிப்ட் (Lift) அதைக் கண்டுபிடித்தவர் யார்?

—P. N. குருமூர்த்தி, சென்னை 7.

ஓட்டிஸ் என்ற அமெரிக்கர்.

ஏமாந்தார்!

கந்தசாமி தம்முடைய மகனுக்குச் சட்டைத் துணி வாங்க சைனு பஜாருக்குச் சென்றார். அவர் ஒவ்வொரு கடையாய் ஏறி இறங்கினார்.

கடைசியாக ஒரு கடைக்கு வந்தார். அங்கிருந்த வேலையாள் குப்புசாமி, கந்தசாமிக்குத் துணிகளை எடுத்துக் காட்டிக் கொண்டு வந்தான். "ஸார், இந்தத் துணி கஜம் ரூ 1-12-0. ஆனாலும், உங்களுக்கு முதலாளிக்குத் தெரியாமல் ரூ 1-4-0க்குத் தருகிறேன். ஏதோ, நீங்கள் பார்த்து எனக்குக் காப்பிக்கு இரண்டணாக் கொடுத்தால் போதும்! கடைக்காரன் கொடுக்கும் சம்பளம் எங்கே ஸார் போதுகிறது!" என்று சொன்னான் குப்புசாமி.

கந்தசாமி தமக்கு ஒரு பெரிய 'அதிர்ஷ்டம்' வந்து விட்டதாகவே எண்ணினார். உடனே அந்தத் துணியைக் கூடச் சரியாகப் பார்க்காமல் நான்கு கஜம் துணியை வாங்கிக் கொண்டு ஐந்து ரூபாயைக் கொடுத்து விட்டு வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

அப்போது குப்புசாமி, "ஸார், ஸார், கைக்குட்டையை வைத்து விட்டுப் போகிறீர்களே!" என்று சொல்லிக்கொண்டே அவரிடம் வந்து கையை நீட்டினான்.

கந்தசாமி நான்கு அணாவை அவன் கையில் வைத்து விட்டு வேகமாக நடந்தார். ஏன்? தம்முடைய பெருமையை எல்லோருக்கும் சொல்லவேண்டுமல்லவா? அதற்குத்தான்! தம்முடைய புத்திசாலித்தனத்தைத் தாமே வியந்து கொண்டார்.

ஆனால், அப்போது கந்தசாமி துணிவாங்கிய கடையின் முதலா

வியோ, குப்புசாமியிடம், "சபாஷ் குப்புசாமி! 15 அணாத் துணியை ரூபாய் 1-4-0-க்கு விற்று விட்டாயே! ஹூம்! அந்த மனிதரின் ஆசையைப் பார்! உடனே வாங்கிக் கொண்டார். அடுத்த மாதத்திலிருந்து உனக்குச் சம்பள உயர்வு பண்ணி யிருக்கிறேன்!" என்று குதூகலத்துடன் கூறினார்.

என்ன விழிக்கிறீர்கள்! கந்தசாமி வாங்கிய துணி 15 அணாத் துணி தான்!

ஆனால், குப்புசாமி அவரிடம் அந்தத் துணியை ரூபாய் 1-12-0 என்று சொல்லி, பிறகு ரூபாய் 1-4-0 க்கு விற்று 4 அணா 'கமிஷன்' வேறு வாங்கிவிட்டான்!

இது தெரியாத கந்தசாமியோ இன்றும், 'நாம் கடைக்காரனை ஏமாற்றி விட்டோம்' என்றே எண்ணிக் கொண்டிருக்கிறார். ஆனால் ஏமாந்தவர் யார் என்பது அவருக்குத் தெரியுமா?

—மு. கணேசமூர்த்தி

★ ★ ★

பாட்டி கதை

என் தம்பி ராஜு எப்பொழுது பார்த்தாலும் 'கதை சொல்லு, கதை சொல்லு' என்று என் பாட்டியைத் தொந்தரவு செய்து கொண்டே இருப்பான். அவளும் சளைக்காமல் நடக்காததை நடந்தது போலவும், நடந்ததை நடக்காதது போலவும் கயிறு திரிப்பாள்.



அன்றும் அப்படித்தான் என் தம்பி 'கதைச் சொல்லு பாட்டி' என்று தொந்தரவு செய்தான். பாட்டி எல்லாக் கதைகளையும் சொல்லிவிட்டாளாகையால், 'எனக்கு இனி மேல் ஒரு கதைகூடத் தெரியாது. தெரிந்ததையெல்லாம் சொல்லிவிட்டேனே!' என்று கூறிவிட்டாள்.

இதை அவள் சொன்னதும் என் தம்பி அழ ஆரம்பித்து விட்டான். அவன் அழுவதைப் பார்த்து என் பாட்டிக்கு வருத்தம் வந்துவிட்டது. அவன் தான் செல்லப் பேரனாயிற்றே! ஆகையால், பாட்டி ஓர் உடன்படிக்கை செய்து கொண்டாள். அது இதுதான்: "இன்று ஒரே ஒரு கதைதான் சொல்லுவேன். பிறகு என்னை எப்பொழுதுமே

கதை சொல்லு என்று நீ கேட்கக் கூடாது. நானாக இஷ்டப்பட்டால்தான் சொல்லுவேன். என்ன, சரிதானே?'' என்று கேட்டாள்.

என் தம்பி, 'சரி' என்று கூறவே, என் பாட்டியும் கதை சொல்ல ஆரம்பித்தாள்.

"ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா'' என்று அவள் ஆரம்பித்தாள். என் தம்பிக்கு ராஜா ராணிக் கதை மிகவும் பிடிக்குமாதலால் வெகு சுவாரஸ்யமாகப் பாட்டியின் மடிமேல் உட்கார்ந்து கொண்டு 'ம்' போட ஆரம்பித்தான்.

அதற்குள் என் பாட்டி, "ஒரு நாள் அந்த ராஜா வெற்றிலை, சீவல் போட்டுக்கொண்டார். சீவல் தொண்டையில் போய் அடைத்துக்கொள்ளவே அவர் செத்துப் போய்விட்டார். அவ்வளவுதான் கதை!'' என்று கூறி, இரண்டு வரியில் தன் கதையை முடித்து விட்டாள். அவ்வளவுதான்; என் தம்பியின் முகத்தைப் பார்க்க வேண்டுமே! விளக்கெண்ணெய் குடித்தவன் முகம்போல் இருந்தது!

இப்பொழுதெல்லாம் அவன் என் பாட்டியிடம் 'கதை சொல்லு பாட்டி' என்று கேட்பதில்லை. ஏன், பாட்டியிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டுமே என்பதற்காக அல்ல; பாட்டி இப்படி நம்மை ஏமாற்றி விட்டாளே என்ற கோபம்தான்!

★ ★ ★

கோளாறு

அன்று ஞாயிற்றுக் கிழமை காலை நேரம். மழை பொழிந்து கொண்டிருந்தது. ஆனால், வேலை செய்வதற்குப் போதுமான வெளிச்சம் இருந்ததால் நாங்கள் மின்சார விளக்குகளின் உதவியை நாடவில்லை.

சுமார் எட்டுமணி இருக்கும். திடீரென்று மூன்று பேர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து விட்டார்கள். அவர்கள் எங்கள் உறவினர்கள். உறவினர்கள் வந்துவிட்டதால் மின்சார விளக்குகளைப் போட்டோம். ஆனால், விளக்குகள் எரியவில்லை. உடனே, என் அப்பா வெளியே ஓடிப்போய் 'மெயி'னைப் (Main) பார்த்தார். அதுவும் சரியாக இருந்தது. எங்கேயாகிலும், கோளாறு ஏற்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் எழவே அடுத்த வீட்டு அண்ணாசாமியை அழைத்துக்கொண்டு வந்து எந்த இடத்தில் கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று பார்க்கச் சொன்னார், அப்பா.

அண்ணாசாமி அலசி அலசிப்

பார்த்தார். ஆனால், கோளாறு எங்கே என்று மாத்திரம் கண்டு பிடிக்க முடியவில்லை. அதற்குள் மணி ஒன்பது அடித்து விட்டது. "ஸார்! நீங்கள் உடனே மின்சார இலாகாவிற்கு டெலிபோன் செய்து அவர்களை உடனே வந்து 'ரிப்பேர்' செய்யச் சொல்லுங்கள். எனக்கு இதில் என்ன கோளாறு என்றே தெரியவில்லை" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

'ரிசீவரை' எடுத்து 'டெலிபோன்' செய்தார் அப்பா.

"ஹலோ! என் வீட்டு மின்சார விளக்குகள் எரியவில்லை. பக்கத்து வீட்டுக்காரர் எவ்வளவோ முயன்றும் பலனில்லை. இங்கு குழந்தைகள் நிறைய இருக்கின்றன.

இரவு விளக்கு எரியா விட்டால் மிகவும் கஷ்டமாகிவிடும். தயவு செய்து..."

"என்ன ஸார்! மட மட வென்று பேசிக் கொண்டே போகிறீர்களே! உங்கள் விலாசத்தைச் சொல்லுங்கள் ஸார் முதலில்"

"10, பெருமாள் வீதி"

"சரி, எப்பொழுதிலிருந்து விளக்கு எரியவில்லை?"

"காலையிலே விளக்கைப் போட்டோம். விளக்கு எரியவில்லை. இரவு முழுதும் நன்றாக எரிந்து கொண்டிருந்தது"

"ஹ...ஹ்...ஹா..." என்று கூறி அந்த அதிகாரி சிரித்தார். உடனே, அப்பாவுக்குக் கோபம் வந்து விட்டது.

"என்னய்யா சிரிக்கிறீர்? நாங்கள் விளக்கு எரியவில்லையே என்று கவலைப்படுகிறோம். நீர் இப்படிச் சிரிக்கிறீரே! உம்மை இதுக்குத்தானா சம்பளம் கொடுத்து வைத்திருக்கிறார்கள்?" என்று ஆத்திரத்தோடு பேசினார்,

"ஸார், கோபம் வேண்டாம். நாங்கள் இரண்டு நாட்களுக்கு முன்பாகவே மின்சாரமுள்ள எல்லா இடங்களுக்கும் இன்று காலை எட்டு முதல் பத்து மணி வரை மின்சாரம் தடை செய்யப்படுமென்று அறிவித்து விட்டோமே!" என்றார் அந்த அதிகாரி.

எங்கேயோ சுற்றிவிட்டு அப்போதுதான் வீட்டுக்குள் நுழைந்த என் அண்ணன் கோபாலன், "அப்பா, வெள்ளிக்கிழமை காலையிலே, இன்றைக்குக் காலையில் மின்சாரம் தடை செய்யப்படுமென்று தெரிவித்து விட்டுச் சென்றார், ஒருவர். நான் சொல்ல மறந்து விட்டேன்" என்று கூறினார்.

முகத்தைச் சுளித்துக் கொண்டே அப்பா 'டக்' கென்று 'ரிசீவ'ரை வைத்தார்.

—வி. எச். கிருஷ்ணன்

பளிங்கு மண்டபம்

ரெ. சி. தெய்வசிகாமணி

18. ஜானகி அம்மாள்

"அம்மா, உங்களுக்குச் செய்த கொடுமைக்கு—உங்கள் கணவனை ஆள் வைத்து அடித்துக்கொன்றதற்குப் பலனை நான் அனுபவித்துவிட்டேன். அம்மா, சாவதற்கு முன்னால் இந்தப் பாவியை 'மன்னித்து விட்டேன்' என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். என் பணத்திமிர், கர்வம் எல்லாம் ஒழிந்தன! அம்மா, என் பேரில் கோபமா? என்னை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்ல மாட்டீர்களா?" என்று சின்னப் பிள்ளையைப் போல் கதறி அழுதார் மாணிக்கவேலு முதலியார்.

"அழாதீர்கள்! நடந்ததை மறந்துவிடுங்கள். இனி, எவருக்கும் கெடுதல் நினைக்காதீர்கள்! அதுவே என் கடைசி வேண்டுகோள்" என்று மாணிக்கவேலு முதலியாரைச் சமாதானப்படுத்தினாள் ஜானகி அம்மாள்.

உடனே, மனோஹர் அப்பாவிடம், "அப்பா, மிகவும் கவலைக்கிடமாக யிருக்கிறது. நீங்கள் காரை எடுத்துக்கொண்டு டவுனுக்குச் சென்று கைதேர்ந்த டாக்டரை அழைத்து வாருங்கள்" என்று கூறித் துரிதப்படுத்தினான்.

ஒரு மணி நேரத்தில் டாக்டருடன் திரும்பி வந்தார், மனோஹரனின் அப்பா.

டாக்டர் ஊசி போட்டார். உள்ளே சாப்பிட மருந்தும் எழுதிக் கொடுத்தார். அதையும் அன்றே வாங்கி வந்து கொடுத்தார், அப்பா.

மனோஹரன் ஜானகி அம்மாளின் அருகிலேயே இருந்தான். மற்றவர்களும் கட்டிலைச் சுற்றி உண்ணாது உறங்காது உட்கார்ந்திருந்தனர். சாமு மாமாவும் அவர்களோடு இருந்தார்.

இரவு சரியாக ஒரு மணிக்கு மாதவனும் வந்து சேர்ந்தான். பஸ்

கிடைக்காமல் பாதித்தூரம் நடந்தே வந்திருக்கிறான்!

அவனை ஜானகி அம்மாளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான், மனோஹரன்.

"தம்பி, இப்படிவா. உன் நல்ல குணத்தைப் பற்றி சாமு மாமா சொல்லியிருக்கிறார். உன்னால்தான் என் மனோஹரனும் இந்த நிலையில் இருக்கிறான். உங்கள் இருவரையும் கடவுள் காப்பாற்றட்டும். இணைபிரியாத நீங்கள் நன்றாக இருங்கள்" என்று ஆசிர்வதித்தாள்.

அன்று இரவு முழுவதும் எல்லோரும் இமை மூடாது விழித்திருந்தனர். சாப்பிடக்கூட இல்லை! எல்லோருக்கும் ஒரே கவலை!

கவலைப்பட்டு என்ன பயன்? ஜானகி அம்மாள் அன்று பொழுது சாய்வதைக் கூடப் பார்க்கவில்லை. அதற்குள், அவளுடைய உயிர்ப் பறவை உடல் கூட்டை விட்டுப் பறந்தோடிவிட்டது!

* * *

மாதவன் மனோஹரனுடன் இரு நாட்கள் தங்கியிருந்து ஆறுதல் கூறிவந்தான். அதற்குமேல், அவன் அங்கு இருக்க விரும்பவில்லை.

"மனோஹரா, நடந்ததை நினைத்து வருந்துவதில் பயனில்லை. மனத்தைத் தேற்றிக்கொள். நான் ஊர் போகவேண்டும்..."

"என்ன! ஊர் போகவேண்டுமா! நீ கூடவே இருந்தால்தான் என் மனம் நிம்மதியடையும்."

"மனோஹரா, உனக்கு என் விஷயம் தெரியாததல்ல. மறுநாளே திரும்பி வந்துவிடுவதாக முதலாளியிடம் கூறிவந்தேன்...

ஆனால், எதிர்பாராத இந்தத் துக்கத்தால், இரண்டு நாட்கள் தங்க வேண்டியதாகிவிட்டது. இனியும் தங்குவது அழகல்ல. அவர் என்னை எதிர்பார்த்திருப்பார்."

"வேண்டுமானால், இப்போதே மோட்டாரில் ஆள் அனுப்பித் தகவல் கூறச் செய்துவிடுகிறேன். நீ இன்னும் சிலநாள் கழித்துப் போகலாம்."

"இல்லை மனோஹர், நான் போய்த்தானாக வேண்டும். கட்டாயப்படுத்தாதே! நீ அடிக்கடி சம்பங்கிபுரத்திற்கு வந்து போய்க்கொண்டிரு. நான் ஓரிடத்தில் வேலைக்கு இருப்பதால், அடிக்கடி இங்குவர இயலாது. நம் அன்பு என்றும் மாறாது. அம்மா ஆசிர்வாதம் செய்ததுபோல், நாம் எக்காலத்தும் நண்பராகவே வாழ்வோம்."

"சரி, உன் விஷயம் தெரிந்தது தான். நான் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. கடமையைச் செய்வதில் உனக்குள்ள அக்கறை எவருக்குமே இராது என்றுதான் நினைக்கிறேன். ஆமாம், நீ எப்பொழுது ஊர்செல்ல விரும்புகிறாய்?"

"இன்று மாலையே போகவேண்டும்."

"சரி, அப்படியானால் உன்னைக் கொண்டுவந்து விடச் சொல்கிறேன்."

"எனக்கு, வழி தெரியாதா என்ன? சம்பங்கிபுரம் போகிற பஸ் இருக்கவே இருக்கிறது. 5 மணிக்குப் புறப்பட்டால், 8 மணிக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம்."

"சொந்த மோட்டார் இருக்கும் போது பஸ்ஸில் எதற்காகப்

போவது? பேசாமல் எங்கள் வீட்டு மோட்டாரிலே போய்விடு. ஒரு மணி நேரத்தில் போய்ச் சேர்ந்து விடலாம்."

"எதற்கு மனோஹர் மோட்டார்? நான் ஒரே ஒருவன்தானே போகப் போகிறேன். ஒரு ரூபாய் செலவில் போய்ச் சேர்ந்துவிடுவேன். அதைவிட்டுவிட்டு ஒன்றரை காலன் பெட்ரோல் செலவு செய்வதா? வேண்டாம் மனோஹர்"

"மாதவா, வீண் செலவு செய்வதற்காக உன்னை மோட்டாரில் அனுப்பவில்லை. நீ பஸ்ஸில் 5 மணிக்குப் புறப்பட்டால் 8 மணிக்குத்தான் போய்ச் சேர்வாய். ஆனால்,மோட்டாரில்போவதானல் 7மணிக்குப்புறப்பட்டால்போதும். இன்னும் 2 மணி நேரம் என் கூடவே இருப்பாயே என்றுதான் மோட்டாரில் போகச் சொன்னேன். நான் கணக்கில் இராது போனாலும் மணிக்கணக்கில் கூடவா இருக்கக்கூடாது?" என்று ஏக்கத்துடன் கேட்டான், மனோஹரன்.

மாதவன் அதற்குமேல் எதுவும் தடுத்துக் கூறவில்லை, மாலைவரை மனோஹரனுடன் பேசிக்கொண்டிருந்தான். மணி 6-30 அடித்தது.

அதற்குள் சாப்பாடு தயாராகி விட்டது. சாப்பாட்டை முடித்துக் கொண்டு எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு மனோஹரன் வீட்டு மோட்டாரில் புறப்பட்டான், மாதவன்.

கார் புறப்படும்போது, "மனோஹர், கவலைப்பட்டுப் பயனில்லை. நீ அடிக்கடி சம்பங்கிபுரம் வா. எல்லாம் சரியாகிவிடும்" என்று சொல்லிவிட்டுப் போனன், மாதவன்.

19. மண்டையில் அடி!

மாதவனைக் கண்டதும் வாடியிருந்த முதலாளி முகத்தில் புன்னகை அரும்பியது.

"மாதவா, முந்தாம்நாளே வந்துவிடுவாய் என்று நினைத்தேன். உன்னைக் காணமல் என்னவோபோல் இருந்தது. அன்று வெகுநேரம் சென்று புறப்பட்டாயே! சரியாகக் கார் கிடைத்ததோ என்னவோ என்று..."

"முந்தாம் நாளே வந்திருப்பேன். ஆனல்..."

"என்ன ஆனல்...? மனோஹர் அம்மா சுகந்தானே!"

"இல்லை. அந்த அம்மாள் முந்தாம்நாள் பிற்பகல் இறந்துவிட்டார்கள்."

"அடப் பாவமே!... அப்படியானல் நீ கொஞ்சநாள் அங்கேயே மனோஹரனுக்கு ஆறுதலாக இருந்திருக்கலாமே! ஏன் அவசரப்பட்டு வந்தாய்? ஒரு கடிதம் போட்டிருந்தால் போதுமே...!"

மாதவன் ஒன்றும் பதில் கூறவில்லை.

மாதவன் இல்லாவிட்டால்,வியாபாரம் சரியாக நடைபெறுவதில்லை என்பதை அவர் உணர்ந்துதானி



ருந்தார். ஆனாலும், மனோஹரனுக்கும், மாதவனுக்கும் இருந்த நட்பை அவர் இன்னும் நன்றாக உணர்ந்திருந்தார். அதனால்தான் அவர் அப்படிக் கூறினார்.

இரண்டு நாட்கள் சென்று மனோஹரனிடமிருந்து மாதவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் தானும் தன் அப்பாவும் சமயபுரத்திலிருந்து காட்டேருக்கு வந்துவிட்டதாகவும், அடுத்த வாரம் சம்பங்கிபுரம் வருவதாகவும் எழுதியிருந்தான். அத்துடன் வருவதற்கு முதல் நாள் கடிதம் போடுவதாகவும் குறிப்பிட்டிருந்தான்.

அன்று மனோஹரனிடமிருந்து அடுத்த கடிதம் வந்தது. அதில் அன்று மாலை 5 மணிக்குப் புறப்பட்டு வருவதாக எழுதியிருந்தான்.

மணி ஆறாயிற்று; எழாயிற்று. எட்டும் அடித்துவிட்டது. இன்னும் மனோஹரன் வரவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்பாக அதே வழியில் மாட்டு வண்டியைக் குறுக்கே நிறுத்திச் சிலர் கொள்ளையடித்ததாகப் பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. அதை மாதவன் படித்திருந்ததால், அவனுக்கு ‘ஒருவேளை

அப்படி நடந்திருக்குமோ! கட்டாயம் வருவதாக எழுதியிருக்கிறனே! ஐந்துக்குப் புறப்பட்டால் ஆறு மணிக்கெல்லாம் வந்துவிடலாமே! என்ன காரணம்?'' என்று ஏதேதோ எண்ணிக் கலங்கினன்.

மணி ஒன்பதும் ஆகிவிட்டது. கடையை அவசர அவசரமாகச் சாத்திப் பூட்டிக்கொண்டு சைக்கிள் கடைக்குப் போனன். வாடகைக்கு ஒரு சைக்கிளை எடுத்துக்கொண்டான். நேராகக் காட்டூரை நோக்கிக் கிளம்பிவிட்டான்.

பாதித்தூரம் போயிருப்பான். சிறிது தூரத்தில் ஒரு மோட்டாரும் அதைச் சுற்றி நாலைந்து பேர்களும் நிற்பதைக் கண்டான். யாரோ திருடர்கள்தான் வழி மறித்துக் கொள்ளையடிக்கிறர்கள் என்று நினைத்து மெதுவாக அங்கேயே சைக்கிளை நிறுத்தினன். ஒரு மரத்தின் மறைவிலே சைக்கிளை வைத்துவிட்டு செடி மறைவில் ஒளிந்து ஒளிந்து மோட்டார் நிற்கும் இடத்திற்கு ஐம்பதடி தூரத்தில் போய் மறைவாக நின்றான். அங்கு நின்றவர்கள் பேசும் பேச்சைக் கேட்டதும், அவனுக்குத் தன்னை அறியாமலே சிரிப்பு வந்துவிட்டது!

"என்னப்பா, கொஞ்சம் கை கொடுங்கள். இன்னும் கொஞ்ச தூரம்தான். தள்ளிக் கொண்டே போய்விடலாம்,'' என்று மோட்டார் டிரைவரும் முதலாளியும் இதுவரை தள்ளி வந்த வழிப் போக்கரிடம் கூறியதைக் கேட்டுத்தான் அவன் சிரித்தான். ஆனல், அவன் சிரித்துக்கொண்டேயிருக்கவில்லை.

அந்த மோட்டார் மனேஹரன் வீட்டு மோட்டாரல்ல என்று அறிந்ததும் 'மனேஹரன் என் இன்னும் வரவில்லை?' என்ற சந்தேகக் கேள்வி அவன் உள்ளத்தில் எழுந்தது.

"சரி, சைக்கிளை எடுத்துக் கொண்டு மேலும் போகலாம்'' என்று எண்ணியபடி வந்த வழியே திரும்பினன்.

அவன் செடிகளைத் தள்ளிக் கொண்டு போகும்போது ஏற்பட்ட சலசலப்பு சப்தம், அந்த மோட்டாரைச் சுற்றி நின்ற ஒருவனின் காதில் விழுந்து விட்டது. உடனே அவன் சப்தம் வந்த திசையைப் பார்த்தான். "டேய், அதோ திருடன்! திருடன்!'' என்று கத்தியபடியே மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு ஓடிவந்தான். அவனும் அவன் நண்பர்களும் ஆளுக்கொரு கனத்த தடியைக் கையிலே வைத்திருந்தனர்.

மாதவன் உடனே அவர்கள் முன்பாக வந்து 'நான் திருடனல்ல' என்று விளக்கிக் கூற நினைத்தான். ஆனல், அவர்கள் அவன் பேச்சைக் கேட்கத் தயாராயில்லை. அவர்களில் ஓர் அவசர புத்திக்காரன், தன் கையிலிருந்த தடியால் மாதவனின் மண்டையில் ஓங்கி அடித்துவிட்டான்!

மாதவன் "ஐயோ! நான் திருடனல்லவே!...'' என்று கதறிக் கொண்டு அங்கேயே சுருண்டு விழுந்து விட்டான்!

(தொடரும்)

கடிகாரப் பயம்!

சமீபத்தில் காலஞ் சென்ற மாஜி மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் சிறுவயதில் ஸ்ரீரங்கத்திலுள்ள தேர் முட்டிப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தார்.

அந்தப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயரின் மேஜை மீது ஒரு கடிகாரம் இருக்கும். அது 'டக் டக்' என்று அடிப்பதைக் காதில் வைத்துக் கேட்பதில் ராஜனுக்கு ஒரு தனிப் பிரியம். 'என்னிடம் இதேபோல் ஒரு கடிகாரம் இருந்தால், எவ்வளவு நன்றாயிருக்கும்' என்று எண்ணி ஏங்குவார்.



ஒருநாள், ராஜன் அவருடைய மாமா வீட்டுக்குப் போயிருந்தார். அங்கே மாடியில் மேஜைமீது ஒரு கடிகாரம் இருந்தது. 'இதை எடுத்து ஒரு நாளாவது நம்முடன் வைத்துக்கொள்ள வேண்டும்' என்று தீர்மானித்தார், ராஜன். தீர்மானித்தபடி எடுத்துக் கொண்டு நேராகப் பள்ளிக்குச் சென்றார்.

கடிகாரத்தைக் கண்டதும்—

"டேய், என்னிடம் கொடுடா, பார்க்கலாம்"

"டேய், நான் பார்க்கப் படாதா?"

"டேய் டேய், கொஞ்சம் காட்டுடா, மணி பார்க்கலாம்" என்றெல்லாம் கூறிக்கொண்டே நண்பர்கள் வந்து ராஜனைச் சூழ்ந்து கொண்டனர்.

ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு கடிகாரத்தை வாங்க முயன்றனர். இந்தக் கலவரத்தில் கடிகாரம் கீழே விழுந்தது; கண்ணாடி உடைந்து தூள் தூளாகிவிட்டது!

கடிகாரம் கீழே விழுவதற்கும், உபாத்தியாயர் வருவதற்கும் சரியாக இருந்தது. விஷயத்தைப் புரிந்து கொண்டார், உபாத்தியாயர். அவர் மூலமாக அன்றே ராஜனின் அப்பாவுக்குத் தகவல் எட்டியது. உடனே, அப்பாவின் கோபம் எல்லை கடந்துவிட்டது. அன்று ராஜனுக்குச் சரியான அடி.

அது முதல் ராஜனுக்குக் கடிகாரத்தைக் கண்டாலே ஒரு வித பயம்! இதனால், அவர் தமது 19-வது வயது வரை கடிகாரத்தைத் தொடவே இல்லையாம்!

க. பேபி பத்மா

நடுப்பகல், இடைவேளை மணி ஓசையைக் கேட்டதும், பள்ளி மாணவர்களெல்லாரும் தங்கள் தங்கள் புத்தகங்களையெல்லாம் வாரி எடுத்துக்கொண்டு, 'நான் முந்தி, நீ முந்தி' என்று ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு வெளியில் வந்தபடி இருந்தனர். அவர்களில் கோபாலனும் ஒருவன். அவன் வீடு அதே தெருவில் தான் இருந்தது. பள்ளிக்கூடத்தில் பிடித்த ஓட்டத்தை வீட்டில் வந்துதான் நிறுத்தினன், அவன்.

"அம்மா! அம்மா!" என்று கூவிக்கொண்டே ஓடோடி வந்த கோபாலன், தன் தாயைக் கண்டதும் தொப்பென்று அவள்மேல் ஆசையோடு விழுந்தான். எதிர்பாராத சமயத்தில் திடீரென்று எக்கச்சக்கமாய் விழுந்ததும், அவனுடைய அம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ஆசையோடு ஓடிவந்து விழுந்த கோபாலனின் முதுகில் நான்கு அறை வைத்து இழுத்துத் தூரத் தள்ளினுள். என்றுமில்லாத வழக்கமாய் தன் தாய் அடித்ததும்'ஓ...!'வென்று அழ ஆரம்பித்தான், கோபாலன். அழுகுரலைக் கேட்டு வெளியேயிருந்து வந்த அவனுடைய அத்தை, விஷயத்தை அறிந்தாள். கோபாலன் அருகில் வந்து அவனைச் சமாதானப் படுத்தினுள்." ஏண்டா, கோபு! இன்னும் கொஞ்ச நாளில் உனக்கு ஒரு 'தம்பிப் பாப்பா' பிறக்கப் போகிறுன்...அம்மாவை இப்படி யெல்லாம் தொந்தரவு பண்ணலாமா? இனி இம்மாதிரி யெல்லாம் செய்யாதேடா, கண்ணே. அப்போதுதான் 'தம்பிப் பாப்பா' கிடைப்பான்...!" என்று கூறிஞள். இதைக் கேட்ட கோபாலன் அப்படியே உட்கார்ந்து ஏதேதோ... யோசிக்கலானுன்.

2

கோபாலனுக்கு ஆறு வயது இருக்கும். அவன் பெற்றோருக்கு ஒரே ஒரு பையன். அதுவும் செல்லப் பையன். காரணம், வெகு காலமாக அவர்

களுக்கு ஒரு குழந்தையும் பிறக்காமல் இருந்ததுதான்! பிறகுதான், கோபாலன் பிறந்தான். ஆகவே, அவனை மிகவும் அருமையாக, செல்லமாக வளர்த்து வந்தார்கள். பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும், எப்பொழுதும் தாயை நோக்கி ஓடுவான் கோபாலன். தாயிடம் சென்று கொஞ்சுவான். அதற்குப் பிறகே மற்றதெல்லாம்!

...ஆனால் அன்று......? தாயிடம் அன்பை எதிர்பார்த்து ஓடிவந்தவனுக்குக் கிடைத்தது...அடிதான்! உதைதான்! ஆத்திரமான பேச்சுக்கள் தாம்! முதலில், அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பிறகு அத்தையின் மூலமாகத் தனக்கொரு 'தம்பிப் பாப்பா' கிடைக்கப் போகிறதென்றும், இனி தாயை அப்படியெல்லாம் தொந்தரவு பண்ணக் கூடாதென்றும் அறிந்தான். இந்நிலையில் அம்மாவைத் தொந்தரவு பண்ணினால் அடியும், வசவுமே கிடைக்குமென்றும் உணர்ந்தான். உடனே அவனுக்குக் கோபம் பொங்கி வந்தது. முதலில் அவனுக்குத் தாயின்மேல்தான் அக்கோபம் ஏற்பட்டது. அடுத்த நிமிஷமே அது பிறக்கப் போகும் 'தம்பிப் பாப்பா'வின்மேல் மாறியது.

"என்ன! நேற்று வரை நம்மிடம் அன்பாக இருந்த நம் அம்மா, இந்தத் தம்பிப் பாப்பாவினால் அல்லவா நம்மை அடித்தாள்! வெறுத்தாள்! இது வரை நம்மைத் திட்டியது கூட இல்லையே! 'தம்பிப் பாப்பா' பிறக்கு முன்னேயே அதன் மேல் இவ்வளவு ஆசையா? அதனால்தான் நம்மை அடிக்கிறாள். இன்னும் தம்பிப் பாப்பா பிறந்து விட்டால்...எப்படியோ...? இனி என்றும் நமக்கு அடியும் வசவும்தான் கிடைக்கும் போலிருக்கிறது!..." என்று கோபாலன் நினைத்தான். நினைக்க நினைக்க அவன் கோபம் எல்லை மீறியது! பிறக்கப் போகும் தம்பிப் பாப்பாவின்மேல் அக்கோபம் கோரமான பொறாமையாக மாறியது!

3

ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்தாள் கோபாலனின் தாய். அவள் மட்டும் தனியாக வரவில்லை; அவள் கையில் ஒரு அழகிய 'தம்பிப் பாப்பா'வை ஏந்திக் கொண்டு மெதுவாக உள்ளே வந்தாள். அங்கு இருந்த எல்லோரும் அவர்களைச் சூழ்ந்துகொண்டார்கள். ஏதேதோ பேசிச் சிரித்தார்கள். பிறகு, சென்று விட்டார்கள். ஆனால், ஒருவராவது தாயை எதிர்பார்த்து நின்றிருந்த கோபாலனைக் கொஞ்சமேனும் கவனிக்கவில்லை! எல்லோருடைய பார்வையும், எண்ணமும் தம்பிப் பாப்பாவின் மேல்தான் இருந்தது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கோபாலனுக்கு தம்பிப் பாப்

பாவின் மேலிருந்த ஆத்திரம், கோபம், பொறாமை யாவும் மேலும் மேலும் அதிகரித்தன! அவன், தன் மனத்திற்குள் என்னவோ நினைத்தவனாய்ப் பலமாகத் தலையை ஆட்டிக் கொண்டே வெளியே சென்று விட்டான்!...

அன்று, நடுராத்திரி. பசியால் அழ ஆரம்பித்த தம்பிப் பாப்பாவுக்குப் பால் புகட்டலாமென்று எண்ணி, பால் பாத்திரத்தைத் திறந்த தாய், திடுக்கிட்டாள்! ஏனெனில், பாத்திரத்தில் வைத்திருந்த பாலைக் காணோம்! 'ஒரு சமயம் பூனைதான் குடித்து விட்டதோ...?' என்று நினைத்துக் கொண்டாள். இனிமேல் ஜாக்கிரதையாக வைக்கும்படி அவளுடைய அத்தையிடம் கூறிவிட்டு, பசியால் அழும் குழந்தையைத் தூங்க வைத்தாள். அதுவும் வெகு நேரம் அழுததால் அப்படியே தூங்கி விட்டது. இதையெல்லாம்படுத்துக் கொண்டே கவனித்துக்கொண் டிருந்தான், கோபாலன். குழந்தையின் பாலை வேண்டுமென்றே யாருக்கும் தெரியாமல், தான் குடித்து விட்டதை எங்கு தாய் கண்டுபிடித்து, அடிப்பாளோ என்று பயந்து கொண்டிருந்தான் கோபாலன். இப்பொழுது அவனுக்குப் பயமில்லை, அல்லவா? நிம்மதியாக மூச்சுவிட்டான். தாயிடமிருந்து தன் இடத்தைப் பிடுங்கிக் கொண்ட குழந்தையின் மேல் ஒரு வழியில் வஞ்சம் தீர்த்து விட்டானல்லவா? அவன் முகத்தில் வெற்றியின் பிரதிபலிப்புத் தோன்றியது. இது வரையில் பயத்தாலும், பொறாமையாலும் தவித்துக் கொண்டிருந்தவன் நிம்மதியாகத் தூங்கத் தொடங்கினான். என்னென்னவோ எண்ணிய பிறகே, அவன் தன்னை மறந்து தூங்கினான்.



4

அன்று ஞாயிற்றுக்கிழமை. பகல் 4 மணி இருக்கும். சிறிது நேரம் தூங்கி எழுந்திருக்கிறேன் என்று கூறிப் பகல் 2 மணிக்குப் படுத்த அப்பா இன்னும் எழுந்திருக்கவில்லை. அத்தையும் அந்த நேரத்தில் சாமான் வாங்கக் கடைக்குச் சென்றிருந்தாள். அம்மா மட்டும் தனியாக சமையல் அறையில் வேலை செய்துகொண்டிருந்தாள். கூடத்தில் படுத்துக் கொண்டிருந்த குழந்தை விழித்துக் கொண்டதால் அழ ஆரம்பித்தது. கை வேலையாக இருந்த அம்மா கோபுவைக் கூப்பிட்டு, சிறிது நேரம் குழந்தையை வைத்துக்கொண்டு விளையாட்டுக் காட்டும்படி கூறினாள்.

'என்ன, நமக்குப் பிடிக்காத குழந்தையுடன் விளையாடுவதா!' என்ற கோபம் முதலில் கோபாலனுக்கு ஏற்பட்டது. ஆயினும், அம்மாவின் உத்தரவை மீற முடியவில்லை.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு, கோபு தெருவிற்கு வந்தான். திண்ணையின்மேல் குழந்தையைப் படுக்க வைத்து விட்டு, தானும் ஏறி உட்கார்ந்தான். குழந்தையைத் திண்ணையில் படுக்க வைத்தானே தவிர, அதனுடன் சிரித்துப்பேசவோ, கைதட்டி விளையாடவோ இல்லை. பேசாமல் தன்னுடைய பொம்மை மோட்டார் ஒன்றை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது, தம்பிப் பாப்பா மெதுவாக நகர்ந்து நகர்ந்து திண்ணை விளிம்பிற்கு வந்துவிட்டது!

"நன்றாக விழட்டும். கைகால் முறியட்டும். அப்பொழுது தான் அம்மாவுக்கு இதன்மேல் உண்டான ஆசை குறையும். என்னிடமும் முன்போலவே அன்பாக இருப்பாளல்லவா?" என்று நினைத்துப் பேசாமல் இருந்தான். அப்போது அவன் முகத்தில் சிரிப்புக்கூடத் தோன்றியது. ஆனால், அந்த எண்ணம்-சிரிப்பு-அதிக நேரம் நீடிக்கவில்லை. "ஒரு சமயம் நான்தான் குழந்தையைத் தள்ளிவிட்டேன் என்று அம்மா கூறினால்...?" என்ற பயம் ஏற்பட்டது.

உடனே, குழந்தையின் அருகே சென்றான். அதைத் தூக்கிவந்து திண்ணையின் நடு மத்தியில் படுக்க வைத்தான். அதே சமயம் அம்மாவும், அப்பாவும் உள்ளேயிருந்து பேசும் குரல் ஜன்னல் வழியாகக் கேட்டது. அவர்கள் பேச்சில், தன் பெயர் அடிபடுவதைக் கேட்டான் கோபாலன். என்ன பேசுகிறார்கள் என்று உற்றுக் கவனித்தான்.

"அடுத்த வாரம் நம் கோபுவுக்குப் பிறந்தநாள் ஆயிற்றே. அவனுக்குப் புதுத்துணி ஒன்றும் வாங்கவில்லையா?"—இது அம்மாவின் குரல்.

"இந்த மாதம் செலவு அதிகமாக இருப்பதால் கோபுவுக்குப் புதுத்துணி இல்லாமலேயே பிறந்தநாள் கொண்

டாடினால் போகிறது. அதுவும், இவன் இப்பொழுது பாப்பாவை விடப் பெரியவன் அல்லவா? ஆகவே, இனி சின்னப் பாப்பாவின் பிறந்த நாளைத் தான் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்'' என்று அப்பா கூறினார்.

"செலவைப் பார்த்தால் முடியுமா? கோபுவுக்குப் பிறகு தானே சின்னப் பாப்பா பிறந்தது? அதனால் அவனுக்குப் பிறந்தநாள் கொண்டாடாமல் சின்னப் பாப்பாவுக்கு மட்டும் சிறப்பாகக் கொண்டாட நான் விடப்போவதில்லை!'' என்று அம்மா கூறினாள்.

"எனக்குமட்டும் அந்த எண்ணம் இல்லையா என்ன ...? இப்பொழுது குழந்தைக்காக அதிகமாகச் செலவாகிறதே என்றுதான் வேண்டாமென்றேன். சரி, இன்று அவனையே அழைத்துச் சென்று வேண்டியதை வாங்கித் தருகிறேன்'' என்று கூறினார் அப்பா. பிறகு, "கோபு! கோபு!'' என்று கூப்பிட்டார்.

இதுவரை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த கோபாலனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. "அம்மாவா இப்படித் தனக்காகப் பரிந்து பேசினாள்! நம்மேல் அம்மாவுக்கு அன்பில்லை என்று வீணாகச் சந்தேகப்பட்டோமே! அதனால் குழந்தையையுமல்லவா வெறுத்தேன்! சரியான சமயத்தில் கடவுள்தான் என்னைக் காப்பாற்றினார்'' என்று நினைத்துச் சந்தோஷப்பட்டான். பிறகு, தம்பிப் பாப்பாவை அன்புடன் தூக்கிச் சென்று அம்மாவிடம் கொடுத்தான்.

அப்பாவுடன் கடைக்குச் சென்று துணி வாங்கும்போது பாப்பாவுக்கும் சேர்த்தே துணிகள் வாங்கினான். இப்பொழுதெல்லாம் பள்ளியிலிருந்து வந்ததும் நேராக முன்போல் தாயைத் தேடி அவன் செல்வதில்லை. தம்பிப் பாப்பாவை நோக்கியே அவன் கால்கள் அவனை இழுத்துச் செல்லும் என்பதை நான் சொல்லவும் வேண்டுமா?

★



போலீஸ்: ஏய்! ஏன் கம்பத்தைப் பிடித்து ஆட்டுகிறாய்?

கிழவன்: நான் ஆட்டவில்லை சாமி ஏற்கெனவே எனக்கு நடுக்கம்!

சூழ்ச்சி பலிக்கவில்லை!

சந்திரன்

மாதவனுக்கு, மாணிக்கத்தைக் கண்டால் பிடிக்காது. மாணிக்கம் மாதவனைவிடச் சிறியவன். ஆனால், துடுக்குக்காரன். கிண்டலாகப் பேசுவதில் கை தேர்ந்தவன். மாதவனை அடிக்கடிகேலிசெய்வதில் அவனுக்கு அலாதியான ஆசை.

மாதவனின் வீட்டிற்கு எதிர் வீட்டில்தான் மாணிக்கம் இருக்கிறான். மாணிக்கம் கிண்டல் செய்கிறான் என்பதால் பிடிக்காது. ஆனால், அவனது கிண்டல் பேச்சு மாதவனைக் கவர்ந்தது. கிண்டல் செய்யும் போது திட்டுவான். செய்யாத போது அன்போடு பேசுவான். தன்னைத்தவிர பிறரைக் கிண்டல் செய்தால் 'சபாஷ்' எனக் கூறிக் கைதட்டிக்கொண்டிருப்பான். சிறியவனான மாணிக்கம் பலமுறை மாணிக்கத்திடம் காலணா, அரையணாக் கேட்டு வாங்குவான். மாதவனும் சில சமயம் கொடுப்பான். சில சமயம் கொடுக்கமாட்டான்.

அன்று மாதவன் சினிமாவிற்குப்போய் 'டிக்கெட்' கிடைக்காமல் திரும்பிவந்தான். வீட்டில் பல நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தான். அப்போது மாணிக்கம் ஓடி வந்தான். மாதவனைக் காலணாக் கேட்டான். மாதவன் தர முடியாது எனக் கூறிவிட்டு மற்றவர்களுடன் பேசத்தொடங்கினான். மாணிக்கத்திற்குக் கோபமும், வெட்கமும் கலந்து வந்தன.அதைத் தீர்த்துக்கொள்ள அவனைக் கிண்டல் செய்தான். "குமணன் பரம்பரையப்பா நீ? கேட்டதும் தருவாய்; வாங்கிக் கொண்டு போகலாம் என்று வரவில்லை! காலணாத் தராத கருமித்தனத்தை மற்றவருக்கும் தெரிவிக்கவே...வந்தேன். வாரிக் கொடுக்கும் பாரியே! நான்போய்வருகிறேன்," என்று பலவாறு கிண்டல் செய்துவிட்டுப் போய்விட்டான்.

அன்றுமாலை,மாதவன்வெளியில் நின்றுகொண்டிருந்தான். மாணிக்கம் தன் வீட்டிலிருந்தான். மாதவன் அவனையழைத்து "மாணிக்கம், பகல் காலணாக் கேட்டதும் இல்லை என்று சொல்லிவிட்டேனென்றகோபமா? உண்மையில் அப்போதுஎன்னிடம் சில்லறையில்லை. இருந்தால் கொடுத்திருப்பேன். இந்தா ஓரணா! இதையெடுத்துக் கொண்டு போய், குண்டன் கடையில் ஏதாவது வாங்கித் தின்னு" என்றுகூறி ஓரணாக் கொடுத்தான்.

மாணிக்கம் மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொண்டு போய்விட்ட

தும், மாதவன் பைத்தியம் போல உரக்கச் சிரித்தான். "டேய், பொடிப்பயலே! பகல் என்னைக் கிண்டல் செய்தாயே! இப்போது உனக்குக் குண்டன் கடையில் 'சுண்டல்' கிடைக்கப்போகிறது. அது நன்றாக இருக்கும். வாங்கிக்கொள்ளுடா, பயலே" என்று தனக்குள் கூறிக்கொண்டு, மேலும் சிரித்தான்!

மாதவன் அவ்விதம் கூறியதற்குக் காரணம் என்ன தெரியுமா? மாதவன் கொடுத்த பணம் நல்லதல்ல! அப்படியென்றால் ஈய ஓரணுவா என்று கேட்கிறீர்களா? அதுவுமல்ல. அவன் தன் நண்பன் ஒருவனிடமிருந்து பாகிஸ்தான் ஓரணு ஒன்றை வாங்கி வைத்திருந்தான். அதைத்தான் மாணிக்கத்திற்குக் கொடுத்தனுப்பினான்.

குண்டன் கடைதான் அந்த வட்டாரத்தில் சிறுவர்க்கான தின்பண்டங்கள், விளையாட்டுப்பொருள்கள்விற்கும் கடை. ஆனால், குண்டன் மிகவும் பொல்லாதவன். அவனை யாராவது ஏமாற்றுவது தெரிந்தால் பொறுக்கமாட்டான். கோபம் 'பொத்து'க்கொண்டு வந்துவிடும். கொஞ்சம்கூட யோசிக்காமல் இரண்டு அறை கொடுத்து விடுவான். இவ்வளவையும் சிறிது வயது வந்தவர்களிடமே காட்டும் குண்டன், சிறுவர்களிடம் எப்படி நடந்து கொள்வான் என்பது சொல்லியா தெரியவேண்டும்?

அந்தக் குண்டன் கடையில் ஒரு சமயம் ஒரு பையன் செல்லாத காசு ஒன்றைக் கொடுத்து ஏமாற்றப் பார்த்தான். ஆனால் அந்தப் பையனின் துரதிருஷ்டம், குண்டன் அது செல்லாது என்பதைக் கண்டுபிடித்துவிட்டான். அவ்வளவுதான்; குண்டன் குபீரெனப் பாய்ந்து அவனைப் பிடித்துக்கொண்டான்.

"யாரைடா ஏமாற்றப் பார்த் தாய்! உங்கப்பன் வந்தாலும் நான் ஏமாறமாட்டேன். திருட்டுக் கழுதை! இந்தப் பிழைப்பு ஏண்டா உனக்கு?" என்று அவன் வாய் பேசிக்கொண்டிருக்கும் போதே, அவன் கையும் பேச ஆரம்பித்துவிட்டது! அதன் பலன்? 'தப்திப்' என்ற சப்தமும், "அய்யோ! அம்மா! இனிமேல் செய்யமாட்டேன்" என்ற அலறலும் கேட்டன. இந்தக் காட்சியை மாதவன் நேராகப் பார்த்திருந்தான்!

அதனுல், 'மாணிக்கம் செல்லாத பாகிஸ்தான் ஓரணுவைக் குண்டனிடம் கொடுப்பான். உடனே குண்டன் அடிப்பான். அடியை வாங்கிக்கொண்டு, அவன் அழுதுகொண்டே வரும்போது நாம் பார்த்துச் சிரிக்கவேண்டும்'—இதுதான் மாதவனின் திட்டம். அதுதான் மாணிக்கத்தின் கேலி மொழிகளுக்கு—கிண்டல்களுக்குச் சரியான தண்டனை என்று அவன் நினைத்தான்.

மாதவன், மாணிக்கத்தின் அமங்களகரமான வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். திண்ணையின்மேல் சிறிது நேரம்கூட அவனுல் ஒழுங்காக உட்கார்ந்திருக்க முடியவில்லை. அடிக்கடி எழுந்து வந்து தெருமுனையில் மாணிக்கத்தின் திவ்வியதரிசனம் தெரிகிறதா என்று அடிக்கடி பார்ப்பான். குண்டன் கடை, பக்கத்து வீதியிலிருந்தது. அங்கு போய்வர இவ்வளவு நேரமா என்று யோசித்தான் மாதவன். பிறகு "போய் சாமான் மட்டும் வாங்கிக் கொண்டுவருவதானுல், இவ்வளவு நேரத்திற்குள் வந்துவிட்டிருப்பான்; ஆனுல் மாணிக்கம் குண்டன் தரும் 'அர்ச்சனை'யையும், 'பூசை'யையும் வாங்கிக் கொண்டல்லவா வரவேண்டும்? அதற்குக் கண்டிப்பாகச் சிறிது நேரம் பிடிக்கத்தான் செய்யும்" என்று தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொண்டான்.

சிறிது நேரம் சென்றது. திடீரென்று யாரோ அழும் குரல் கேட்டது. மாதவன் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். "குண்டன் கொடுத்த அறையில் பிறந்த அழுகை இன்னும் இறக்கவில்லை. அந்த அழுகையோடு இங்கு வருவான். அந்தக் காட்சிக்கு 'ஆருத்ரா தரிசனம்' கூட இணையாக முடியாது" என்று எண்ணிக் கொண்டே திண்ணையை விட்டிறங்கி வாசலில் வந்து பார்த்தான். பக்கத்து வீட்டுப் பாலுவின் தம்பி, அண்ணன் கொடுத்த அறையால் அழுதுகொண்டிருந்தான். மாதவனின் மகிழ்ச்சி உடனே மறைந்துவிட்டது.

"சே! இந்தப் பயலா அழுகிருன்" என்று கூறிய வண்ணம் மீண்டும் போய்த்திண்ணையிலமர்ந்தான். சிறிது நேரம் கழிந்தது! மாணிக்கமும் வரவில்லை! அழுகுரலும் கேட்கவில்லை! பொறுமையிழந்தான்

மாதவன். மீண்டும் எழுந்து வெளியில் வந்து பார்த்தான். தெருக்கோடியில் யாரோ ஒருவன் கண்ணைக் கசக்கிக் கொண்டே வந்து கொண்டிருந்தான். அவன் யார் என்று சரியாகப் பார்த்துக்கொள்ளுவதற்கு முன், அவனுக்குப் பின்னல் வந்துகொண்டிருந்தமாட்டுவண்டி, முன்னல் வந்து மறைத்துக்கொண்டுவிட்டது, நந்தனுக்குக் கடவுளைக் காட்டாமல் மறைத்த நந்தியை போல!

"அவன் வெள்ளைச்சட்டை அணிந்து கொண்டிருக்கிருன். மாணிக்கமும் வெள்ளைச் சட்டைதானே அணிந்து கொண்டிருந்தான். ஆமாம்! அவனேதான் இவன். ஹா! மாணிக்கத்தின் கர்வம் பங்கமடைந்துவிட்டது" என்று கூறிக்கொண்டான் மாதவன்.

இதற்குள் வண்டி அவனைத் தாண்டிச் சென்றுவிட்டது. அந்தப் பையன் சிறிது தூரத்தில் வந்து கொண்டிருந்தான். அவன் மாணிக்கமல்ல; மாணிக்கம் வீட்டின் பக்கத்து வீட்டிலிருப்பவன். மாதவனின் முகம் சுருங்கிவிட்டது.

அந்தப் பையன் மாதவனை நெருங்கியதும் நின்ருன். "மாதவா, என் கண்ணில் ஏதாவது விழுந்திருக்கிறதா என்று பார்! அந்தத் தெரு முனையில் ஏதோ கண்ணில் விழுந்தது போலிருந்தது" என்ருன்.

"போடா, கழுதை!" என்று மாதவன் தன் ஏமாற்றத்தாலுண்டான கோபத்தை வார்த்தைகளாகத் தொகுத்து வெளியிட்டான். அவன் மாதவனை ஒரு தினுசாகப் பார்த்துவிட்டுச் சென்ருன்.

மாதவன் இனியும் பொறுத்துக்கொண்டிருக்கத் தயாராயில்லை. பக்கத்துத் தெருவிற்கே போய்ப் பார்த்து விடுவதென்று தீர்மானித்து, மடமடவென்று நடந்தான். சிறிது தூரம்



மிகவும் பொல்லாத வாத்தியார் ஒருவர் குளத்தில் தவறி விழுந்துவிட்டார். அவரை அவ்வழியாகச் சென்ற ஒரு மாணவன் காப்பாற்றிக் கரை சேர்த்துவிட்டான்.

ஆசிரியர்: நீ எனக்குச் செய்த உதவியை மறக்கவே மாட்டேன். நானை எல்லா மாணவர்கள் முன்னிலும் உன்னைப் பாராட்டிப் பேசப் போகிறேன்.

மாணவன்: ஐயையோ! வேண்டவே வேண்டாம் சார். நான் உங்களைக் காப்பாற்றிய விஷயம் எந்த மாணவனுக்குமே தெரியவேண்டாம் சார். தெரிந்தால் என் உயிருக்கே ஆபத்து சார்.

—முத்து

சென்றதும் நின்றான். அவன் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. எதிரே மாணிக்கம் வந்து கொண்டிருந்தான். ஆனால் அவனுடன் அழுகையோ, அலறலோ, கண்ணீரோ, கவலையோ துணையாக வரவில்லை. அதற்குப் பதில் அவன் வாழைப் பழங்களுடன் வந்தான்!

"மாணிக்கம்"—மாதவன் கூப்பிட்டான்.

"என்ன?" என்று கேட்டான் மாணிக்கம்.

"இந்தப் பழங்களைக் குண்டன் கடையில்தானே வாங்கினாய்?"

"ஆமாம்"

"அவன் ஒன்றும் செய்யவில்லையா?"

"செய்யாமலா இருப்பான்?"

"என்ன செய்தான்?"

"இந்தப் பழங்களைத் தந்தான்!"

"வேறொன்றும் செய்யவில்லையா?"

"இல்லை"

"நீ கொடுத்த பணத்தை அவன் நன்றாகப் பார்த்தானா?"

"ஓ! தட்டிக்கூடப் பார்த்தானே!"

"அது செல்லாததென்று அவன் சொல்லவில்லையா?"

"இல்லையே!"

"உண்மையாகவா! அது பாகிஸ்தான் பணமாயிற்றே!"

"அது எனக்குத் தெரியும்!"—மாணிக்கத்தின் இந்தப் பதிலைக் கேட்டு மாதவன் திகைத்தான்.

மாணிக்கம் சிரித்துக் கொண்டே "அண்ணா! நான் உதை வாங்கவேண்டுமென்று பாகிஸ்தான் பணம் கொடுத்தாய். குண்டனின் குணம் எனக்குத் தெரியாதா? நான் எப்படி அதை அவனிடம் கொடுப்பேன்?...மூன்றாவது தெருவில் இருக்கிறாரே முத்தண்ணா, அவர் முன்பு என்னிடமிருந்த ஒரு சிலோன் அரையணாவை வாங்கிக்கொண்டு இரண்டணாக்கொடுத்தார். 'இதேமாதிரிப் பிற நாட்டு நாணயங்கள் கிடைத்தால் கொண்டு வா. நிறையப் பணம் தருகிறேன்' என்றும் அவர் சொல்லியிருந்தார். நீ கொடுத்த பாகிஸ்தான் ஓரணாவை அவரிடம் கொடுத்தேன். அவர் எனக்கு நான்கணாக் கொடுத்தார். ஓரணாவிற்கு வாழைப் பழம் வாங்கிக் கொண்டேன். மீதிப் பணம் பையிலிருக்கிறது. அய்யோ அண்ணா! உன் சூழ்ச்சி மாளிகை தூள் தூளாய்ப் போய் விட்டதே! பாவம்..." என்று கூறிச் சிரித்தான்.

மாதவனின் முகம் அப்போது எப்படியிருந்தது தெரியுமா? அம்மம்மா! என்னால் அதை எழுதவே முடியாது!

199255

Edited, Printed and Published by Rama. Arunachalam
at Shanti Press, 135, Coral Merchant St., Madras-1.
Hon. Editor: AL. Valliappa.

குழந்தை எழுத்தாளர் சங்கச் சிறுகதைப் போட்டியில்

முதல் பரிசு பெற்ற
அழகரசன்
(சேலம்)

இரண்டாம் பரிசு பெற்ற
குளிகன்
(வாழவல்லான்)

மூன்றும் பரிசு பெற்ற
S. சங்கரநாராயணன்
(மதுரை)

Regd. No. M. 5771 POONJOLAI

விஞ்ஞானம் என்றாலே வேப்பங்காய்

என்று நினைக்கின்றனர், பலர்.

ஆனால்,

பல விஞ்ஞான அற்புதங்களை வேடிக்கையாய்க்

கதைபோலக் கூறுகிறது

எங்கள் வெளியீடு!

ராமுவும் நானும்

நா. கி. நாகராசன், M. A. எழுதியது

விலை 1 ரூபாய்

★

பூஞ்சோலை

த. பெ. எண். 1803, சென்னை-1

SHANTI PRESS, MADRAS-1